மக்கள் பேரணி

இந்தியப் புரட்சியின் குரல்

தலித்துகளே! விவசாயிகளே!
ஜனநாயக சக்திகளே!

கயர்லாஞ்சி படுகொலையை கண்டிப்போம்! உண்மையான குற்றவாளிகளை காப்பாற்றத் துடிக்கும் காங்கிரஸ், தேசியவாத காங்கிரஸ், பி.ஜே.பி. மற்றும் சிவசேனா அரசியல் குண்டர்களை கைது செய்யக் கோருவோம்.

கயர்லாஞ்சி படுகொலைகளைக் கண்டித்து வீரஞ்செறிந்த போராட்டத்தை நடத்திய தலித் மக்களுக்கு செவ்வணக்கம்.

விவசாயிகளை படுகொலை செய்துவரும் உலகமயமாக்கல் கொள்கைகளை திரும்பப் பெறவும்; அனைத்து மானியங்களையும் மீண்டும் வழங்கப் போராடுவோம்.

ஆயுதப் போராட்டமல்லாது உடனடித் தேவைகளையோ அல்லது அரசியல் அதிகாரத்தையோ கைப்பற்ற முடியாது. புரட்சிகரவன்முறையைத் தொடங்குவோம்.

படை : 1 நடை : 4 சனவரி - 2007

நன்கொடை- ரூ. 10/=

தனிச்சுற்றுக்கு மட்டும்

வர்க்கப் போராட்டத்தின் தர்க்கம்

சமூகமும் இயற்கையைப் போலவே சில குறிப்பிட்ட விதிகளின் அடிப்படையில் இயங்குகிறது. மனித தலையீட்டிலிருந்து சுதந்திரமாக (புறத்தே) இந்த விதிகள் செயல்படுகின்றன. மனித குலத்தின் நன்மைக்காக (முதலாளித்துவத்தில் - சுரண்டலுக்காக) பயன்படுத்தும் பொருட்டு இயற்கை விஞ்ஞானிகள் இயற்கையை கட்டுப்படுத்தும் விதிகளைப் புரிந்து கொள்வதற்கு முயல்கின்றனர். சமூக விஞ்ஞானிகள் அல்லது மார்க்சியர்கள் சமூகத்தினுடைய பெரும்பகுதியினரின் அதாவது ஒடுக்கப்பட்டவர்களின் - நலன்களுக்காக சமூகத்தை மாற்றியமைக்கும் பொருட்டு சமூகத்தைக் கட்டுப்படுத்தும் இந்த விதிகளைப் புரிந்துகொள்ள விழைகின்றனர். எந்தவொரு மிகச்சிறந்த விஞ்ஞானியாலும் இயற்கையின் விதிகளையோ அல்லது சமூகத்தின் விதிகளையோ வளைக்க முடியாது.

ஒரு விஞ்ஞானியின் சிறப்பு- அவர் இயற்கை விஞ்ஞானியாக இருந்தாலும் சரி; அல்லது சமூக விஞ்ஞானியாக இருந்தாலும் சரி - இந்த விதிகளில் பொதிந்திருக்கின்ற நுணுக்கமான உள்ளியல்புகளை கண்டுபிடிக்கும் திறமையிலும், அந்த கண்டுபிடிப்புகளை மனிதகுலத்தின் நன்மைக்காக இயற்கைக்கும், சமூகத்திற்கும் பொருத்தும் திறமையிலும்தான் அடங்கியிருக்கிறது. அவர்கள் சிறப்பு வாய்ந்த விஞ்ஞானிகளாக இருக்கிறார்களா? இல்லையா? என்பது அவர்கள் உருவாக்குகின்ற முடிவுகள் மூலமாகத்தான் பரிசோதிக்கப்படுமேத் தவிர அருவமான வரையறைகள் மற்றும் வெற்று வாய்ச் சவடால்கள் மூலம் அல்ல.

ஐன்ஸ்டீனும், நியூட்டனும் இன்ன பிறரும் தங்களது கண்டுபிடிப்புகளை நடைமுறையில் நிரூபிக்கத் தவறியிருந்தால் அவர்கள் மாபெரும் இயற்கை விஞ்ஞானிகளாக விளங்கியிருக்க மாட்டார்கள். அவ்வாறே, மார்க்சும், மாவோவும் அல்லது வேறு எவரும் வெறும் அருவமான வரையறைகளை உருவாக்கியிருந்தால் சிறந்த சமூக விஞ்ஞானிகளாக விளங்கியிருக்கமாட்டார்கள். மாறாக, அவர்களது கண்டுபிடிப்புகளின் விளைவுகள் தூலமான நடைமுறை என்னும் சோதனைச் சாலையில் சோதிக்கப்பட்டதன் வாயிலாகத்தான் அவர்கள் சிறந்த சமூக விஞ்ஞானிகளாகத் திகழ்கின்றனர்.

எனவே, மார்க்சாலும், ஏங்கெல்சாலும் கண்டுபிடிக்கப்பட்டது போல சமூகத்தில் நடைபெறுகின்ற வர்க்கப் போராட்டத்துக்கும் கூட அதனுடைய விதிகள் இருக்கின்றன. இந்த விதிகள் பின்னர் லெனின், ஸ்டாலின், மாவோ ஆகியோர்களால் மேலும் செழுமைப்படுத்தப் பட்டன. இந்த விதிகள் வெவ்வேறு நாடுகளில் உள்ள சமூகங்களின் வளர்ச்சி அளவைப் பொருத்தும், அந்த சமூகங்களின் தனிச்சிறப்பான கூறுகளைப் பொருத்தும் வெவ்வேறு வடிவங்களிலும், வகைகளிலும் வெளிப்படுகின்றன. ஆனால் அந்த விதிகள் தாமே, நாட்டுக்கு நாடு வேறுபடுவதில்லை. இந்த விதிகள் வர்க்கப் போராட்டம், உற்பத்திக்கான போராட்டம் மற்றும் விஞ்ஞான ரீதியாக சோதித்தறிதல் ஆகியவற்றின் மூலமாகக் கிடைக்கப்பெறும் அனுபவ அறிவின் வாயிலாகத் தொடர்ந்து செழுமைப்படுத்தப் படும் என்பதிலும், வளர்க்கப்படும் என்பதிலும் எவ்வித சந்தேகமும் இல்லை.

வர்க்கப்போராட்டம், வர்க்க முரண்பாடுகள் மற்றும் வர்க்கப் பகை முரண்பாடுகள் (வர்க்கப் பகைமை) ஆகியவற்றின் தாக்கம் அனைத்துத் தளங்களிலும் செயல்படுகிறது. இவற்றின் தூலமான வெளிப்பாட்டைப் புரிந்துகொள்வதன் வாயிலாகத்தான் மார்க்சிய புரட்சியாளன் மாற்றத்தைக் கொண்டு வருகிறான். எவ்வளவு நல்லெண்ணம் படைத்தவராக இருந்தாலும் ஒரு தாராளவாதியின் (அல்லது திரிபுவாதியின்) பிரச்சனை என்பது இயல்பிலேயே பகைமைத் தன்மை கொண்ட வர்க்க முரண்பாடுகளையும், எதிர் எதிர் வர்க்கங்களுக்கு இடையே நடைபெறும் போராட்டத்தின் கடுமையையும் அவரால் புரிந்து கொள்ள இயலாமையில்தான் இருக்கிறது. ஆகவே அவர்கள் சமூகத்தில் சிறிதளவு கூட மாற்றத்தை ஏற்படுத்தாத ஒட்டு வேலைப்பாட்டுத் தீர்வுகளை முன் வைக்கின்றனர்.

நமது நாட்டை எடுத்துக் கொள்ளுங்கள். இந்தியா ஒரு அரை காலனிய, அரை நிலபிரபுத்துவ நாடு. இங்கு வர்க்கப் போராட்டத்தின் தர்க்கமானது நிலவுகிற அமைப்பைத் தூக்கியெறிந்து, சோசலிசத்தை நோக்கி முன்னேறுவதற்காக ஒரு புதிய ஜனநாயக அமைப்பை நிறுவுவதற்கு ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தையும், நிலப்பிரபுத்துவ எதிர்ப்புப் போராட்டத்தையும் கோருகின்றது. இதற்கு, ஏகாதிபத்தியம் (மற்றும் அவர்களது தரகு அதிகார வர்க்கப் பெரு முதலாளித்துவ அடிவருடிகள்) மற்றும் நிலப்பிரபுத்துவம் ஆகியவற்றின் ஒன்று அல்லது இரண்டு கூறுகளுக்கு எதிராக மட்டுமே அல்லாமல், அவற்றின் ஒவ்வொரு கூறுகளுக்கு எதிராகவும், ஒவ்வொரு வெளிப்பாட்டிற்கும் எதிராகவும் கடுமையான வர்க்கப் போராட்டம் அவசியமாகிறது.

உதாரணத்திற்கு, ஆர்.எஸ்.எஸ்., மகா ராஜாக்கள், மன்னராட்சி முதலியவை இந்திய சமூகத்தில் உள்ள அரை நிலப்பிரபுத்துவக் கட்டமைப்பில் முக்கிய தூண்களாக விளங்கு கின்றன. ஆனால் இவற்றை அரை நிலப்பிரபுத்துவ அமைப்பாகவே இருப்பதாக எடுத்துக்

(தொடர்ச்சி - பக்கம் 35)

படை : 1 நடை : 4
சனவரி 2007

மக்கள் பேரணி

ஆசிரியர் மற்றும் வெளியிடுபவர்
ப. கோவிந்தன் குட்டி
பேரூர் ஹவுஸ், திருப்புனித்துறா,
N.F. எர்ணாக்குளம், கேரளா - 682 301.
செல்பேசி: (0)99472 76692

நன்கொடை ரூ.10/-

அச்சிட்டோர்
சித்ரா பிரிண்டர்ஸ்
63/321, பொருவெளில்,
கண்ணச்சன்தோடு சாலை,
கொச்சி - 18.

தலித்துகள் படுகொலை - மகாராஷ்டிராவை சுட்டெரித்து வரும் தலித் நெருப்பு

மக்கள்தான் வரலாற்றை உருவாக்குகிறார்கள் என்ற மார்க்சின் புகழ்பெற்ற வாசகத்தை மகாராஷ்டிரா மாநிலத்தில் தலித்துகள் நிரூபித்து வருகின்றனர். கயர்லாஞ்சி படுகொலைகளுக்கு நியாயம் கேட்டு கடந்த மூன்று மாதங்களாக தலித்துகள் போராடி வருகின்றனர். அவர்களின் போராட்டத்தை திசை திருப்பவும், தணிக்கவும், சட்டரீதியாக மாற்றி செயலிழக்கச் செய்யவும் அனைத்து திசைகளிலிருந்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அரசுத் தரப்பு கண்துடைப்பு கைதுகளும், இடமாற்றங்கள், தற்காலிக நீக்கம், இழப்பீடு, பணிவாய்ப்பு ஆகிய சாத்வீக வழிகளிலும், மிரட்டல், எச்சரிக்கை, கைதுகள், தடியடி, துப்பாக்கிச் சூடு போன்ற வன்முறை வழிகளிலும் போராட்டத்தை துடைத்தெறிய முயன்றது. அரசியல் கட்சிகள் வெளிப்படையாக தங்கள் உயர்சாதி மனப்பான்மையைக் காட்டிக் கொண்டன. அரசின் நேரடித் தலையீடு எடுபடாத நிலையில் விசுவாசம் மாறாத இளம் தலித் தலைவர்களை முன்னிறுத்தி பின்னின்று இயக்கியது. இத்தகைய தலித் தலைவர்களையும், அவர்களின் வரலாற்றையும் நன்கு அறிந்திருந்த தலித்துகள் அவர்களை ஒரு பொருட்டாக மதிக்காமல் சுயமாகப் போராடினர். தமக்குத்தாமே செயலுத்திகளை வகுத்துக்கொண்டு அவர்கள் போராடிய தன்மை, தேர்ந்தெடுத்துக் கொண்ட வடிவங்கள், இலக்குகள், அடைந்த வெற்றிகள், பின்னடைவுகள் ஆகியவற்றிலிருந்து நாம் ஏராளமான பாடங்களைக் கற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. தலித் தலைவர்கள் அடிக்கடி கூறிவருவது போல மகாராஷ்டிராவில் நடந்து கொண்டிருக்கும் சம்பவங்களைக் கலகம் என்ற சொல்லாடலுக்குள் சுருக்கிவிட முடியாது. அங்கு நடந்து கொண்டிருப்பது சுரண்டப்படும், ஒடுக்கப்படும் மக்களுக்கும் சுரண்டும், ஒடுக்கும் எதிரிக்கும் நடுவில் நடந்து கொண்டிருக்கும் யுத்தமாகும். முயன்றால் நாம் இருபத்தொன்றாம் நூற்றாண்டுப் புரட்சியின் முகவரியை அதில் வாசிக்க முடியும். தலித் மக்களின் மீதான நூற்றாண்டுகால ஒடுக்குமுறைக்கு எதிரான போர்க் குரலை அவதானிக்க முடியாத பௌத்த மத குருமார்களும், நிறுவனங்களும் போராட்டத்தை அமைதி வழியில் தர்ணா, ஆர்ப்பாட்டம் அளவுக்குச் சிறுமைப்படுத்த விளைந்தனர். பூதத்தைப் புட்டியில் அடைக்க முனைந்த அவர்களின் முயற்சியால் புட்டி சிதறிப் போனதுதான் மிச்சம். பௌத்தத்தின் தம்மம் இன்னும் கி.மு.விலிருந்து கி.பி.க்கு மாறவில்லை.

கயர்லாஞ்சி வன்கொடுமை

மகாராஷ்டிரா மாநிலத்தின் பண்டாரா மாவட்டத்திலுள்ள கயர்லாஞ்சி என்ற கிராமத்தில் பையாலால் போட்பிளங்கே

என்ற மகர் சாதியைச் சேர்ந்த தலித் தனது குடும்பத்தினருடன் வசித்து வந்திருக்கிறார். அவர் பௌத்த மதத்தைத் தழுவியவர். கடந்த செப்டம்பர் 29, 2006 அன்று அவருடைய மனைவி சுரேகா, மகன்கள் சுதிர், ரோஷன் மகள் பிரியங்கா ஆகிய நால்வரையும் மிகவும் பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்த பிறசாதியினர் கொடூரமாகச் சித்தரவதை செய்து கொன்றனர். இவ்வன் கொடுமைக்கு முன் விரோதம் காரணமாகச் சொல்லப்பட்டாலும், உண்மையான காரணம் உயர்சாதி ஒடுக்கு முறையே ஆகும். ஆதிக்க சாதியினர் பெண்களை ஏவிவிட்டு சுரேகாவையும், பிரியங்காவையும் இழுத்து வந்து ஊர்ச்சாவடியருகில் மாட்டுவண்டிச் சக்கரத்தோடு கட்டி வைத்தனர். இரு பெண்களின் ஆடைகளும் வழியிலேயே கிழித்துக் குதறப்பட்டன. கையாலும், தடியாலும் பிற ஆயுதங்களாலும் இருவரும் கடுமையாகத் தாக்கப்பட்டனர். காப்பாற்ற ஓடிவந்த சுதிரையும், கண்பார்வையற்ற ரோஷனையும் கண்மூடித்தனமாகத் தாக்கினர். கால்பந்தை உதைப்பது போல் இருவரையும் உதைத்தனர். தலையில் அடித்தனர். பின்னர் இருவரையும் தங்களது தாயுடனும் சகோதரியுடனும் உடலுறவு கொள்ள வற்புறுத்தினர். அவர்கள் மறுக்கவே நால்வரின் பிறப்புறுப்புகளும், பாலுறுப்புகளும் சிதைக்கப்பட்டன. ஒட்டுமொத்த கிராமமும் பார்த்துக் கொண்டிருக்க கிட்டத்தட்ட இரண்டு மணிநேரம் அவ்வதை படலம் நீடித்தது. அதன் உச்சகட்டமாக நால்வரும் உயிரைவிட்டனர். பிறகு நால்வரின் உடல்களும் கிராமத்திலிருந்து இரண்டு கி.மீ. தொலைவிலுள்ள வாய்க்காலில் தூக்கியெறியப்பட்டன. சம்பவம் நடந்த பொழுது எஞ்சியிருந்த இரண்டு தலித் குடும்பங்கள் மரண பயத்தோடு தங்கள் வீட்டிற்குள்ளிருந்தே இறந்தவர்களின் கூக்குரலை கேட்டுக் கொண்டிருந்துள்ளனர். வெளியில் சென்றுவிட்டு திரும்பி வந்து கொண்டிருந்த பையாலால் கிராமத்துக்கு அருகில் வரும்போதே அசம்பாவிதத்தை உணர்ந்து மறைந்தபடி தமது குடும்பத்தினருக்கு நடந்த கொடுமைகள் அனைத்தையும் மௌனசாட்சியாக பார்த்து பேதலித்துப்போய் தப்பி ஓடி அருகிலிருந்த கிராமங்களுக்குச் சென்று நடந்த பயங்கரத்தை கூறியிருக்கிறார்.

படுகொலையின் பின்னணி

இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கும் நிலபிரபுத்துவத்தின் விஷக் கொடுக்குகள் தீண்டியதால்தான் தலித்துகள் நால்வரும் மாண்டு போயுள்ளனர். சாதி வெறி, நிலத்தின் மீதான அடங்காப்பசி, வளர்ச்சியின்மை ஆகியவற்றில் உயிர்த்திருக்கும் நிலபிரபுத்துவம் ஏதோ ஒரு தருணத்தில், முகாந்திரத்தில் தனது விஷத்தைக் கக்கி வருகிறது. ஆதிக்கசாதியினருக்கு ஓய்வு கிடைக்கும் பொழுதெல்லாம் வேட்டையாடப்படும் விலங்காக தலித் மக்கள் ஆக்கப்பட்டுள்ளனர். கயர்லாஞ்சி வன்கொடுமை அதற்கு சமீபத்திய உதாரணமாகும்.

தனக்கு வழங்கப்பட்ட ஐந்து ஏக்கர் நிலத்தில் உழைத்து வாழ்வதற்காக பையாலால் போட்மாங்கே 1998-ஆம் ஆண்டு கயர்லாஞ்சிக்கு வந்தார். தங்கள் குழந்தைகள் மூவரையும் நன்கு படிக்க வைக்க வேண்டும் என்ற ஆசையில் கடுமையாக உழைத்தார். மகன் சுதிரை ஒரு வழியாக பட்டதாரி ஆக்கினார். மகள் பிரியங்கா 12-ஆம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தாள். ரோஷன் கண்பார்வையற்றவர் என்றாலும் படித்துக் கொண்டிருந்தார். பிரியங்கா 10-ஆம் வகுப்பில் திறமையான மாணவியாகத் திகழ்ந்ததோடு என்.சி.சி. பயிற்சியும் எடுத்து வந்தார். கயர்லாஞ்சியில் பள்ளியிறுதி வகுப்பை எட்டிய முதல் பெண் பிரியங்காதான். சுரேகா குடும்பத்தின் அச்சாணியாகத் திகழ்ந்து வந்தார். ஒரு தலித் இங்ஙனம் முன்னேறிக் கொண்டிருப்பது பிற ஆதிக்க சாதியினரிடையே வயிற்றெரிச்சலைத் தூண்டியுள்ளது. அது பகிரங்கமாக வெளிப்படுவதற்கான சந்தர்ப்பத்தை பையாலாலின் அண்டை வீட்டுக்காரரான ரவிசங்கர் திலகர் என்ற ஆதிக்கசாதியைச் சேர்ந்தவன் உண்டாக்கிக் கொடுத்துள்ளான்.

ரவிசங்கர் திலகரின் நிலத்திற்குச் செல்ல வேண்டுமெனில் பையலால் நிலத்தின் வழியாகத்தான் செல்ல வேண்டும். பையாலாலும் அதனை அனுமதித்தே வந்துள்ளார். ஆனால் அவ்வழியாக டிராக்டரை ஓட்டிச் செல்ல ரவிசங்கர் முயன்றதை அடுத்து சச்சரவு தொடங்கியுள்ளது. 2002-ல் அது காவல்துறை வரை எடுத்துச் செல்லப்பட்டு அங்கு சமரசம் பேசப்பட்டு பையலால் சுமார் 15 அடி நிலத்தை பாதையாக விட்டுக் கொடுக்கிறார். இச்சமரச முயற்சியில் முக்கியப்பங்கு வகித்தவர் ஊர்த்தலையாரியும் தலித்துமான சித்தார்த் தாஜ்பையா என்பவர் ஆவார். அவருக்கு சொந்தமான நிலத்தில் உழைத்து வாழ்க்கையைச் சிரமமின்றி ஓட்டிக் கொண்டிருந்தார். அவருடைய நிலத்தில் ஆதிக்க சாதியைச் சேர்ந்த பெண்களும் பல சமயங்களில் வேலை செய்வதுண்டு. கயர்லாஞ்சியில் ஆதிக்க சாதியினராக திகழ்ந்தவர்கள் காளர், பவார், குன்பி போன்ற மிகவும் பின்தங்கிய சாதியினரே ஆவர்.

பையலால் மற்றும் சித்தார்த் ஆகிய இரண்டு தலித் குடும்பங்களின் வளர்ச்சி கிளப்பிய பொறாமைத் தீ நீருபூத்த நெருப்பாய் ஆதிக்க சாதியினர் மத்தியில் கனன்று வந்துள்ளது. அந்தக் கனலின் வெப்பத்தை அவ்விரு தலித் குடும்பங்களும் அனுபவிக்காத நாளில்லை. 800 பேர் அடங்கிய அக்கிராமத்தில் 125 குடும்பங்கள் வசித்து வந்தனர். அதில் தலித் குடும்பங்கள் மூன்றே மூன்றுதான். கடந்த செப்டம்பர் 03, 2006- அன்று சித்தார்த் தாஜ்பையா கூலித் தகராறு காரணமாக ஆதிக்கச் சாதியினரின் தாக்குதலுக்கு ஆளானர். அந்தால்கன் காவல்நிலையத்தில் புகார் கொடுக்கச் சென்றவரை போலீசார் புகாரை ஏற்கமறுத்து துரத்தியுள்ளனர். பின்னர் அவர் காம்பீ டவுன் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்துள்ளார். அங்கிருந்த மருத்துவர்களின் ஆலோசனைப்படி அங்குள்ள காவல்நிலையத்தில்

புகார் கொடுத்துள்ளார். அங்கும் உடனடியாக புகார் ஏற்றுக் கொள்ளப்படாது சில தினங்கள் இழுத்தடித்த பிறகே புகாரைப் பதிவு செய்துள்ளனர். அவ்வழக்கில் பையாலாலின் மனைவி சுரேகா சாட்சியாக முன்வந்து குற்றத்தில் ஈடுபட்டிருந்த சில கிராமத்தவர்களை அடையாளம் காட்டியுள்ளார். குற்றவாளிகள் அனை வரும் கைது செய்யப்பட்ட சில தினங்களிலேயே செப்டம்பர் 29-ல் ஜாமீனில் வெளியே வந்துவிட்டனர். உடனே அவர்கள் டிராக்டர்களை எடுத்துக்கொண்டு சித்தார்த் வீட்டிற்குச் சென்றுள்ளனர். அங்கு அவர் இல்லாமல் போகவே அவர்களின் வெஞ்சினம் சுரேகாவின் மீது திருப்பியது. பிறகு நடந்த வன்முறை வெறியாட்டத்தில் நான்கு தலித் உயிர்கள் பலி வாங்கப் பட்டன. எண்ணூறு மக்களில் அச்சம்பவத்தை விரும்பா தவர்களும் சிலர் இருந்திருக்கக்கூடும். எனினும் கொழுந்து விட்டெரிந்த சாதிவெறிக்கு முன்னால் அவர்களின் உணர்வுகள் பொசுங்கிப் போயிருக்கக் கூடும்.

ஆளும் வர்க்கங்களின் தலித் விரோதப் போக்கு

பையலால் மூலம் தெரியவந்த கொடூரத்தை யடுத்து காவல்துறையை கயர்லாஞ்சிக்கு வரவழைக்க மேற் கொள்ளப்பட்ட பல முயற்சிகள் பலனளிக்கவில்லை. படுகொலைகள் குறித்து காவல்துறையினர் கிஞ்சித்தும் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. வாய்க்காலில் வீசப்பட்ட உடல்கள் ஒவ்வொன்றாகக் கிடைக்கத் தொடங்கியதையடுத்தே காவல்துறை மெதுவாகக் களத்தில் இறங்கியது. கிடைத்த உடல்கள் உருக் குலைந்து போயிருந்ததால் அவை பையாலாலின் குடும்பத்தினர் அல்ல என்று காவல்துறையும், அவர்கள் அடித்துக் கொல்லப்படவில்லை என்று மருத்துவத் துறையும், நடந்து முடிந்த சம்பவத்திற்கு சாதி மோதல் காரணமல்ல என்று அரசுத் தரப்பும் மாற்றி மாற்றிப் பேசி மக்களைக் குழப்பினர். உண்மையான குற்றவாளி களைக் கண்டுபிடித்து தண்டிக்காமல் குற்றத்தை மறைக்கவும், குற்றவாளிகளைக் காப்பாற்றவுமே அவர்கள் அனைவரும் முயன்றுள்ளனர். தலித் மக்களின் இடையறாத போராட்டத்திற்குப் பின்னர் உண்மைகள் ஒவ்வொன்றாக வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றன. காவல்துறையினர், மருத்துவர்கள் எனச் சில கண் துடைப்புக் கைதுகளும் நடத்தப் பட்டுள்ளன. குற்றத்தை தடுக்கக்கூடிய சக்தி கொண்டவர்களாக இருந்தும் வெறுமனே வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்ததன் மூலம் குற்றத்திற்கு உடந்தையாக இருந்த காரணத் திற்காக ஊர்ப்பெரிய மனிதர்களும், பஞ்சாயத்து தலைவரும் பின்னர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இறந்தவர்களின் மீதான வன்கொடுமையை நியாயப் படுத்தும் வகையில் சுரேகாவின் ஒழுக்கம் சந்தேகிக்கப் பட்டது. சுரேகாவிற்கும் சித்தார்த்துக்கும் தவறான உறவு நிலவி வந்ததாகவும் அதனை பிற பெண்கள் தட்டிக் கேட்டதையடுத்து மேற்படி அசம்பாவிதம் நிகழ்ந்து விட்டதாகவும் பல கட்டுக்கதைகளை பரப்பி குற்றத்தின் தீவிரத் தன்மையைக் குறைக்கப்பார்த்தனர். ஆனால் உண்மை வேறு. சுரேகா ஒரு தலித்தாக இருந்து கொண்டு அதுவும் பெண்ணாக இருந்து கொண்டு ஆதிக்கச்சாதி ஆண்களுக்கு எதிராக சாட்சி கூறியிருந்தது அவர்களின் உயர்சாதி ஆணவத்தையும், ஆணாதிக்க வெறியையும் ஒருங்கே கிளப்பிவிட்டதன் விளைவாகத் தான் சுரேகா அவ்வளவு கொடூரமாக தண்டிக்கப் பட்டுள்ளார். அதன் தொடர்ச்சியாகத்தான் சுரேகாவின் ஒழுக்கம் கேள்விக்குள்ளாகியுள்ளது. சாகும் தருவா யிலும் உறுதியாக இருந்து சுரேகா ஆதிக்கசாதி ஆண் களை பதட்டத்திற்குள்ளாக்கியுள்ளது இதிலிருந்து தெரிகிறது.

கைது செய்யப்பட்டுள்ள காவல்துறை, மருத்துவத் துறை தொழிலாளர்கள் பலரும் தலித்துகள் என்பதும் அடிமட்ட ஊழியர்கள் என்பதும் அரசின் சாதிய உணர் விற்கு இன்னொரு அடையாளமாகும். இன்னும் உண்மை யான குற்றவாளிகளும், அவர்களை காப்பாற்றிக் கொண்டிருக்கும் பி.ஜே.பி., காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகளின் அரசியல்வாதிகளும் கைது செய்யப்படாது சுதந்திரமாக உலவி வருகின்றனர்.

தலித் மக்கள் மேற்கொண்ட களப் போராட்டங்கள்

தலித் மக்கள் மேற்கொண்ட முதல் போராட்டம் நவம்பர் 01, 2006 அன்று நடந்தது. சுமார் ஆயிரம் பேர் அதில் கலந்துகொண்டனர். சம்ருதா பாதமகிளா சங்காதனா என்ற தலித் பெண்கள் முன்னணியினர் போராட்டத்தை நடத்தினர். நவம்பர் 06, 2006-க்குள் போராட்டம் நாக்பூர் முழுவதையும் பற்றிக் கொண்டது. போராட்டம் தலித்துகளை மட்டுமல்லாது, புத்த மத நிறுவனங்கள், பிற சாதி ஏழை மக்கள், நடுத்தர மக்கள் என அனைவரையும் தனக்குள் இழுத்துக்கொண்டது. இருபால் இளவயதினரும் வீதிக்கு வந்து போராடத் தொடங்கினர். அரசுச் சின்னங்கள், காவல் நிலையங் கள், வாகனங்கள் என்று குறிவைத்து தாக்கத் தொடங் கினர். சில அரசியல்வாதிகளின் வீடுகளையும் தாக் கினர். உடனே அரசு தரப்பு, மக்கள் வன்முறைக்கு பதில் வன்முறையை களத்தில் இறக்கிவிட்டது. தடியடிகள், கண்ணீர்ப் புகைக் குண்டுகள், துப்பாக்கிச் சூடுகள், கைதுகள் என காவல்துறை ஒடுக்குமுறையைத் தொடங் கின. மறுபுறம் இளைஞர்கள் தெருமுனைப் பிரச் சாரங்கள், தெரு நாடகங்கள், போஸ்டர்கள், துண்டறிக் கைகள், பிரசுரங்கள் எனப்பல வடிவங்களில் போராட்டக் கனலைப் பரப்பினர். மக்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளாது அந்நியப்பட்டுப்போன தலித் தலைவர் களின் சமரச முயற்சிகளையும், வேகத் தடைகளையும் தலித் மக்கள் தாண்டிச்சென்று தலைவர்களே இல்லாமல் போராட்டத்தை எடுத்துச் சென்றனர். சமயோசிதப் புத்தி, அச்சமின்மை, சுயமுனைப்பு, சுயதலைமை எனப் புதிய போராட்ட வரலாற்றையே படைத்தனர். உற்சாக

போதையில் இதை உளறுவதாக ஒருவரும் கருதக் கூடாது. உண்மை இங்கு கூறியதைவிட ஒரு படி கூடு தலாகவே இருக்க முடியும். நவம்பர் 12-ந் தேதி பேரணிக்குத் திரண்ட மக்களை ஊர்வலம் நடத்த காவல்துறை அனுமதிக்கவில்லை. பேரணிக்குத் திரண்ட பெண்களை கைது செய்து சிறையிலடைத்தது. கயர்லாஞ்சி நோக்கிச் செல்லும் பாதைகள் கடுமை யாகக் காவல் காக்கப்பட்டன. கயர்லாஞ்சி கிராமம் காவல்துறை வளையத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டது. அக்கிராமத்திற்குள் நுழையும் மூன்று பாதைகளிலும் ஆயுதமேந்திய காவலர்கள் நிறுத்தி வைக்கப்பட்டனர்.

கயர்லாஞ்சிக்கு வெளியே போராட்டம் பிற மாவட்டங்களுக்கும், பல முக்கிய நகரங்களுக்கும் பரவத் தொடங்கியது. மகாராஷ்டிராவின் மூலை முடுக்கெல்லாம் தலித் மக்களின் குரலை எதிரொ லித்துக் கொண்டிருந்தது. நவம்பர் 08, 2006-அன்று மந்த்ராலயாவை நோக்கிச் சென்ற ஒரு பேரணியைச் சேர்ந்த ஐம்பதுக்கும் மேற்பட்ட பெண்கள் அங்கு நடந்து கொண்டிருந்த கேபினேட் கூட்டத்தில் முதல்வர் பேசிக் கொண்டிருக்கையில் பலத்த பாதுகாப்பையும் தாண்டிச் சென்று அரசு எதிர்ப்பு முழக்கங்களை எழுப்பினர். அவர்களுள் ஊர்மிளா பவார் என்ற தலித் அறிவுஜீவியும் ஒருவராவார். பண்டாரா மற்றும் கோண்டியா மாவட்டங்களின் அனைத்துப் பகுதி களுக்கும், பந்தாரக்கவ்டா, யவத்மால் ஆகிய பகுதி களுக்கும் போராட்ட அனல் பரவியது. நவம்பர் 13, 2006-ல் சந்தர்பூரில் நடைபெற்ற பேரணி அழைப்பை ஏற்று 20,000 தலித்துகள் மற்றும் பிறசாதி உழைக்கும் மக்கள் திரண்டனர். மாபெரும் அப்பேரணி மீது காவல்துறை தடியடியும், துப்பாக்கிச்சூடும் நடத்தி தினேஷ் வாங்கடே என்ற சிறுவனின் உயிரைப் பறித்தது. அச்சிறுவனின் மரணம் ஒட்டுமொத்த மகாராஷ் டிராவையும் குலுக்கியது. மாநில முதல்வர் மற்றும் உள்துறை மந்திரி ஆகியோர் சிறுவனின் மரணத் திற்கும், பிற அசம்பாவிதங்களுக்கும் பொறுப்பேற்று பதவி விலக வேண்டுமென்று தலித் மக்கள் வலியுறுத் தினர். பூனேயில் நடைபெற்ற காவல்துறை நிகழ்ச்சி ஒன்றில் மாநில உள்துறை மந்திரி; அமராவதி பேரணி யில் கலந்துகொண்ட தலித்துகள், பாசிஸ்டுகள் போன்று நடந்து கொண்டதாகப் பேசிய விஷயத்தைப் பத்திரிகைகள் வாயிலாகத் தெரிந்து கொண்ட தலித்து களின் ஒட்டுமொத்த கோபத்திற்கு இலக்கானார்.

சோலாப்பூரும் தலித்துகளின் போர்க்குரலால் நடுங்கியது. காவல்துறை நான்கு நாட்கள் ஊரடங்கு உத்தரவு போட்டு நிலைமையைச் சமாளிக்க வேண்டி யிருந்தது. அவுரங்காபாத்திலும் மக்கள் போராட்டம் தீவிரம் கொண்டது. தடியடி, துப்பாக்கிச்சூடு, ஊரடங்கு உத்தரவு என கலவரச் சூழ்நிலை பல தினங்கள் நீடித்தன. பூனாவிலும் ஊரடங்கு உத்தரவு நான்கு நாட்களுக்கு நீடித்தது.

அமராவதி சம்பவம் மும்பை பெருநகரையும் பாதித்தது. செம்பூரில் நடந்த மிகப்பெரிய பேரணி அதன் தொடக்கமாக அமைந்தது. அம்பர்நாத், உல்லாஸ் நகர், கர்ஜத், கல்யாண், பீவாண்டி, பத்லாபூர், நவி மும்பை என அடுத்தடுத்து பல பகுதிகளுக்கு போராட்டம் காட்டுத்தீயாகப் பரவியது. கிட்டத்தட்ட ஒரு வாரம் மும்பைக்குள்ளும், மும்பையைச் சுற்றியும் போராட்டத் தீ சுழன்றடித்தது. மக்கள் பல மாதிரி தங்களை அணி சேர்த்துக்கொண்டு பல வடிவங்களில் போராடினர். ஆர்ப்பாட்டம், பேரணி, பந்த் ஆகியன பெரு நகர மக்களின் கேளாச் செவிகளையும், பாரா விழிகளையும் ஊடுருவிச் சென்றன. நான்பட், பார்பானி மற்றும் பலி நகரங்களும் தலித் மக்களின் உரிமைக் குரல்களைப் பதிவு செய்தன.

பல கிளைகளாகப் பிளவுண்டு கிடந்த குடியரசு கட்சியினரை சதாசர்வ காலமும் தலைமைச் சண்டைக் கும், பதவிப் போராட்டத்திற்கும் முந்திக் கொண்டி ருந்த தலித் தலைவர்களின் பிடியிலிருந்து போராட்ட அளவானது யதார்த்த உலகிற்கு கொண்டுவர உதவியது. அவர்கள் தலைவர்களையும் புறக்கணித்துவிட்டு சாத்ரா மற்றும் சாங்கிலி ஆகிய நகரங்களில் போராட்டத்தை நடத்த முயன்றனர். சட்டமன்ற குளிர்காலக் கூட்டத் தொடர் டிசம்பர் 04, 2006-ல் தொடங்கப்பட இருந்ததை அடுத்து அவர்கள் விதான்சபாவிற்கு ஊர்வலமாக செல்லத் திட்டமிட்டனர்.

அம்பேத்கர் புத்தமதம் தழுவிய 50வது ஆண்டு விழாக் கொண்டாட்டங்கள் தேசம் முழுவதும் தலித்து களாலும், புத்தமத குருக்களாலும், புத்த மத நிறுவனங் களாலும் கடைபிடிக்கப்பட்டு வருகின்றன. மகா ராஷ்டிரா பௌத்தர்களில், பெரும்பாலோர் தலித்து களே. புத்த மத குருக்களாலும், புத்த மத நிறுவனங் களாலும் கூட தலித்துகளின் போராட்டத்தைத் தணிக்க முடியவில்லை. மனித உணர்வுகளைப் புறக்கணிக்கும் தனி மனிதர்களை மட்டுமல்ல, இயக்கங்கள், கட்சிகள், மதங்கள் என அனைத்தையும் வரலாறு புறக்கணித்து விடும் என்ற உண்மை இங்கு பளிச்சிடுகிறது. ஆயினும் சில இடங்களில் மக்களின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு அவர்களின் போராட்டத்தோடு இரண்டறக் கலந்ததன் விளைவாகப் பல புத்த சந்நியாசிகள் அரசு ஒடுக்குமுறைக்கு ஆளாகியுள்ளனர்.

தொடக்கத்திலிருந்தே காவல்துறை உயரதிகாரிகள், தலித் மக்களின் போராட்டத்தின் தூண்டுகோலாக நக்சலைட்டுகள் உள்ளதாக பொய்ப் பிரச்சாரம் செய்து வந்தனர். தங்களுக்கு எதிராக உயரும் ஒவ்வொரு கரத்தையும் நக்சலைட்களின் கரமாக அதிகார வர்க்கம் கருதுவது அது மாவோயிஸ்ட்டுகளைக் கண்டு அடி முதல் நுனி வரை நடுங்கிக் கொண்டிருப்பதைக் காட்டு கிறது. ஆனால் தலித்துகளோ தங்களை நக்சலைட்டு களோடு இணைத்துக் கூறப்பட்டு வரும் அரசு தரப்புக் குற்றச்சாட்டை புறக்கணித்து விட்டு தொடர்ந்து போராட்டத்தை நடத்திச் சென்றனர்.

நவம்பர் 30, 2006- அன்று நாக்பூரில் நடந்த அம்பேத்கர் சிலையுடைப்பு சம்பவத்தையடுத்து சற்றுத் தோய்ந்திருந்த போராட்டம் மீண்டும் தீப்பற்றிக் கொண்டது. பூனேயைச் சுற்றியுள்ள பகுதிகள் ஸ்தம்பித்தன. பிம்பில சின்சிவாத், டபோடி, காத்கி போன்ற பகுதிகளில் தலித்துகளின் குரல்கள் சினத்தைக் காட்டின. பூனே- மும்பைக்கு இடையிலான தொடர்பு முற்றிலும் நின்றுபோனது. அனைத்துத் தொழில் நிறுவனங்களும் செயலிழந்தன. மும்பை - தானே பகுதிகளும் ஸ்தம்பித்தன. 200 அரசுப் பேருந்துகள் அடித்து நொறுக்கப்பட்டன. பூனே- மும்பை இடையிலான டெக்கான் - க்யூன் ரயில் உல்லாஸ் நகர் அருகில் சிறை வைக்கப்பட்டு தீயிட்டுக் கொளுத்தப்பட்டது. தீயிடப்பட்டதற்கு முன்பு பயணிகளும், எஞ்சின் டிரைவரும் பாதுகாப்பாக அப்புறப்படுத்தப்பட்டனர். பந்தாரா, நான்டெம், ஒஸ்மாபாத் மற்றும் பூனேயில் ஊரடங்கு உத்தரவு போடப்பட்டது. அவுரங்காபாத்தில் தலித்துகளுக்கும், காவல் துறைக்கும் இடையே நடந்த மோதலில் துப்பாக்கிகள் வெடித்தன. நாசிக்கில் 100 பேருந்துகள் சேதமடைந்தன. தலித் ஒருவர் உயர் சாதியினரால் கல்வீசித் தாக்கப்பட்டு உயிரிழந்தார். பூனாவிலும் கிட்டத்தட்ட நூறு பேருந்துகள் உடைக்கப்பட்டன. சுருக்கமாக மகாராஷ்டிரா தலித்துகளின் போர்க்களமாகக் காட்சியளித்தது.

அரசியல் கட்சிகளின் எதிர்வினைகள்

பி.ஜே.பி., சிவசேனா ஆகிய மதவாத கட்சிகளும் காங்கிரஸ், தேசியவாத காங்கிரஸ் போன்ற தரகு முதலாளிக் கட்சிகளும் வெளிப்படையான தலித் விரோதப் போக்கைக் கடைபிடித்தன. பிற சில்லுண்டி கட்சிகளும், தலித் ஆதரவை உதட்டளவில் கடைபிடித்தன. ஆளும் வர்க்கங்களோடு தங்களை அடையாளப்படுத்திக் கொண்டுவரும் தலித் தலைவர்கள் தலித்துகளுக்கு கடிவாளம் போட்டுக் கட்டுப்படுத்தவே முனைந்தனர். தலைவர்கள் இன்றியே தலித் மக்கள் போராட்டக் களம் கண்டனர். மக்களின் வேகத்திற்கும், உணர்ச்சிகளுக்கும் ஈடுகொடுக்கும் தலித் இயக்கங்கள் எதுவும் காணப்படவில்லை. தலைவர்கள் எவரும் இல்லாததால் அரசு தரப்பு எவரை மயக்கி போராட்டத்தை தணிப்பது என்று தெரியாது விழிபிதுங்கியது. தங்களின் நம்பகத் தன்மையை தலித்துகளுக்கு காட்ட விரும்பி சிறை சென்ற சில தலித் தலைவர்களும் உண்டு. ஆயினும் அவர்கள் விதிவிலக்குகள். போராட்ட காலம் முழுவதும் தலித்துகள் தலைமை இன்றியே போராடினர் எனினும் அவர்கள் மாற்றுத் தலைமை குறித்தத் தேவையை உணர்ந்தே இருந்தனர்.

அத்தகைய தகுதி மாவோயிஸ்ட்டுகளைத் தவிர வேறு எந்த ஓட்டுப்பொறுக்கி கட்சிகளுக்கும் இல்லை. உதாரணமாக மாவோயிஸ்ட்டுகள் அழைப்பு விடுத்துள்ள டிசம்பர் 08, 2006 பந்த்-ல் கயர்லாஞ்சி படுகொலையை முதன்மைப்படுத்தியும் விதர்பா விவசாயிகளின் தற்கொலை சம்பவங்களோடு இணைத்தும் இருந்தனர். நாக்பூர், யாவத்மால் மாவட்டங்கள், பண்டாரா, கஜ்ரோலி, சந்தர்பூர் போன்ற பகுதிகளில் பந்த் முழு வெற்றியடைந்ததைப் பத்திரிகைகள் தெரிவித்தன. கயர்லாஞ்சிப் படுகொலை தலித்துகளிடையே ஒருமைப்பாட்டு உணர்வையும், போராட்ட உணர்வையும் கிளறிவிட்டுள்ளது. ஆதிக்க சாதியினர் இனி அது போன்றோர் வன்கொடுமையை செய்யத் துணிவது நெருப்போடு விளையாடுவதற்குச் சமம் என்ற அனுபவத்தை தலித்துகளின் போராட்டம் ஏற்படுத்தியுள்ளது. சாதியக் கருத்தியலின் பிறப்பிடமாகவும், தீண்டாமைக் கொடுமை வாழும் இடமாகவும், நில பிரபுத்துவம் திகழ்ந்தது. அந்நிலப்பிரபுத்துவத்தையும் அதனோடு கைகோர்த்துக் கொண்டு அனைத்து உழைக்கும் மக்களையும் ஒடுக்கிவிடும் சுதேசி மற்றும் பன்னாட்டு முதலாளித்துவத்தையும் ஒழிக்கப் போராடிவரும் மாவோயிஸ்ட்டுகளோடு தலித்துகள் இணைவது வரலாறு அவர்களுக்கு விதித்துள்ள கடமையாகும்.

நான் மாவோயிஸ்டாக மாற விரும்புகிறேன்

நமது நாட்டின் முன்னாள் பிரதமர் தனது கருத்துக்களைப் பதிவு செய்யும்போது, இன்றைய காலகட்டத்தில் நிலவும் பிரச்சனைகளையும், சூழல்களையும் பார்க்கும்போது தான் ஒரு மாவோயிஸ்டாக மாற விரும்புவதாகவும், தனது சரிந்து வரும் உடல்நிலை தான் தன்னை மாவோயிஸ்ட்டுகளிடம் இணைவதிலிருந்து தடுப்பதாகவும் கூறியிருக்கிறார்.

மேலும் அவர் : **நான் இன்றைய இளைஞர்களைப் பார்த்துக் கேட்கிறேன். மாவோயிஸ்ட்டுகளுடன் சேருவதிலிருந்து உங்களை எது தடுக்கிறது?**

– வி.பி. சிங்

"அவர்களில் பலர் உயர்ந்த இலட்சியவாதிகளாக இருக்கிறார்கள் என்று கூறுவதில் எனக்கு எந்த தயக்கமும் இல்லை. அவர்கள் ஒரு இலட்சியத்திற்காகப் போராடிக் கொண்டிருப்பதாக உறுதியாக நம்புகிறார்கள். பாராளுமன்றத்திற்குள்ளும், சட்ட மன்றங்களுக்குள்ளும் ஊடுருவி, அமைச்சர்களாகவும் மாறியுள்ள கிரிமினல்களை (குற்றவாளிகளை) விட இவர்கள் எவ்வளவோ சிறப்பானவர்கள்".

– பிரகாஷ் சிங் ஐ.பி.எஸ்.
(எல்லைப் பாதுகாப்புப் படையின் முன்னாள் இயக்குனர்)

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி(மாவோயிஸ்ட்) வெளியிட்ட பத்திரிகை அறிக்கை

★ கயர்லாஞ்சிக் கொடுமையை கண்டித்துப் போராடிய தலித் மக்களின் போராட்டத்தை ஒடுக்க அரசு வன்முறை கட்டவிழ்ப்பு!

★ விதர்பா விவசாயிகளின் மரணம் தற்கொலையல்ல; ஏகாதிபத்திய அடிவருடி ஆளும் வர்க்கங்கள் நிகழ்த்திவரும் படுகொலைகள்!!

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மாவோயிஸ்ட்)-யின் மகாராஷ்டிரா மாநிலக்குழு மற்றும் தண்ட காரண்யா சிறப்பு மண்டலக் குழு ஆகியன இணைந்து கீழ்கண்ட சம்பவங்களைக் கண்டித்து வரும் திசம்பர் 8 - அன்று நிகழ்த்த உள்ள மாநிலம் தழுவிய பந்த்-ல் பங்கேற்குமாறு தலித்துகள், விவசாயிகள் மற்றும் அனைத்து ஜனநாயக சக்திகளையும் அழைக்கிறது.

கயர்லாஞ்சியில் தலித்துகள் படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்தும், உண்மைக் குற்றவாளிகளை கைது செய்யக் கோரியும், உண்மைக் குற்றவாளிகளைக் காப்பாற்றத் துடிக்கும் ஆளும் வர்க்கங்களைக் கண்டித்தும், தலித் மக்கள் நடத்திய ஊர்வலங்களில் வன்முறை வெறியாட்டம் ஆடிய காவல்துறையைக் கண்டித்தும்...

விதர்பா விவசாயிகளின் தற்கொலைக்குக் காரணமான ஏகாதிபத்திய உலகமயமாக்கல் கொள்கைகளை நடைமுறைப்படுத்தி வரும் ஆளும் வர்க்கங்களின் குருதி குடிக்கும் காட்டேரித்தனத்தை கண்டித்தும்... டிசம்பர் - 8, 2006-ன் பின்னணி இதுதான்:

மேற்குறிப்பிட்ட இரண்டு நிகழ்வுகளும் இந்திய ஆளும் வர்க்கங்களின் உண்மையான பரிமாணத்தைக் காட்டுவதாக உள்ளன. இன்னும் செத்து மடியாது ஜீவித்திருக்கும் நிலப்பிரபுத்துவம், ஏகாதிபத்தியங்களுக்கு நாட்டைக் காட்டிக் கொடுக்கும் துரோகத்தனம். தீமை கண்டு போராடும் மக்களின் மீது போர் தொடுக்கும் அரசு வன்முறை எந்திரங்கள். 21-ஆம் நூற்றாண்டிலும் இதுதான் இந்தியாவின் நிலை.

59-ஆண்டு கால சுதந்திர இந்திய வரலாற்றில் தலித் மக்கள் எதிர்கொண்ட கொடுமைகள் கணக்கற்றவை. அவற்றுள் கயர்லாஞ்சிப் படுகொலைகள் காலத்தால் மட்டும் புதிதல்ல; தலித் மக்கள் அக்கொடுமையைத் தொடர்ந்து எதிரிகளை எதிர்கொண்டு வரும் நிகழ்வுகளும் புதியது. நமது அரசியல்வாதிகளும் ஆளும் வர்க்கங்களும் வாய்கிழியப் பேசிவரும் ஜனநாயகத்தின் உண்மை நிலையை ஒடுக்கப்படும் மக்களுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளது கயர்லாஞ்சி சம்பவம், மேற்படி வன்கொடுமைக்கு இந்த ஜனநாயகம் எவ்வளவு விரைவாக நீதி வழங்க ஓடோடி வந்தது என்பதைக் கண்டாலே அதன் அருமைபெருமையெல்லாம் அம்பலமாகிவிடும். காவல்துறை, மருத்துவமனை வட்டாரங்கள், அதிகார வர்க்கம், ஆளும் வர்க்கங்கள் என அனைத்தும் நடந்த படுகொலைகளை மூடி மறைக்கவும், ஆறப் போடவும், திசை திருப்பவும் பல திருவிளையாடல்களை நிகழ்த்திப் பார்த்தனர். உயர்சாதி எஜமானர்களின் உணவு மேஜையிலிருந்து தெறித்து விழும் எலும்புத் துண்டுகளுக்கு அலையும் தலித் தலைவர்கள் என்று சுயதம்பட்டம் அடித்துக் கொண்ட திரு அவதாரங்கள், பொங்கியெழுந்த தலித் மக்களின் போராட்ட அலைக்கு அணைப்போட்டு தடுமாறிக் கொண்டிருக்கும் ஜனநாயகத்திற்கு முட்டுக் கொடுக்க முனைந்தனர். ஆனால் தலித் மக்களோ அனைத்து மாயைகளையும் தகர்த்தெறிந்துவிட்டு வீதிகளில் குதித்து போராடத் தொடங்கினர். மாநிலத்தின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் விதர்பாவிலிருந்தும் ஆயிரக்கணக்கான தலித் மக்கள் நீதி கேட்டும், போலி ஜனநாயகத்தின் கையாலாகாத்தனத்தைக் கண்டித்தும் திரண்டனர். ஆனால் நமது ஜனநாயகத்தின் காவலர்கள் மக்களுக்கு லத்திகள் மற்றும் துப்பாக்கி குண்டுகளை பதில்களாகத் தந்தனர். ஒழுங்காக அமைதியாக இருங்கள் இல்லையெனில், உங்களை நக்சலைட்டுகளை நடத்தும் முறையில் அணுக வேண்டியதிருக்கும் என்று முதல்வரும் உள்துறை மந்திரியும் தலித் மக்களை நோக்கிக் கொக்கரித்தனர். ஆனால் தலித்துகள் குண்டாந்தடிகளுக்கும் குண்டுகளுக்கும் அஞ்சாது நடுங்காது அலையலையாகத் திரண்டு வந்துகொண்டே இருந்தனர். மிரட்டல் பலிக்காததால் ஆளும் வர்க்கங்கள் பச்சோந்திகள் போன்று நிறம் மாறி முதலைகள் போல் போலிக் கண்ணீர் வடித்தன. துக்கங்கள், நிதியுதவி, வேலை வாய்ப்பு, கண்துடைப்பு கைதுகள், தற்காலிக இடமாற்றங்கள் போன்ற சடங்குகளை அரங்கேற்றினர். நாடகத்தின் இச்சரியான தருணத்தில் மீண்டும் தலித் தலைவர்கள் எட்டிக் குதித்து குட்டிக்கரணமடித்து ஆண்டைகளின் கருணைக்கு, போராடும் மக்களின் உணர்வுகளை அடகு வைக்கத் தூண்டினர். இந்த தலித் தலைவர்களால் இதுவரை சீரழிந்தது போதுமென்ற தெளிவில் தலித் மக்கள் அவர்களின் சமரசங்களைத் தூக்கியெறிந்து விட்டு தொடர்ந்து போராடினர்.

மாநிலத்தில் ஆளும் காங்கிரஸ் / தேசியவாத காங்கிரஸ் கட்சி, பி.ஜே.பி. மற்றும் சிவசேனா போன்ற மதவாத, சாதியவாத கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்து கொண்டு போராடும் தலித் மக்களின் மீது பிற சாதி உழைக்கும் மக்களை ஏவிவிட்டு முள்ளை முள்ளால் எடுக்க முயன்று வருகிறது. வெள்ளைக்காரன் பார்முலாவை நரேந்திர மோடியை அடுத்து மீண்டுமொரு முறை பரிசோதித்துப் பார்க்கத்

துடிக்கிறது மாநில அரசு. ஆனால் இதுவரையிலும் அதன் வக்கிர ஆசை கைகூடவில்லை. தலித் அல்லாத பிறசாதி உழைக்கும் மக்களுக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மாவோயிஸ்ட்) விடுக்கும் வேண்டுகோள் இது :

> ***வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டு வரும் தலித் மக்களின் உணர்வுகளை மதிப்போம்; உரிமைகளைக் காப்போம்; படுகொலைக்குக் காரணமான உண்மைக் குற்றவாளிகளை தண்டிக்கக் கோரிப் போராடும் தலித் மக்களின் போராட்டத்தில் ஒன்றுசேர்ந்து போராடுவோம்.***

காவல்துறை சாதியக் கறை படிந்து கிடக்கிறது. அதன் குண்டாந் தடிகளும் துப்பாக்கி குண்டுகளும் தலித் மக்களின் குருதியில் நனைய எப்பொழுதும் தயாராக உள்ளன. மேற்படி படுகொலைகளைக் கண்டித்தும், மக்கள் போராட்டத்தை ஆதரித்தும் விநியோகிக்கப்படும் துண்டுப் பிரசுரங்கள், விற்கப்படும் புத்தகங்கள் தடுக்கப்படுகின்றன. கைப் பற்றப்பட்டு அழிக்கப்படுகின்றன. ஆதரவு சக்திகள் கைது செய்யப்பட்டு மிரட்டப்படுகின்றன. அச்சுக் கூடங்கள் இத்தகைய பிரசுரங்களை/ புத்தகங்களை அச்சடிக்கக் கூடாது என மிரட்டப்படுகின்றன. அதிகார பூர்வமற்ற வாய்ப்பூட்டுச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் நமக்கு வழங்கப்பட்டுள்ள எழுத்துரிமை, பேச்சுரிமை, கருத்துரிமை, கூட்டம் சேரும் உரிமை ஆகியன மேற்சொன்னவாறெல்லாம் இந்திய ஆளும் வர்க்கங்களால் செவ்வனே நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

சட்டமன்ற குளிர்கால கூட்டத் தொடர் தொடங்கப்பட உள்ள நிலையில் முதல்வரும் உள்துறை மந்திரியும் போராட்டத்தை எதிர்கொள்ள மூளை கொதிக்க செயலுத்திகள் வகுத்து வருகின்றனர். இறுதியாக, வழக்கம் போல் மக்களை நம்பாது காவல்துறையை நம்பி ஆயிரக்கணக்கான காவலர்கள் மற்றும் அரை ராணுவப்படையினர் வரவழைக்கப்பட்டு மாநிலம் முழுவதும் முக்கிய நகரங்களில் காவல் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர். போராட்டத்திற்கு வெளியில் உள்ள மக்களை ஏமாற்றிடத்தான் தீவிரவாதிகள், பயங்கரவாதிகள், நக்சல்கள் உள்ளிட்ட பூச்சாண்டிகள்.

இதிலிருந்து நாம் புரிந்து கொள்ள வேண்டியது - நிலபிரபுத்துவ / சாதிய ஒடுக்குமுறை வடிவத்தை ஆளும் வர்க்கங்களால் துறக்க முடியவில்லை. மாறாக அவற்றின் வேருக்கு நீராகத்தான் இருந்து வருகின்றன. விதர்பா விவசாயிகளின் தற்கொலைகள் இதனை மேலும் நிரூபிப்பதாக உள்ளன.

விதர்பாவில் விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டு மடியாத நாட்களே புலர்வதில்லை என்ற நிலை தோன்றிவிட்டது. இந்நிலை மாநிலத்தின் பிற பகுதிகளான நாசிக், தானே, நான்டெட் போன்றவற்றிற்கும் பரவி வருகிறது. இங்கெல்லாம் விவசாயிகளின் தற்கொலைச் சம்பவங்கள் தொடர்கதையாகி வருகின்றன. தற்கொலைகளுக்கு காரணம் தனிநபர் சார்ந்தது அல்ல. அது சமூக பொருளாதாரப் பின்னலைக் கொண்டது. அதன் வேரைத் தேடிச் சென்றால், இந்திய ஆளும் வர்க்கங்களும் அதன் தோளில் அமர்ந்து சவாரி செய்து கொண்டிருக்கும் உலக ஏகாதிபத்தியமும் நம்முடைய தரிசனத்திற்கும் கிடைக்கும். இவ்விரண்டு சமூக விரோத சக்திகளும் நடைமுறைப்படுத்தி வரும் உலகமயமாக்கல் எனும் புதைகுழி விவசாயிகளை மட்டுமல்ல தொண்ணூறு சதவீத ஏழை, எளிய, நடுத்தர மக்களையும் வேகமாக விழுங்கி வருகிறது. அதன் அகோரப்பசிக்கு முதலில் இரையானவர்கள் விவசாயிகள் என்று வேண்டுமானால் கூறலாம்.

கடந்த பதினைந்தாண்டு காலமாக விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வந்த மானியங்கள் அனைத்தும் படிப்படியாக நிறுத்தப்பட்டு நட்டாற்றில் கைவிட்டுவிட்டனர். விவசாய இடுபொருட்களின் விலை உச்சாணிக் கொம்பிற்கு ஏறிவிட்டது. உற்பத்தி செய்த பொருட்களுக்கு உரிய விலை கிடைப்பதில்லை. இலவசமாய்க் கிடைத்துக் கொண்டிருந்த தண்ணீருக்கும் விலை கூறப்படுகிறது. பயிர் செய்த நிலங்களெல்லாம் தரிசாக மாறிவருகிறது. சுயேச்சையான விவசாயிகளை ஒழித்துக் கட்டிவிட்டு ஒப்பந்த முறை விவசாயத்தைத் திணிக்க நினைக்கும் பன்னாட்டு நிறுவனங்களின் திரை மறைவு சதிகள்தான் விவசாயிகளின் கண்ணீருக்கும், தற்கொலைகளுக்கும் காரணமாகும்.

பிள்ளையையும் கிள்ளிவிட்டு தொட்டிலையும் ஆட்டிவிடுவது போன்று மன்மோகன் சிங் அரசு மூன்று மாதங்களுக்கு முன்பு விவசாயிகளுக்கு பஞ்ச நிவாரணம் வழங்குவதாக பந்தாவாக அறிவித்தது. செய்தி ஊடகங்களில் கோடிக் கணக்கான தொகையை இதற்காக ஒதுக்கியுள்ளதாக அரசு தரப்பு கூறியது. நிவாரணம் வழங்கப்பட்ட மறுதினமே அதே செய்தியூடகங்களில் மன்மோகன் சிங்கின் மானம் காற்றில் பறக்கவிடப்பட்டது. பத்து ரூபாய், இருபது ரூபாய் போன்ற மிகப்பெரிய தொகையை எல்லாம் கூட மன்மோகன் சிங் வாறி வழங்கி செத்துக் கொண்டிருந்த பல விவசாயிகளை நக்கல் செய்திருந்தார். பல விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட நிவாரண நிதி இங்ஙனம் கால்நடைகளின் ஒரு வேளை தீனிக்குக் கூட கட்டுப்படியாகாத சூழ்நிலையில் பாவம் விவசாயிகளின் பசியாற வழியேது?

ஆக, விவசாயிகளுக்கு உண்மையாக உதவவோ, நிதி நிறுவனங்கள், கந்து வட்டிக்காரர்கள் ஆகியோரிடமிருந்து அவர்களை மீட்கவோ அரசுக்குத் துளியும் எண்ணமில்லை. அதன் அறிவிப்பு கண்துடைப்பு மட்டுமல்ல, பிற மக்களையும் ஏமாற்ற நினைக்கும் செப்பிடு வித்தை. மன்மோகன் சிங் போன்ற

ஏகாதிபத்திய கைக்கூலிகள் தங்களை கருணா மூர்த்தி களாக காட்டிக் கொள்ள விவசாயிகளின் மரணத்தை பயன்படுத்திக் கொள்ளுகிறார்கள். சிறப்புப் பொரு ளாதார மண்டலங்களில் முதலீடு செய்யும் உள்நாட்டு, பன்னாட்டுப் பணமுதலைகளுக்கு ஒரு லட்சம் கோடி ரூபாய்களை தானமாக வாறி வழங்க முன்வரும் ஏகாதிபத்திய எடுபிடி மாநிலத்தில் அரசுகள் விவசாயி களுக்கு பத்து ரூபாய் இருபது ரூபாய் என்று நிவாரணப் பிச்சை போடுகிறது. இதிலிருந்து ஒவ்வொருவரும் புரிந்து கொள்ள வேண்டிய நீதி: இந்த அரசு விவசாயி களுடையதல்ல; உழைக்கும் கோடானு கோடி ஏழை, எளிய மக்களின் அரசல்ல. இது தரகு முதலாளிகளின் அரசு; பன்னாட்டு பணமுதலைகளுக்கு சலாம் போடும் அரசு. ஒட்டுமொத்த சமூகத்தையும் சுரண்டி வயிறு வளர்க்கும் சில கோடி பேர்களுக்குச் சேவை செய்யும் அரசு.

எனவே, இந்த மக்கள் விரோத அரசை தூக்கியெறிய திரண்டு வருமாறு தலித்துகள், விவசாயிகள், ஜனநாயக சக்திகள் அனைவரையும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மாவோயிஸ்ட்) அழைக்கிறது. விவசாயிகள் - தொழி லாளர் கூட்டணியை உருவாக்கிடும் முயற்சியில் அனை வரும் ஈடுபட வேண்டும். டிசம்பர் - 8 எதிர்ப்புப் போராட்டம் இதன் தொடக்கமாக அமைய வேண்டும். உடனடியாக, விவசாயிகள் ஒன்றுதிரண்டு தங்கள் மீதான அனைத்துக் கடன்களையும் சுயமாக ரத்து செய்துகொண்டு, நிதி நிறுவனங்கள், கந்துவட்டிக் காரர்களிட மிருந்து ஆவணங்களைக் கைப்பற்றி அழிக்க வேண்டும். விவசாயிகள் தங்கள் மீது திணிக்கப்பட்ட செயற்கையான பஞ்சத்தைப் புரட்சிகர வன்முறை கொண்டு எதிர்கொள்ள வேண்டும். அரசுக் கட்டிடங் கள், தனியார் நிலப்பிரபுக்களின் கட்டிடங்களை கைப்பற்றி தானியங்களையும், உழுபடைக் கருவி களையும் உடனடியாக எடுத்துக் கொள்ள வேண்டும். இத்தகைய போராட்டத்தில் மரணமடைந்தாலும் தற்கொலை செய்துகொண்டு மடிவதைவிட அது மேன்மையானது. வினை விதைத்தவர்களுக்கு வினை யைப் பரிசளிப்போம்.

மாவோயிஸ்ட்டுகள் எங்கெல்லாம் விவசாயிகளை வழிநடத்துகிறார்களோ அங்கெல்லாம் தற்கொலை என்ற சோகங்கள் நிகழ்வதில்லை என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறோம். மாவோ யிஸ்ட்டுகள் மக்கள் விரோத சக்திகளை / எதிரிகளை தாக்கி அழித்து வருகிறார்கள். சுரண்டல்காரர்களிட மிருந்தும் வழிப்பறி அரசுகளிடமிருந்தும் பறிமுதல் செய்து வருகிறார்கள்.

தலித்துகளே! விவசாயிகளே!
ஜனநாயக சக்திகளே!

* டிசம்பர் 08, 2006 போராட்டத்தை வெற்றிகரமாக நடத்திடுவோம்!
* கயர்லாஞ்சி படுகொலையை கண்டிப்போம்! உண்மையான குற்றவாளிகளை காப்பாற்றத் துடிக்கும் காங்கிரஸ், தேசியவாத காங்கிரஸ், பி.ஜே.பி. மற்றும் சிவசேனா அரசியல் குண்டர்களை கைது செய்யக் கோருவோம்.
* கயர்லாஞ்சி படுகொலைகளைக் கண்டித்து வீரஞ்செறிந்த போராட்டத்தை நடத்திய தலித் மக்களுக்கு செவ்வணக்கம்.
* விவசாயிகளை படுகொலை செய்துவரும் உலகமயமாக்கல் கொள்கைகளை திரும்பப் பெறவும்; அனைத்து மானியங்களையும் மீண்டும் வழங்கப் போராடுவோம்.
* ஆயுதப் போராட்டமல்லாது உடனடித் தேவைகளையோ அல்லது அரசியல் அதிகாரத்தையோ கைப்பற்ற முடியாது. புரட்சிகர வன்முறையைத் தொடங்குவோம்.

சந்திரகாந்த், செயலாளர், மகாராஷ்டிரா மாநிலக்குழு.
கோசா, செயலாளர்
தண்டகாரண்யா சிறப்பு மண்டலக்குழு.
டிசம்பர் - 02, 2006.

போராட்டப் பாதையில் தில்லி வணிகர்கள்!
பெரும் நிறுவனங்களின் கைக்கூலியாக உச்சநீதிமன்றம்!!

■ அரவிந்த்

எல்லைப் பாதுகாப்புப் படையின் 6 கம்பெனிகள்; மத்திய ரிசர்வ் போலீஸ் படையின் 44 கம்பெனிகள்; ஆயிரக்கணக்கில் உள்ளூர் போலீசார் - அது யுத்தப் பகுதியாகத் தோற்றமளித்தது. இது காஷ்மீரோ அல்லது வடகிழக்கோ அல்லது நக்சல் பாரிகளின் கொரில்லாப் பிரதேசமோ அல்ல; மாறாக, தில்லியின் இதயப்பகுதியில்; நாட்டின் தலைநகரில் தான் இந்தக் காட்சி. நவம்பர் மாதத் தொடக்கத்தில் வணிகர்கள் அழைப்பு விடுத்த மூன்று நாட்கள் முழு அடைப்புப் போராட்டம் வன்முறையில் முடிந்த பிறகு, அந்த சட்டவிரோத வணிகர்களின் கடைகளை இடிக்கும் நடவடிக்கைக்குத் துணை நிற்பதற்காகத்தான் இந்தப் பெரும் அளவிலான படைக்குவிப்பு நடைபெற்றது. பண முதலைகளின் (மன்னிக்கவும் உச்சநீதிமன்றத்தின்) விருப்பம் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதை உத்தரவாதப்படுத்தத்தான் இந்த பெரும் எண்ணிக்கை யிலான படைகள் பயன்படுத்தப்பட்டன. இரவோடு இரவாக லட்சக்கணக்கான மக்கள் தங்களது சொந்த நகரத்திலேயே சட்டவிரோத வணிகர்களாக மாற்றப் பட்டிருக்கின்றனர்.

முதலில், பல முஸ்லீம்கள் பங்களாதேசிகள் என்று முத்திரை குத்தப்பட்டு "சட்டவிரோத" மாக்கப்பட்ட னர்; பின்பு அனைத்து சேரிவாசிகளும் சட்டவிரோத குடியிருப்புவாசிகளாக முத்திரை குத்தப்பட்டனர். மேலும், இப்போது வணிகர்கள் அவ்வாறே முத்திரை குத்தப்படுகின்றனர். உச்சநீதிமன்றம் மற்றும் அதனுடைய அதிகார நீதிமன்றங்களின் பார்வையில் பணம் படைத்தோர் தான் சட்டப்பூர்வமான குடி மக்களாகத் தெரிகின்றனர்; மற்றவர்கள் அனைவரும் சாக்கடையில் மிதக்கும் அழுக்கைப் போன்று அங்கும் இங்கும் தூக்கியெறியப்படுகின்றனர் அல்லது நகரத் திற்கு வெளியில் துரத்தப்படுகின்றனர் அல்லது அவர்களுக்குச் சேவை செய்வதற்காக மட்டுமே பயன்படுத்தப்படுகின்றனர்.

அவசர நிலைக் காலத்தில் ஏறத்தாழ ஏழு லட்சம் சேரிப்புற வாசிகள், காங்கிரஸ் ரவுடிக் கும்பலால் நகரத்திற்கு வெளியே தூக்கி வீசப்பட்டனர்; சில ஆண்டுகளுக்கு முன்பு மாசுபடுத்தும் தொழிற்சாலை களுக்கு எதிரான உச்சநீதிமன்றத்தின் ஆணையின் விளைவாக ஆயிரக்கணக்கான சிறு தொழிற்சாலைகள் மூடப்பட்டு லட்சக்கணக்கானோர் வேலை யிழந்தனர்; அதற்குச் சிறிது காலம் முன்புதான் அதிக எண்ணிக்கை யிலான சேரிப் பகுதிகள் தகர்க்கப்பட்டன; இப்போது வணிகர்கள் மற்றும் கடைக்காரர்களின் முறை வந்திருக் கிறது. (இப்போது வணிகர்கள் மற்றும் கடைக்காரர்கள் குறிவைக்கப்படுகின்றனர்). தில்லியில் மட்டும் ஏறத்தாழ 50 லட்சம் பெரிய, நடுத்தர, சிறிய மற்றும் குறுந் தொழில்களை நடத்தும் குடும்பங்கள் சீலிங் (அடைப்பு முறை) குறித்த அச்சுறுத்தல் காரணமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று கணக்கிடப் பட்டுள்ளது. அதாவது, தாக்குதல்களின் தற்போதைய சுற்றில் மட்டும் 1 கோடி மக்களுக்கும் அதிகமானோர் பாதிக்கப்படலாம். இவ்வனைத்துப் பிரிவினர்களின் மத்தியில் (அவற்றிற்கு உள்ளேயும் கூட) நிலவும் ஒற்றுமையின்மையின் விளைவாக அரசாங்கமும், நீதிமன்றங்களும் ஒன்றன்பின் ஒன்றாக ஒவ்வொரு பிரிவினரின் மீதும் திட்டமிட்ட ரீதியில் தாக்குதல் தொடுக்கிறார்கள்.

ஒரு நாள் முழு அடைப்பு நடைபெற்ற செப்.20 ஆம் தேதி தான் முதல் போர் நடைபெற்றது. அதில் நான்கு பேர் போலீசாரால் படுகொலை செய்யப்பட்டனர். அந்த நாளன்று வணிகர்களுக்கும், போலீசாருக்கும் இடையே நடைபெற்ற வன்முறை மோதல்களால் தில்லியே அதிர்ந்தது. நகரத்தில் உள்ள ஏறத்தாழ அனைத்துச் சந்தைகளும் மூடப்பட்டன. வணிகர்கள் பிரதான சாலைகளில் தடைகளை ஏற்படுத்தி அரசாங்க வாகனங்களின் மீது கல்வீசித் தாக்கினார்கள். சீலம்பூர் என்ற இடத்தை ஒட்டியிருந்த ஒரு முஸ்லீம் குடி யிருப்புப் பகுதியில் உள்ளூர் வாசிகளுக்கும், போலீஸ்/ துணை இராணுவப் படைகளுக்கும் இடையே நேருக்கு நேர் மோதல்கள் நடைபெற்றன. இந்த மோதலில் 30 போலீசாரும், 40 குடியிருப்பு வாசிகளும் காய மடைந்தனர். இதைத் தொடர்ந்து நடைபெற்ற போலீசு துப்பாக்கிச்சூட்டில் இரண்டு இளைஞர்களும் ஒரு குழந்தை உட்பட நால்வர் கொல்லப்பட்டனர். நகரத்தின் மற்ற பகுதிகளில் போராட்டக்காரர்கள் 20 நகரப் பேருந்துகளைச் சேதப்படுத்தி பெரும்பாலான முக்கியச் சாலை களில் தடைகளை ஏற்படுத்தினர். இந்த அடைப்பு போராட்டத்திற்கு அனைத்து இந்திய வணிகர்கள் கூட்டமைப்பு (CAIT) அழைப்பு விடுத்திருந் தது. இந்த அழைப்பை ஏறத்தாழ 500 சிறு மற்றும் பெரிய சந்தைகளின் சங்கங்கள் ஆதரித்திருந்தன. வணிகர் களின் போர்க்குணம் மிக்க போராட்டத்தால் தில்லி மாநகராட்சி சீலிங் (அடைப்பு முத்திரை வைக்கும்) நடவடிக்கையின் வேகத்தைக் குறைத்துக் கொள்ள நிர்பந்திக்கப்பட்டது.

ஆனால் உச்சநீதிமன்றம் பிடிவாதமாக இருந்தது. அனைத்து அரசியல் கட்சிகளும் வணிகர்களுக்கு உதட்டளவில் சேவை செய்தார்களே தவிர உண்மையில் ஒன்றுமே செய்யவில்லை. நவம்பர் மாதத்தில் தீபாவளி விடுமுறைகளுக்குப் பிறகு முழு அளவிலான தாக்கு தலைத் தொடுக்குமாறு உச்சநீதிமன்றம் தில்லி மாநகராட்சிக்கு ஆணை பிறப்பித்தது. இதற்கு முன்னதாகத் தான் வணிகர்கள் அக்டோபர் 31 முதல் நவம்பர் 2 வரை மூன்று நாட்கள் முழு அடைப்புக்கு அழைப்பு விடுத்திருந்தார்கள். தற்செயலாக, இந்தக் காலகட்டத்தின் போது தான் ரிலையன்ஸ் நிறுவனம் ஐதராபாத்தில் தனது சில்லரை பல்பொருள் அங்காடி யைத் திறந்தது, நாடு முழுவதும் மேலும் 1500 அங்காடிகளைத் துவங்கும் திட்டத்தையும் அறிவித்தது. நவம்பர் மாதத்தில் நடைபெற்ற முழு அடைப்புப் போராட்டத்தில் ஏற்பட்ட வன்முறைச் சம்பவங்கள் செப்டம்பர் மாதத்தில் நடைபெற்ற முழு அடைப்புப் போராட்டத்தில் ஏற்பட்ட வன்முறைச் சம்பவங்களைக் காட்டிலும் மிகவும் அதிகமாக இருந்தன. பேருந்துகள் எரிக்கப்பட்டன. மற்றும் பல பேருந்துகள் சேதப்படுத் தப்பட்டன; சாலைகளில் தடைகள் ஏற்படுத்தப்பட்டன; வாகனங்களின் கண்ணாடிகள் நொறுக்கப்பட்டன; போலீசாரின் மீது கற்கள் வீசப்பட்டன. இரயில்களும் கூட நிறுத்தப்பட்டன. 350 பேர் கைது செய்யப்பட்டனர். வணிகர்களின் கோபத்தைக் கண்ட போலீசு தில்லி மாநகராட்சியின் நடவடிக்கைக்குப் பாதுகாப்பு கொடுப்பதற்கான போதிய படைகள் அவர்களிடம் இல்லை என்று அறிவித்தது. உச்சநீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட மேற்பார்வைக் குழு, தில்லி மாநகராட்சி மற்றும் தில்லி போலீசு ஆகியோர் பங்கேற்ற கூட்டத்தில் நீண்ட நேரம் நடைபெற்ற பிறகு சீலிங் நடவடிக்கையை இரண்டு நாட்களுக்கு தள்ளிவைப்பது என்று முடிவு செய்யப்பட்டது. இதன் பின்னர்தான் அவர்கள் பெரும் எண்ணிக்கையிலான துணை இராணுவப் படை யினரைக் குவித்து, திட்டமிட்ட ரீதியில் இடிப்பு (நாசகர) நடவடிக்கையைத் துவக்கினார்கள். அதற்குப் பிறகு பகுதி வாரியாக கலவர கவசம் அணிந்த துணை இராணுவப் படையினர் கொண்டு வரப்பட்டனர். அவர்களைத் தொடர்ந்து தில்லி மாநகராட்சிகளின் புல்டோசர்களும் வந்திறங்கின. இத்தகைய படைக் குவிப்புக்குப் பின்னர் எடுக்கப்பட்ட நடவடிக்கை யைத்தான், கடைகள் இடிப்பு "அமைதியாக" நடை பெற்றுக் கொண்டிருக்கின்றது என்று ஊடகங்கள் மகிழ்ச்சியாக செய்தியினை வெளியிடுகின்றன.

இது இவ்வாறு நடந்து கொண்டிருக்கையில், அனைத்து அரசியல் கட்சிகளும் வணிகர்களுக்கு ஆதரவளிப்பது போன்று பாசாங்கு மட்டும்தான் செய்கிறார்கள். மத்தியிலும், தில்லி மாநிலத்திலும் ஆட்சியில் இருக்கின்ற காங்கிரசுக் கட்சி கடைகளை அங்கீகரிக்கும் பொருட்டு எளிதாக ஒரு சட்டத்தைக் கொண்டு வந்திருக்கலாம். ஆனால் அது வணிகர் களுடன் பூனை - எலி விளையாட்டை விளையாடிக் கொண்டிருக்கிறது. வணிகர்களுக்கு மத்தியில் பெரும் ஆதரவு தளத்தைக் கொண்டிருக்கிற பா.ஜ.க. இந்தப் போராட்டத்தைத் தலைமையேற்று நடத்திக் கொண்டி ருக்க வேண்டும். ஆனால், அதனுடைய முக்கிய கடமை பிரச்சனையைத் திசை திருப்புவதாகத்தான் இருக்கிறது. உண்மையில், பாராளுமன்ற குளிர்காலக் கூட்டத் தொடர் துவங்கிய முதலாம் நாளன்று அவர்கள் அப்சலைத் தூக்கிலிட வேண்டும் என்று கூறி ஒரு மாபெரும் பேரணியை நடத்தியதோடு, உள்நாட்டுப் பாதுகாப்பைத்தான் மக்களவையில் மிக முக்கியப் பிரச்சனையாக முன்வைத்தனர். வணிகர்களின் பிரச்சனை குறித்து ஒரு வார்த்தை கூட சொல்லப்படவில்லை. இடது சாரிகள் உள்ளிட்ட மற்ற அனைத்துக் கட்சிகளும் அமைதி காக்கின்றன. எவ்வாறாக இருப்பினும் வணிகர்கள் இடதுசாரிகளின் வாக்கு வங்கியைச் சேர்ந்தவர்கள் அல்லர்.

பிறகு ஏன் தில்லியில் இந்த மாபெரும் கடை யடைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது? இதற்கு இரண்டு அடிப்படைக் காரணங்கள் இருக்கின்றன. முதலில், தில்லியும் இன்னபிற மாநகராட்சிகளும் பெரும் நிறு வனங்கள், தேசங்கடந்த தொழிற் கழகங்கள் ஆகியவற்றின் இதயத்தில் குடிகொண்டுள்ளன. ஆளும் அதிகார வர்க்கமும் அவர்களுடைய ஏகாதிபத்திய எஜமானர்களும் இங்குதான் வசிக்கிறார்கள். நீண்ட நெருக்கமான ஏகாதிபத்திய வாதிகள்தான் நாட்டின் உள்கட்டமைப்பு வசதிகளின் பற்றாக்குறையைக் கண்டு நீலிக் கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கின்றனர். இந்த நாட்டிற்கு அதிகளவு அந்நிய மூலதனம் வேண்டும் என்றால் உள்கட்டமைப்பு வளர்ச்சிக்கு அதிக முக்கியத் துவம் கொடுக்க வேண்டும் என்று கோரி வருகின்றனர். உயர்ரகச் சாலைகள், வணிக வளாகங்கள், சூதாட்ட விடுதிகள், ஐந்து நட்சத்திர சேவைகள் ஆகியவை இந்த தனிச்சிறப்பான பகுதிகளில் அமைக்கப்பட வேண்டும் என்பது தான் அவர்களது கோரிக்கையாக இருக்கிறது. இதற்காக ஆயிரக்கணக்கானோர் தங்களது குடியிருப்பு களிலிருந்து விரட்டப்பட்டால், இருந்துவிட்டுப் போகட்டும் என்பதுதான் அவர்கள் எண்ணமாகவும் இருக்கிறது. எனவேதான் புல்டோசர்கள் ஈவு இரக்க மின்றி இடித்துத் தள்ளுகின்றன.

இரண்டாவது காரணம், நகரத்திற்குள் மாபெரும் சில்லறை சங்கிலிதொடர் அங்காடிகளின் திட்டமிட்ட படையெடுப்புக்காகத் தான் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. இந்த பகாசூர நிறுவனங் களின் படையெடுப்புக்கு வசதியாக சிறு வணிகமும் (நடுத்தர அளவிலான வாணிபம் கூட) மற்ற கடைகளும் பலவந்தமாக வெளியேற்றப்பட வேண்டும். கடந்த

இரண்டாண்டுகளாகவே பெருவாரியான பெரிய தொழில் நிறுவனங்கள் இராட்சதத் திட்டங்களை வகுத்து சில்லரை வணிகத்தில் ஈடுபட்டு வருகின்றனர். வால் மார்ட் போன்ற பன்னாட்டு சில்லரை பகாசூர நிறுவனங்கள் நாட்டிற்கு தொடர்ச்சியாகப் படையெடுத்த வண்ணம் இருக்கின்றன. இந்த கழுகுகள் தற்போது 300 பில்லியன் டாலர்கள் (14 லட்சம் கோடி ரூபாய்) அளவுக்கு உள்ளதை 2015ஆம் ஆண்டுக்குள் 637 பில்லியன் டாலர்கள் அளவுக்கு வளரும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. இந்தியாவின் இராட்சத சில்லரை சந்தைகளின் மீது பார்வையைப் பதித்து வட்டமடிக்கின்றன.

இந்தியாவின் சில்லரைச் சந்தையில் 3 விழுக்காடு தொழிலாளர்கள் மட்டுமே முறைப்படுத்தப்பட்ட துறையைச் சார்ந்தவர்களாகத் தற்போது இருக்கிறார்கள். இந்தச் சந்தை ஏற்கனவே ஆண்டுக்கு 30 விழுக்காடு விகிதத்தில் வளர்ந்து கொண்டிருக்கிறது. மேலும், 2010 ஆம் ஆண்டுக்குள் அவர்கள் 10 விழுக்காடு சில்லரைச் சந்தையை அல்லது 30 பில்லியன் டாலர்களை (1 லட்சம் கோடி ரூபாய்க்கும் மேலாக) கைபற்றத் திட்டம் வகுத்துள்ளனர்.

ரிலையன்ஸ் (முகேஷ் அம்பானி) நிறுவனம் காய்கறிகள், பழங்கள் விற்பதற்காக "ஃபிரஷ்" மற்றும் "செலக்ட்" என்ற பதிவுப் பெயர்களில் தனது முதல் சில்லரை அங்காடியை நவம்பர் 3ஆம் தேதியன்று ஐதராபாத்தில் துவங்கியது. சில்லரை வணிகத்தில் 25,000 கோடி ரூபாய் அளவுக்குப் பெரு முதலீடு செய்யத் திட்டமிட்டிருக்கின்றனர். இந்தத் திட்டத்தின் கீழ் விவசாயிகளிடமிருந்து நேரடியாக கொள்முதல் செய்வது, நாடு முழுவதும் 68 பதப்படுத்தும் மையங்கள் அமைப்பது மற்றும் நுகர்வோர்க்கு நேரடியாக விற்பனை செய்வது ஆகியவை அடங்கும். இதன் விளைவாக அவர்கள் இலட்சக்கணக்கான சிறிய சில்லரை வணிகர்களை மட்டுமின்றி, அதிக அளவிலான மொத்த வியாபாரிகளையும், வணிகர்களையும், இடைத் தரகர்களையும் மற்றும் விவசாயப் பொருட்களுக்கு சந்தை ஏற்படுத்திக் கொடுக்கின்ற எண்ணற்ற விற்பனை நிறுவனங்களையும் தூக்கியெறிந்து விடுவார்கள்.

ஆனால், ரிலையன்ஸ் நிறுவனம் மட்டுமே இந்தத் துறையில் நுழையவில்லை. ஐ.டி.சி.யின் சொவ்பால் ஃபிரஷ் என்ற நிறுவனம் தான் சி.பி.எம். ஆளும் மேற்குவங்க மாநிலத்தின் சிறப்பான சேவைகளைப் பயன்படுத்தி அங்கு நுழைந்த பிரதான நிறுவனம் ஆகும். இந் நிறுவனம் 1250 கோடி ரூபாய் முதலீடு செய்யும் திட்டத்தை மாநில அரசிடம் சமர்ப்பித்துள்ளது. பிற நிறுவனங்களான பான்தலூன் சில்லரை நிறுவனமும், அனில் அம்பானியின் நிறுவனம், டாட்டாவின் நிறுவனம், ஆதித்ய பிர்லா குழுமத்தின் நிறுவனம் (திட்டமிட்ட முதலீட்டுத் தொகையான 6000 கோடி ரூபாயில்), பாரதி குழுமத்தின்(மிட்டல்) நிறுவனம் முதலியன இந்தச் சில்லரை வாணிபச் சந்தையில் குதிக்கின்றன. மேலும் அனைத்து பெரிய சர்வதேசச் சில்லரை நிறுவனங்களும் நாட்டிற்குள் நுழையத் தீவிரம் காட்டி வருகின்றன. அவர்கள் ஒழுங்கு படுத்தப்பட்ட சில்லரைச் சந்தையை தற்போதைய அளவான 7 பில்லியன் டாலரிலிருந்து (மொத்த சந்தையில் 3 விழுக்காடு) அடுத்த ஐந்தாண்டுகளுக்குள் 80 பில்லியன் டாலர்கள் அளவுக்கு அதிகரிக்கத் திட்டமிட்டுள்ளனர். புதிய முதலீட்டிலும் (நில விற்பனைத் தொழில் தவிர்த்து) 20 பில்லியன் டாலர்கள் அளவுக்கு முதலீட்டை அதிகரிக்கத் திட்டமிட்டுள்ளனர். உண்மையில், ஏறத்தாழ ஓராண்டுக்கு முன்பு தான் உலகத்தின் மிகப்பெரிய நிறுவனமான வால் மார்ட் (அமெரிக்காவின் மிகப்பெரிய சில்லரை வாணிப நிறுவனம் சில்லரைத் துறையில் மிகப்பெரிய அளவில் நுழைவதற்காக பாரதி குழுமத்தின் கூட்டுத் தொழில் திட்டம் தொடங்க உடன்படிக்கை செய்துள்ளது.) நிறுவனத்தின் தலைவன் இந்தியாவிற்கு வருகை தந்து பல்வேறு அமைச்சர்களை சந்தித்ததோடல்லாமல் பிரதமரையும் சந்தித்து விட்டுச் சென்றார். அது மட்டுமல்லாது, உலகத்தின் நான்கு மாபெரும் தேசங்கடந்த பழ நிறுவனங்களான (INC Fruit Companies) சிக்கிததா, ஃபிரஷ் டெல் மான்டீ, டோல் புட்ஸ் மற்றும் காபேஸ்கான் ஆகியவை சிறிய பகுதிவாரியான கடைகளை (குறிப்பாக தென்னிந்தியாவில்) சங்கிலித் தொடர் வரிசையில் அமைக்கத் திட்டம் தீட்டி வருகின்றன. அனைவரும் உள்ளூர் தரகு முதலாளிகளுடன் சேர்ந்து கூட்டுத் தொழில் திட்டங்களை அமைப்பதற்குத் திட்டமிட்டு வருகின்றனர். இயற்கையாகவே, நாட்டின் மீது தொடுக்கப்படும் இத்தகைய திட்டமிட்ட தாக்குதலின் விளைவாக சிறிய வியாபாரிகள் நசுக்கப்படுவர். அப்போதுதான் இந்தப் பெரு முதலைகள் தழைக்க முடியும். சில்லரைத் துறையில் நுழைகின்ற இந்தப் பெரும் பணமூட்டைகளுக்கு வெறும் அடிக்கின்ற தடியாகத் தான் உச்சநீதிமன்றம் செயல்படுகின்றது.

இந்தியாவில் நாடு முழுவதும் 1.2 கோடி சில்லரைக் கடைகள் இருக்கின்றன. இவற்றில் 80 விழுக்காட்டிற்கும் அதிகமான கடைகள் குடும்ப உழைப்பைப் பயன்படுத்துகின்ற சிறிய தொழில் குடும்பங்களால்தான் நடத்தப்படுகின்றன. பெரிய சங்கலித் தொடர் சில்லரை நிறுவனங்கள் நடுத்தர மற்றும் உயர் வர்க்கத்தின் சில்லரை நுகர்வை கைப்பற்றும் குறிக்கோளைக் கொண்டிருப்பதன் மூலம் 230 பில்லியன் டாலர்கள் (ஏறத்தாழ 9 இலட்சம் கோடி ரூபாய் அளவுக்கான இராட்சதச் சந்தை) அளவிற்கு வாங்கும் திறன் படைத்துள்ளதாக

கணக்கிடப்பட்டுள்ள 3 கோடி மக்கள் தொகையை இலக்காக்கு கின்றது. சீனாவிலும், பிரேசிலிலும் இந்த பெரிய சங்கலித்தொடர் சில்லரை நிறுவனங்கள் ஒழுங்க மைக்கப்பட்ட சில்லரைச்சந்தையை ஏற்கனவே 5 விழுக்காட்டிலிருந்து முறையே 20 விழுக்காடு மற்றும் 38 விழுக்காடு வரை கடந்த பத்தாண்டு களில் உயர்த்தியிருக்கின்றன.

இதிலிருந்து இந்த சங்கலித் தொடர் நிறுவனங்கள் உள்ளே புகுந்தால் எந்தளவிற்கு சிறிய மற்றும் நடுத்தர கடைக்காரர்கள் வெளியேற்றப்படுவார்கள் என்பதை ஒருவர் எண்ணிப்பார்க்க முடியும்.

தில்லியின் கிரீன் பார்க் பகுதி யைச் சேர்ந்த அதிகார வர்க்கத்தினர் தான் தங்களுடைய பணச் செழிப்பு வாய்ந்த பகுதியிலிருந்து 'அரு வெறுப்புகளை' நீக்குவதற்காக 1994 ஆம் ஆண்டு முதன்முதலில் வழக்குத் தொடுத்தார்கள். இந்த வழக்கின் முதுகில் சவாரி செய்து கொண்டும், உச்சநீதிமன்றத்தின் நற்சேவைகளை பயன்படுத்திக் கொண்டும்தான் ரிலையன்ஸ் நிறுவனமும் அதன் கும்பலும் நகரத்திற்குள் பீடு நடைபோட்டு சிறிய கடைக்காரர் களைத் துடைத்தெறிந்து, நடுத்தர வர்க்கத்தினரைக் கூட தங்களுடைய வளாகங்களிலிருந்து காய்கறிகள், பழங்கள் மற்றும் இன்ன பிற நுகர்வுப் பொருட்களை வாங்கு வதற்கு நிர்பந்திக்கும். இந்த வளாகங்களிலுள்ள பெரும் பாலான கடைகளில் விற்பனை மிகவும் மோசமாக இருக்கிறது (உணவு விடுதிகள் மற்றும் பல்கேளிக்கை அரங்குகள் தவிர்த்து) என்பது அனைவரும் அறிந்த ஒன்றுதான். இப்போது மேற்கொள்ளப்படும் நடவடிக்கை அவற்றிற்கு ஒரு அரிய வாய்ப்பாக அமையும் என்பதில் எவ்விதச் சந்தேகமும் இல்லை.

இந்தத் தாக்குதல் அடிப்படை யிலேயே சிறிய வணிகர்களுக்கு எதிராகவும், நடுத்தர வர்க்கங் களுக்கு எதிராகவும் தொடுக்கப்படு கின்றது. அதே நேரத்தில் அதிகார வர்க்கத்தினர்க்குத் தாராளமாக இடமளிக்கப்படுகிறது. அரசாங்கம் சைனிக் தோட்டங்கள், அனந்தராம் பால்பண்ணை, மகிந்தரு பாதுகாக் கப்பட்ட பகுதிகள் போன்ற 1500 பண செழிப்பு மிகுந்த குடியிருப் புகளை அங்கீகரிப்பதற்கான திட்டத்தை முன்வைத்திருக்கிறது.

தில்லி மற்றும் பிற பெரு நகரங்களில் வாழ்கின்ற மக்கள் வெறுமனே தங்களுடைய குறுகிய நலன்களுக்காக மட்டும் அல்லாமல் ஒன்றுபட்டு இணைந்து செயலாற்றி இந்த மாபெரும் சதியை முறியடிக்க வேண்டும். அதிகார வர்க்கத்திற்காக உருவாக்கப்படுகின்ற இந்த நகர்புற வளர்ச்சியின் வடிவத்திற்கு எதிரான ஒன்றுபட்ட போராட்டத்தில் இணைய வேண்டும். இந்த வெளியேற்றப் படுதலுக்கு எதிராக சேரிவாசி களும், வணிகர்களும், சிறு தொழி லதிபர்களும், அவர்களுடைய தொழிலாளர்களும் ஒன்றுபட்டுப் போராட வேண்டும். மக்களின் முன்பு இரண்டு வாய்ப்புகள் தான் முன்வைக்கப்படுகின்றன.

ஒன்று, பெரும்பாலான மக்கள் ஓரங்கட்டப்படுகின்ற ஐந்து நட்சத்தர அதிகார வர்க்க சிறப்புப் பகுதிகளை உருவாக்குவது; அல்லது வறுமை ஒழிப்புக்கு முக்கியத்துவம் அளிக் கின்ற அனைத்தும் தழுவிய வளர்ச் சியை ஏற்படுத்துவது ஆகிய இரண் டில் ஒன்றைத் தான் மக்கள் தேர்வு செய்ய வேண்டியவர்களாக இருக் கிறார்கள். முன்னது தேர்வு செய்யப் படுமானால், இன்றைய தினம் பயன்படுத்தப்படுவதைவிட கற்பனைக்கு எட்டாத அளவிற்குக் கொடூரமான போலீஸ் பலமும், அரச பயங்கரவாதமும் இந்தச் செழிப்பான சிறப்புப் பகுதிகளைக் காப்பதற்காக பயன்படுத்தப்படுவது அவசியமாகிறது.

■

(24ஆம் பக்கத்தின் தொடர்ச்சி)

என்றும், இருபத்தியொன்றாம் நூற்றாண்டின் ஜனநாயகம் என்ற பெயரில் பலகட்சி ஜனநாயக முறை யைப் பின்பற்ற வேண்டும் என்றும் தோழர் பிரசந்தா அறைகூவல் விடுத்துள்ளார். நமது மத்தியகுழு வானது பாட்டாளி வர்க்கத்தால் அரசியலதிகாரம் கைப்பற்றப்படாத வரையில் எந்தவொரு நாட்டிலும் உண்மையான ஜனநாயக முறை என்று கூறப்படும் அரசியலமைப்பு மக்களின் வாழ்வுகளில் அடிப்படை மாற்றத்தை ஏதும் கொண்டுவர முடியாது என்றும் சி.பி.என். (மாவோ யிஸ்ட்) கட்சிக்கும், அனைத்து மக்களுக்கும் தெள்ளத் தெளிவாக்கு கிறது. அது தெற்காசியாவின் மாவோ யிஸ்ட் கட்சிகளையும், மக்களையும் தோழர் மாவோ அவர்களால் வகுக்கப்பட்ட நீண்ட கால மக்கள் யுத்தப் பாதையில் உறுதியாக நிலை கொள்வதற்கு அறைகூவல் விடுக் கிறது. நாங்கள் சி.பி.என். (மாவோ யிஸ்ட்) கட்சிக்கு, நேபாளப் புரட்சி யின் போர்த்தந்திர திசையை உண்மையிலேயே மாற்றுகின்ற தங்களுடைய தற்போதைய செயல் தந்திரங்கள் குறித்து மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்றும், எதிர்ப் புரட்சியாளர்களின் தாக்குதல்களை எதிர்நோக்குகின்ற மக்களைத் தற்காப்பற்றவர்களாக மாற்றுகின்ற காரணத்தால் மக்கள் விடுதலை படையின் ஆயுதங்களை ஒப்படைப் பது குறித்த நேபாள அரசாங்கத் துடனான உடன் படிக்கையிலிருந்து வெளியேற வேண்டும் என்றும் மீண்டும் ஒருமுறை வேண்டுகோள் விடுக்கிறோம்.

ஆசாத்,
செய்தி தொடர்பாளர்,
மத்தியக் குழு,
இ.க.க.(மாவோயிஸ்ட்)

★

சிறப்புப்பொருளாதார மண்டலங்கள்: புதிய வடிவத்தில் காலனியமயமாக்கம்

ரஷ்மி

"விதர்பா விவசாயிகள் போன்று தற்கொலைகள் அல்ல; நாங்கள் கொலை செய்வோம்என்கிறார் மும்பையை ஒட்டி இருக்கின்ற ரய்கட் மாவட்டத்தின் பென் தாலுக்காவில் உள்ள வாசி கிராமத்தைச் சேர்ந்த ஜெயந்த் மாத்வி. இதன் பின்னணியில் முகேஷ் அம்பானியின் ரிலையன்ஸ் நிறுவனத்தால் 35,000 ஏக்கர் (14,000 ஹெக்டேர்) பரப்பளவில் உருவாக்கப்படுகின்ற சிறப்புப் பொருளாதார மண்டலத்துக்காக விவசாயிகளிடமிருந்து நிலத்தைக் கையகப்படுத்துவதற்கான அறிக்கைகள் (கடிதங்கள்) அனுப்பப் பட்டிருக் கின்றன. ஆகஸ்ட் 15-ம் நாளன்று அதே மாவட்டத்திலுள்ள உரான் தாலுக்காவின் காலபுஸ்ரே கிராமத்தில் கிராம சபை நடைபெற்றது. இதில் 100-க்கும் மேற்பட்ட மக்கள் கலந்துகொண்டு மும்பை சிறப்புப் பொருளாதார மண்டலம் அமைப்பதற்கு எதிரான தீர்மானத்தை நிறைவேற்றினார்கள். (இந்தச் சிறப்புப் பொருளாதார மண்டலம் நாட்டில் உள்ள மண்டலங்களில் மிகப் பெரிய ஒன்றாகும்). இது மாநகரத்தின் பரப்பளவில் மூன்றில் ஒரு பங்கு கொண்டது. கம்பெனியும், அதன் உள்ளூர் அதிகாரிகளும் மண்டலம் அமையப்போகும் நிலங்களை "பயன்படுத்தத் தகுதியற்ற" நிலங்கள் என்று கூறினாலும், கிராம மக்களின் கூற்றுப்படி அவை நெல் விளையும் செழிப்பான மண், மீன்பிடித்தொழிலுக்குத் தேவையான கடல் ஆகிய இரண்டும் அமையப்பெற்ற நிலங்கள் என்று கூறுகிறார்கள். அந்தக் கிராமங்களில் ஒன்றைச் சேர்ந்த விவசாயி ஒருவர், "எங்களுக்கு எந்தத் தொழிற்சாலையிலும் வேலை தேவையில்லை. எங்கள் வயிரை நிரப்புவதற்கு எங்கள் நிலங்கள் இருக்கின்றன; மரங்கள் இருக்கின்றன; கடல் இருக்கிறது" என்று கூறுகிறார். தங்களுடைய நிலங்களிலிருந்து வெளியேற்றப்படும் அபாயத்தை எதிர்நோக்கி யிருக்கும் 1200 விவசாயிகள் எழுப்பும் கேள்வி என்னவென்றால், ஏன் அரசாங்கம் சிறப்புப்பொருளாதார மண்டலங்களுக்குப் பதிலாக சிறப்பு விவசாய மண்டலங்களை உருவாக்குகிறது என்பதே ஆகும். தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கும் செய்திப்படி, ரிலையன்ஸ் நிறுவனம் இந்த நிலங்களை விலையுயர்ந்த நில விற்பனை தொழிலுக்கு மாற்ற திட்டமிட்டிருக்கிறது. அதற்குத் துணையாக அரசாங்கமும் நிலங்களை அடிமாட்டு விலைக்கு கையகப்படுத்தி, சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் அமையப் போகும் நிறுவனங்களுக்குத் தேவையான நிலங்களை ரிலையன்ஸ் நிறுவனம் விற்பனை செய்யும் பொருட்டு அதனுடைய தரகராக செயல்படுவதாகத் தெரிகிறது. அது முக்கியமான நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள், புதிய சர்வதேச விமான நிலையம் அமையவிருக்கும் இடம் ஆகியவற்றுக்கு அருகாமையிலுள்ள நில மதிப்பு மிக்க பகுதியில் உருவாகப்போகும் துணை நகரமாக அமையும். கையகப்படுத்தப்படும் 45 கிராமங்களையும் சேர்த்து, ரிலையன்ஸ் நிறுவனம் சிறப்புப் பொருளாதார மண்டலம் உருவான பிறகு அந்தப் பகுதியில் நிலத்தின் மதிப்பு உயரும் என்ற எதிர்பார்ப்பில் மேலும் விவசாய நிலங்களை அடிமாட்டு விலைக்கு வாங்கிக் கொண்டிருக்கிறது. அரசாங்கத்தின் பதிவேடுகளின் படி நிலத்தின் மதிப்பு ஒரு ஏக்கருக்கான விலை ஏறத்தாழ 1.7 இலட்சம் ரூபாய் முதல் 2.5 இலட்சம் ரூபாய் வரை கணக்கிடப்பட்டுள்ளது. ரிலையன்ஸ் நிறுவனம் இந்த நிலத்தை ஒரு ஏக்கருக்கு 3 முதல் 4 இலட்சம் வரை விலை கொடுத்து வாங்க முயற்சித்துக் கொண்டிருக்கிறது. ஆனால் அந்த நிலங்களின் சந்தை விலை, நிலத்தின் தரம் மற்றும் இடத்தைப் பொருத்து இன்றைய அளவில் 20 முதல் 40 இலட்சம் ரூபாய் வரை உள்ளது! நவிமும்பையையும் (புதிய மும்பை) மத்திய மும்பையையும் இணைக்கும் பாலம் ஒன்றைக் கட்டுவதற்கும் திட்டமிடப் பட்டுள்ளது. இந்தப் பாலத்தைக் கட்டுவதற்கான ஒப்பந்தக்காரர் போட்டியாளர்களில் ரிலையன்ஸ் நிறுவனமும் ஒன்று! மகாராஷ்டிரம் முழுவதும் இந்தச் சிறப்புப்பொருளாதார மண்டலத்திற்காக நடத்தப் படும் கட்டாய நில கையகப்படுத்தலுக்கு எதிராக விவசாயிகள் மிகப்பெரிய போராட்டங்களை நடத்தியிருக்கின்றனர்.

அனில் அம்பானியின் ரிலையன்ஸ் நிறுவனமும் இதே போன்ற ஒரு சர்ச்சையை கிளப்பியிருக்கிறது. ரிலையன்ஸ் மின்சக்தி நிறுவனம் தாதிரி (தில்லி அருகில்) என்னுமிடத்தில் அமைக்கவிருக்கும் ரிலையன்ஸ் மின்சக்தித் திட்டத்திற்காக உத்தரபிரதேச அரசாங்கம் 2, 500 ஏக்கர் விவசாய நிலங்களைக் கையகப் படுத்தியதற்கு எதிராக விவசாயிகள் மிகப்பெரிய அளவில் போராட்டங்களை நடத்தியுள்ளனர். இந்தப் போராட்டங்களுக்கு வி.பி.சிங் தாமே தலைமை தாங்கி நடத்தினார். முலாயம் சிங் அரசாங்கம் நில விலைகளின் மீது 60 விழுக்காடு மானியம் வழங்குவதாகக் குற்றஞ் சாட்டப் பட்டிருக்கிறது. அதாவது, நிலத்தின் விலையில் 60 விழுக்காடு மாநில அரசால் வழங்கப்படும்; மீதமுள்ள தொகை ரிலையன்ஸ் குழுமத்தால் கொடுக்கப்படும். இந்தச் சிறப்புப் பொருளாதார மண்டலம் அமைப்பதற்காக கையகப்படுத்தப்படுகின்ற மொத்த நிலத்தில் 400 ஏக்கர்கள் விளையாட்டு மைதானம், கல்விக்கூடம், சமுதாயக் கூடம் முதலியவற்றை அமைப்பதற்காக கிராம சபைக்கு கொடுக்கப்பட்ட நிலங்கள்

ஆகும். இந்த 400 ஏக்கர்களும் ஒரு சதுர கஜத்திற்கு 100 ரூபாய் என்ற அற்ப விலைக்கு ரிலையன்ஸ் நிறுவனத்திற்கு 99 ஆண்டுகள் ஒத்தியாக விடப்பட்டுள்ளன. மீதமுள்ள 21,000 ஏக்கர்கள் ஒரு சதுர கஜத்திற்கு 150 ரூபாய் என்ற விலைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. வேடிக்கை என்னவென்றால், இந்தத் திட்டமானது ஒப்புதல்கள் வழங்கும் வாரியக் குழுவிடம் ஒப்புதல் பெறுவதற்கு முன்பாகவே முலாயம் சிங் அரசாங்கம் ரிலையன்ஸ் நிறுவனத்திற்கு 25,000 ஏக்கர் நிலங்கள் வழங்குவதற்கு முன்வராததோடு, அதற்காகச் சில ஏக்கர் நிலங்களையும் கையகப் படுத்தியது.

தில்லியை ஒட்டியுள்ள தேசிய தலைநகரப் பகுதியில் (National Capital Region) 4.2 இலட்சம் ஹெக்டேர்கள் அரசாங்க நிறுவனங்களால் கையகப் படுத்தப்பட்டதோடு, அந்நிறுவனங்கள் அந்த நிலத்தை, சொத்துக்களை உருவாக்கு பவர்களுக்கும்(Property developers) பெரும் நிறுவனங்களுக்கும் விற்பதற்குத் திட்டமிட்டுள்ளன. தில்லி வளர்ச்சி ஆணையம்(DDA) அடுக்குமாடி கட்டடம் பெரும் நிறுவனங்களுக்கு வழங்கும் பொருட்டு 1 இலட்சம் ஏக்கர்களை கையகப் படுத்தியிருக்கிறது. விரிவாக்கப்பட்ட நொய்டா ஆணையம் (Greater Noida Authority)தில்லியை ஒட்டி 80,000 ஏக்கர்களையும், ஹட்கோ நிறுவனம் அரியானாவில் உள்ள பரிதாபாத் என்னுமிடத்தில் 40,000 ஏக்கர்களையும் கையகப்படுத்தி இருக்கின்றன. அது போல, காஜியாபாத் என்னுமிடத்தை ஒட்டியுள்ள பகுதியில் விவசாயிகளிடமிருந்து ஆயிரக் கணக்கான ஏக்கர் நிலங்கள் சதுர அடிக்கு 50 ரூபாய் என்று அடிமாட்டு விலைக்கு வாங்கப்படுகின்றன. ஆனால் அங்கு நிலவும் சந்தை விலையோ 20 முதல் 100 மடங்கு வரை அதிகமாக இருக்கின்றது.

தென் கொரியாவின் இராட்சத இரும்புத் தொழில் நிறுவனமான பாஸ்கோ (POSCO) நிறுவனத்திற்கு நிலமும், சலுகைகளும் வழங்கிய தால் ஏற்கனவே எதிர்ப்பைச் சந்தித்து வருகின்ற ஒரிசா மாநில அரசாங்கம் தற்போது அதே நிறுவனத்திற்கு ஜெகத்சிங்பூர் மாவட்டத்தில் 1601 ஹெக்டேர் பரப்பளவில் பல்பொருட்கள் உற்பத்தி செய்யும் சிறப்புப் பொருளாதார மண்டலத்தை அமைக்க கொள்கையளவில் ஒப்புதல் அளித் துள்ளது. அனுமதி வழங்கப்படுவதற்கு முன்பே, மாநில அரசாங்கம் அந்த நிறுவனத்துக்கு ஏக்கருக்கு 25,000 ரூபாய் என்ற விலையில் 1100 ஏக்கருக்கும் கூடுதலான விவசாய நிலங்களை கைமாற்றியிருக்கிறது.

தாங்களும் சளைத்தவர்கள் அல்ல என்ற பாணியில், கேரளா மற்றும் மேற்கு வங்கத்தில் ஆட்சியில் இருக்கின்ற இடதுசாரி அரசாங்கங்களும் சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் அமைக்கும் பணியில் குதித்திருக்கின்றன. உண்மையில், வேறு சில மாநிலங்களில் விவசாய நிலங்கள் "அமைதி மறுக்கப்பட்ட" பகுதிகள் என்று அறிவிக்கப் பட்டுள்ள போதிலும், இவர்களுக்கு விவசாய நிலங்களை சிறப்புப் பொருளாதார மண்டலத்தின் கட்டமைப்பாளர்களுக்குத் தாரை வார்ப்பதில் எவ்வித பிரச்சனைகளும் இல்லை.

மேற்கு வங்கத்தில் ஏற்கனவே எட்டு பெரிய (மெகா) சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் அமைக்கும் திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கும் வாரியம் கொள்கையளவில் ஒப்புதல் அளித்துள்ளது. அல்தியா மாவட்டத்தில் 22,500 ஏக்கர் மொத்த நிலப்பரப்பில் இந்தோநேசியாவின் சலீம் குழுமத்தால் அமைக்கப்படவிருக்கும் இரண்டு சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் தான் இந்தத் திட்டங்களுள் மிகப்பெரியதாகும். எஞ்சியிருக்கும் 6 சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் நிலப் பற்றாக்குறை மிக்க வடக்கு 24 - பர்கானா மற்றும் அவ்ரா மாவட்டங்களில் அமைக்கப்பட விருக்கின்றன. மூன்று சிறப்புப் பொருளாதார மண்டலங்களை அமைப்பதற்கு அனுமதி பெற்றிருக்கும் வீடியோகான் நிறுவனத்திற்கு வடக்கு 24-பர்கானாவில் தன்னுடைய திட்டங்களில் ஒன்றை அமைப்பதற்கு 2,700 ஏக்கர்களும், அதே மாவட்டத்தில் தனது மற்றொரு திட்டத்திற்கு 310 ஏக்கர்களும் தேவைப் படுகின்றன.

சிறப்புப் பொருளாதார மண்டலச் சட்டம் 2005-ஆம் நிறைவேற்றப்பட்ட நாள் முதல் நாடு முழுவதும் சிறப்புப் பொருளாதார மண்டலங்களை அமைப்பதற்கு அனுமதி கோரி எண்ணற்ற விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன. ஒட்டுமொத்த உலகம் முழுவதும் வெறும் 400 சிறப்புப் பொருளாதார மண்டலங்களும், சீனாவில் வெறும் 6 சிறப்புப் பொருளாதார மண்டலங்களும் இருக்கின்றபோது இந்தியாவில் கடந்த ஓராண்டிற்குள்ளாக 200-க்கும் அதிகமான திட்டங்களுக்கு ஒப்புதல்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. அவற்றில் மகாராஷ்டிரா மாநிலத்தில் மட்டும் 48 திட்டங்கள் ஆகும். அக்டோபர், 2006 வரையில் ஒப்புதல் வழங்கும் வாரியம் நாடு முழுவதும் 181 சிறப்புப் பொருளாதார மண்டலத் திட்டங்களுக்கு முறையான ஒப்புதல் வழங்கியிருக்கிறது. மேலும் 128 திட்டங்களுக்கு அது கொள்கையளவிலான ஒப்புதல் வழங்கியிருக்கிறது. சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் அமைப்பதற்கு அனுமதி கோருகின்ற விண்ணப்பங்களின் அடிப்படையில் கணக்கிடப்பட்ட அதிகாரப் பூர்வமற்ற புள்ளிவிவரங்களின் படி 181 திட்டங்களுக்காக ஏற்கனவே கையகப்படுத்தப்பட்ட அல்லது கையகப்படுத்தப்பட இருக்கின்ற மொத்தப் பரப்பு 30,000 ஹெக்டேர்கள் ஆகும். இதனுடன் கொள்கையளவில் ஒப்புதல் வழங்கப்பட்ட திட்டங்கள் மற்றும் "பரிசீலனையில் உள்ள திட்டங்கள்" ஆகியவற்றையும் சேர்த்தால், தேவைப்படும் மொத்த நிலப்பரப்பு 1,25,000 ஹெக்டேர்கள் ஆக இருக்கும். அதாவது தில்லியின் நிலப்பரப்புக்கு இணையான அளவு இது!

அக்டோபர் மாதம் 10-ஆம் தேதியும், 29ஆம் தேதியும் மேலும் ஒப்புதல்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. 2006ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 10-ஆம் தேதி 510 ஹெக்டேர்கள் மொத்த நிலப்பரப்பைக் கோரும் 26 திட்டங்களுக்கு முறையான ஒப்புதல்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. அக்டோபர் 29-ஆம் தேதியன்று வழங்கப்பட்ட 25 முறையான ஒப்புதல்கள் மற்றும் 21 கொள்கையளவிலான ஒப்புதல்கள் ஆகியவற்றில் அரியானா மாநிலத்தின் அன்சல் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட ஒப்புதல்களும் அடங்கும்.

சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்கு எதிரான மக்களின் பரவலான எதிர்ப்புகளுக்கு அப்பால், இந்திய அரசாங்கத்திற்குள்ளேயே, குறிப்பாக வணிகத்துறை அமைச்சகத்திற்கும் நிதி அமைச்சகத்திற்கும் இடையே சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்கான செலவுகள் மற்றும் நன்மைகள் குறித்து விவாதங்கள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. இவ்வளவு குழப்பமான சூழ்நிலை நிலவும் போதும், வணிகத்துறை அமைச்சகமும், அதன் கீழ் இயங்கும் சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்கான ஒப்புதல் வழங்கும் வாரியமும், துரிதகதியில் ஒப்புதல்களை வழங்கிக் கொண்டிருக்கின்றன.

சிறப்புப் பொருளாதார மண்டலம்:

அதன் பொருள் என்ன?

சிறப்புப் பொருளாதார மண்டலம் குறித்த கருத்துரு (திட்டம்) தேசிய ஜனநாயகக் கூட்டணியில் வணிகத் துறை அமைச்சராக அங்கம் வகித்த முரசொலி மாறனால் 2000 ஆம் ஆண்டு முன்வைக்கப்பட்டது. வரிகள் மற்றும் தீர்வைகள் ஆகியவற்றிலிருந்து விலக்களிக்கப்பட்ட பொருட்கள் மற்றும் சேவைகள் கிடைக்க ஏற்பாடு செய்வது, ஏற்றுமதி உற்பத்திக்காக ஒருங் கிணைக்கப்பட்ட உள்கட்டமைப்புகளை உருவாக்குவது, துரித ஒப்புதல் வழங்கும் முறைகளை உருவாக்குவது, ஏற்றுமதிகளை ஊக்குவிக்கும் பொருட்டு அன்னிய மற்றும் உள்ளூர் முதலீடுகளைக் கவருவதற்காகச் சலுகைகளின் முடிப்பை வழங்குவது, உள்ளிட்டவைதான் சிறப்புப் பொருளாதார மண்டலங்களின் குறிக்கோள்கள் ஆகும். சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் குறித்த கொள்கை அந்நிய வர்த்தகக் கொள்கையில் இடம் பெற்றிருக்கிறது எனினும், சிறப்புப் பொருளாதார மண்டலத்தின் கட்டமைப்பாளர்களுக்கும், அதில் இயங்குகின்ற நிறுவனங்களுக்கும் வழங்கப்படுகின்ற சலுகைகள் மற்றும் இன்னபிற வசதிகள் ஆகியவை அமைச்சகங்கள் மற்றும் சம்பந்தப்பட்ட துறைகள் ஆகியவற்றால் வெளியிடப்படும் பல்வேறு அறிவிப்புகள் மற்றும் சுற்றறிக்கைகள் மூலமாக நடைமுறைப்படுத்தப்படுகின்றன. சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்கான வழிகாட்டு நெறிகள் 1997-2002 ஏற்றுமதி இறக்குமதிக் கொள்கை வரையறையில் சேர்க்கப்பட்டுள்ளன.

ஜனநாயக முற்போக்குக் கூட்டணி அரசாங்கம், 2004-ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த பிறகு, உள்கட்டமைப்பு வளர்ச்சிக்குத் தேவையான கணிசமான பண முதலீடு செய்வதற்கு, முதலீட்டாளர்களை நடைமுறையில் உள்ள அமைப்பானது போதியளவு ஊக்குவிக்கவில்லை என்று எண்ணியது. அதுதான் சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்காகக் கொண்டு வரப்பட்ட மத்திய சட்டத்திற்கு அடிப்படையாக விளங்கியது. சிறப்புப் பொருளாதார மண்டலம் குறித்த மசோதா மக்களவையில் மே 10, 2005 அன்று அறிமுகப்படுத்தப்பட்டது; மே12, 2005 அன்று பாராளுமன்றத்தின் இரு அவைகளாலும் நிறைவேற்றப்பட்டது. ஜூன் 23, 2005 அன்று அது குடியரசு தலைவரின் ஒப்புதலையும் பெற்றது. ஒப்புதல்கள் வழங்கும் வாரியம் மார்ச், 2006-ல் நடைபெற்ற தனது முதல் கூட்டத்தில் அதற்கு வந்திருந்த 166 விண்ணப்பங்களில் 148 விண்ணப்பங்களுக்கு ஒப்புதல் வழங்கியது.

வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகம் கூறும்போது "சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் என்பது உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதைப் பற்றியது என்றும், உள்கட்டமைப்பு என்பது சாலைகள், துறைமுகங்கள், விமான நிலையங்கள் பற்றியது மட்டுமல்ல; மாறாக அது தொழில் பூங்காக்கள் மற்றும் தொழில்நுட்பப் பூங்காக்கள் போன்ற தொழில் இடங்கள் பற்றியதும் ஆகும்" என்றும் கூறியது. ஒப்புதல் வழங்கும் முறைக்கு, மாநில அரசாங்கத்தால் ஒரு தனியார் நிறுவனத்திடமிருந்து விண்ணப்பம் பெறப்பட வேண்டும். இந்த விண்ணப்பம் மாநில அளவில் வழங்கப்படும் ஆரம்பக்கட்ட ஒப்புதலுக்குப் பிறகு மத்திய வர்த்தக அமைச்சகத்திற்கு அனுப்பி வைக்கப்படும். இது பின்னர் "பரிசீலனையில் உள்ளது" என்ற கட்டத்தில் வைக்கப்படும்; பின்னர் இதற்கு "கொள்கையளவிலான ஒப்புதல்" மற்றும் "முறையான ஒப்புதல்" ஆகியவை வழங்கப்படுகின்றன. இறுதிக் கட்டமாக திட்டம் குறித்த அறிவிப்பு வெளியிடப்படும்.

சிறப்புப் பொருளாதார மண்டலங்களில் இரண்டு வகைப்பட்டவர்கள் பங்கு வகிக்கிறார்கள். ஒன்று, கட்டமைப்பாளர் (உருவாக்குபவர்) அல்லது கட்டமைப்பு நிறுவனம்; இரண்டாவது, தொழிலதிபர் அல்லது தொழில் நிறுவனம். சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிலத்தில் உள்கட்டமைப்புகள் மற்றும் பிற வசதிகள் உருவாக்கித் தருவது முதல் வகைப்பட்டவரின் கடமை. பின்னர், அந்த கட்டமைப்பாளர் தொழிலதிபர் அல்லது தொழில் நிறுவனங்களை, வரிவிலக்கு மற்றும் பிற சலுகைகளை சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு தொழில்கள் நிறுவுவதற்கு அழைப்பு விடுக்கிறார். இரண்டு வகைப்பட்ட பங்காளர்களுக்கும் பெருவாரியான சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன என்பதை பின்வரும் அட்டவணையின் மூலம் காணலாம்.

கட்டமைப்பாளர்களுக்கு வழங்கப்படும் ஊக்கச் சலுகைகள் :

சிறப்புப் பொருளாதார மண்டலங்களில் உள்ள தொழில் நிறுவனங்களுக்கு அளிக்கப்படும் சலுகைகள் :

★ சிறப்புப்பொருளாதார மண்டலங்களை கட்டமைப்பதற்கும், இயக்குவதற்கும் தேவையான பொருட்களை இறக்குமதி செய்வதற்கும், வாங்குவதற்கும் வரி விலக்கு.

★ வர்த்தகத்திற்கும், வரிகளுக்கும் அன்னியப் பிரதேசமாகக் கருதப்படுகிற வரிவிலக்கு பெற்ற பாதுகாக்கப்பட்ட பகுதி.

★ 15 ஆண்டுகளில் ஏதேனும் 10 ஆண்டுகள் தொகுப்பிற்கு வருமானவரி விலக்கு.

★ இறக்குமதிகளுக்கு உரிமங்கள் தேவை இல்லை.

★ உருவாக்கப்பட்டுள்ள மனைகளை அங்கீகரிக்கப்பட்ட தொழில் நிறுவனங்களுக்கு வர்த்தக ரீதியில் வழங்குவதற்கான சுதந்திரம்.

★ இறக்குமதிகளுக்குச் சுங்கவரி விலக்கு.

★ நகரப் பகுதியை உருவாக்குவதற்கு வெளி நாட்டு நிதி.

சிறப்புப் பொருளாதார மண்டலங்களில் உள்ள தொழில் நிறுவனங்களுக்கு அளிக்கப்படும் சலுகைகள் :

★ உள்ளூர் சந்தையிலிருந்து வாங்கப்படுகின்ற தொழில் கட்டுமானப் பொருட்கள், மூலப் பொருட்களுக்கு ஆயத்தீர்வையிலிருந்து விலக்கு.

★ உள்ளூர் வரி விதிப்புப் பகுதியிலிருந்து சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்குப் பொருட்களை அனுப்பி வைப்பது ஏற்றுமதிகளாக கருதப்படும்.

★ ஐந்து ஆண்டுகள் தொகுப்பிற்கு 100% வருமானவரி விலக்கும், மூன்று ஆண்டுகள் தொகுப்பிற்கு 50% விலக்கும் அளிக்கப்படுகிறது. அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு 50% இலாபத்தை மறு முதலீடு செய்ய அனுமதி.

★ வெளிநாட்டு வங்கிகளுக்கு மூன்று ஆண்டுகளுக்கு 100% வருமான வரி விலக்கு; இரண்டு ஆண்டுகளுக்கு 50% விலக்கு.

★ வெளிநாட்டிலும் துணை குத்தகைக்கு விடுவதற்கான சுதந்திரம்.

★ சில பிரிவுகளைத் தவிர்த்து உற்பத்தித் துறையில் தடங்கலின்றி 100% அன்னிய முதலீடு செய்ய அனுமதி.

★ சிறிய தொழிற்சாலைகள் உற்பத்தி செய்ய அனுமதிக்கப்பட்ட பொருட்களின் மீதான அன்னிய முதலீட்டுக்கு உச்சவரம்பு நீக்கம்.

★ சிறிய தொழிற்சாலைகள் உற்பத்தி செய்ய அனுமதிக்கப்பட்ட பொருட்களுக்குத் தொழில் உரிமம் பெறத் தேவையில்லை.

சிறப்புப் பொருளாதார மண்டலத்திற்குத் தேவையான நிலத்தைக் கையகப்படுத்துவதற்காக அரசாங்கமானது கறுப்புச் சட்டமான நிலம் கையகப்படுத்தும் சட்டத்தைப் பயன்படுத்துகிறது. இந்தச் சட்டத்தின் படி, பொதுத் தேவைக்காக நிலத்தைக் கையகப்படுத்த அரசாங்கம் அனுமதிக்கப்படுகிறது. பொதுவாகச் சந்தை விலைக்கும் குறைவான விலைக்கு நிலத்தைக் கையகப்படுத்துவதற்கும் அல்லது விருப்பமற்றவர்களிட மிருந்து நிலத்தைப் பறிப்பதற்கும் சட்டத்தால் அரசுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரம் தான் பெரிய சுரங்கங்களை அமைப்பதற்கும், தொழிற் சாலைகளைக் கட்டமைப்பதற்கும், அணைகள் கட்டுவதற்கும் தேவையான நிலத்தைக் கையகப்படுத்துவதற்குப் பரந்த அளவில் பயன்படுத்தப்படுகின்றது. இதே அதிகாரம் தான் சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்குத் தேவையான நிலத்தையும் கையகப்படுத்துவதற்குப் பயன் படுத்தப்படுகின்றனது. உண்மை என்னவெனில், இந்தச் சிறப்பு மண்டலங்கள் பற்றிய அனைத்தும் சிறப்புத்தன்மை வாய்ந்ததாக இருக்கிறது. அதாவது, வரிவிதிப்பு முறை, பல்வகைப்பட்ட அரசு மானியங்களை அனுபவிப்பது, தொழில் களைச் சாதாரணமாகக் கட்டுப்படுத்தும் சட்டங்கள், குறிப்பாக அனைத்துத் தொழிலாளர் சட்டங்களிலிருந்தும் பாதுகாப்பு (விலக்கு) ஆகியவையனைத்தும் இந்தச் சிறப்புத்தன்மைகளுள் அடங்கும். மேலும்,இதன் குறிப்பான சிறப்பு அம்சம் என்னவென்றால், அவை இந்திய நிலப்பகுதிக்குள்ளேயே பாதுகாக்கப்பட்ட வெளிநாட்டுப் பகுதிகளாக இருப்பதே ஆகும்!

சிறப்புப் பொருளாதார மண்டலச் சட்டமும், நூற்றுக்கணக்கான விண்ணப்பங்களும் பெரும் சர்ச்சையையும், எதிர்ப்பையும் உருவாக்கியிருப்பதில் வியப்பேதும் இல்லை. சில விவாதத்திற்குள்ளான பிரச்சனை பற்றி இப்போது நாம் பார்ப்போம்.

ஏற்றுமதியை ஊக்குவிக்கும் மற்றும் தொழில்துறையை வளர்க்கும் என்பது பற்றிய மாயை

ஏற்றுமதிகளை ஊக்குவிப்பது சிறப்புப் பொருளாதார மண்டலங்களின் முக்கியமான குறிக்கோள்களில் ஒன்று என்று அரசாங்கம் கூறுகிறது. சிறப்புப் பொருளாதார மண்டலம் குறித்த கொள்கை என்பது முன்னர் உருவாக்கப்பட்ட கொள்கைகளான சுதந்திர வர்த்தகப் பகுதிகள் (Free Trade zones-இவை இப்போது சிறப்புப் பொருளாதார மண்டலங்களாக மாற்றப்பட்டிருக்கின்றன) மற்றும் 100 விழுக்காடு ஏற்றுமதி சார்ந்த தொழில்கள் (Export Oriented Units- EOUs) ஆகியவற்றின் விரிவுபடுத்தப்பட்ட கொள்கையே

ஆகும். ஏற்றுமதி இலக்குகளை எட்டுகின்ற தொழில்களாக இருந்தும் சுதந்திர வர்த்தகப் பகுதிகளில் இடம்பெயர விரும்பாத காரணத்தால் சுதந்திர வர்த்தகப் பகுதிகளுக்கு வழங்கப்பட்ட சலுகைகள் கிடைக்க முடியாமல் போய்விடக் கூடாது என்பதற்காகத்தான் 100 விழுக்காடு ஏற்றுமதி சார்ந்த தொழில் கொள்கை வகுக்கப்பட்டது. இப்போது கொள்கை மாற்றப்பட்டு சிறப்புப் பொருளாதாரக் கொள்கையானது ஒதுக்கப்பட்ட இடத்தில் சிறப்புச் சலுகைகள் வழங்குவதன் மூலமாக இறக்குமதித் தொழில்களைக் குவிப்பதற்கு மீண்டும் முனைவதாக தெரிகிறது. ஏற்றுமதித் தொழில்கள் சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்கு மாற்றப்பட வேண்டும்? இதற்கான பதில், ஒரு தொழிலை சிறப்புச் சலுகைகள் கோருகின்ற ஏற்றுமதித் தொழில் என்று கருதப்படுவதற்குத் தேவையான நிபந்தனைகளை புதிய கொள்கைகளின் கீழ் அரசாங்கம் தளர்த்தியிருப்பதில் அடங்கியிருக்கிறது. ஏற்றுமதி சார்ந்த தொழில்களுக்குத் தேவைப்படுவது போல உள்ளூர் வரிவிதிப்புப் பகுதிகளில் நடைபெறுகின்ற விற்பனைகளுக்கும், ஏற்றுமதிகளின் மதிப்புக்கும் இடையேயான விகிதத்தின் மீது எவ்விதமான உச்சவரம்பும் இல்லை. சாதகமான நிகர அன்னியச் செலாவணிகளின் வருவாயைப் பெருக்குவதற்கு உத்தரவாதப்படுத்துவது தான் ஏற்றுமதியாளர் என்ற தகுதியைப் பெறுவதற்கான ஒரே தேவையாகும். இதன் பொருள், அந்தத் தொழில் நிறுவனம் ஏற்றுமதிகளின் வெளிப்படையான தேவைக்காக உற்பத்தி செய்ய வேண்டியதில்லை. அது இந்தியாவின் அன்னியச் செலாவணிக் கையிருப்புகளை தீர்ந்து போய்விடாமல் இருப்பதற்கு உத்தரவாதப்படுத்தினாலே போதும். சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் ஏற்றுமதிகளின் தளமாக செயல்படுவதைக் காட்டிலும் இந்தியாவில் இருக்கின்ற மிகப்பெரிய உள்ளூர்ச் சந்தையில் நுழைவதற்கு சாதகமான கருவியாக மேலும் கவர்ச்சிகரமான திட்டமாக மாறியிருக்கிறது. ஒரு ஆய்வின்படி, 2003 - 04 ஆம் ஆண்டின் போது, எட்டு சிறப்புப் பொருளாதார மண்டலங்களின் ஏற்றுமதிகள் 13, 853.58 கோடி ரூபாயாக இருந்தது. இது மொத்த ஏற்றுமதியில் 0.047% ஆகும். 2004 - 05 ஆம் ஆண்டின்போது, பதினோரு சிறப்புப் பொருளாதார மண்டலங்களின் ஏற்றுமதி வருவாய் 18,309 கோடி ரூபாயாக இருந்தது. இது மொத்த ஏற்றுமதி வருவாயில் வெறும் 0.05% ஆகும். இந்த சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் ஒரு இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு அளித்தது. மற்றொருபுறம், சிறு தொழில் பிரிவு மொத்த நேரடி ஏற்றுமதிகளில் 35% ஏற்றுமதிக்குக் காரணமாக இருந்தது, 200 இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு அளித்தது. (சிறு தொழில் அமைச்சகம், ஆண்டறிக்கை 2002-03)

சிறப்புப் பொருளாதார மண்டலச் சட்டம் அதன் கட்டமைப்பாளரின் கையில் இருக்கின்ற நிலத்தில் 75% நிலத்தைத் தொழில் அல்லாத தேவைகளுக்காகப் பயன்படுத்துவதற்குத் தெளிவாக அனுமதிக்கிறது. இது வீட்டு வசதிகள், கேளிக்கை வசதிகள் போன்ற சமூக உள்கட்டமைப்பு வளர்ச்சிக்காகத் தேவைப்படுகிறது என்ற வாதத்தின் மூலம் அரசாங்கம் இதனை நியாயப்படுத்த முயற்சிக்கிறது. இது முற்றிலும் நேர்மையற்ற வாதமாகும். சி.பி.எம். கட்சி கூட சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் குறைந்தபட்சம் 50% நிலத்தைத் தொழில் தேவைக்காகப் பயன்படுத்த வேண்டும் என்கின்ற அளவுக்குதான் சட்டத்திருத்தம் கொண்டுவரப்பட வேண்டும் என்று கூறுகிறது.

யதார்த்தத்தில் இது நில விற்பனைத் தொழில் கொள்கைக்காக வழங்கப்பட்டுள்ள வெளிப்படையான உரிமமே தவிர வேறல்ல. வேடிக்கை என்னவென்றால் தனியார் கையில்இருக்கும் சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்கான நிலத்திற்கு எந்த உச்சவரம்பும் விதிக்கப் படவில்லை என்பதேயாகும். நிலம் கையகப்படுத்துதல் தொடர்பான பிரச்சனை குறித்துப் பேசுகின்ற சிறப்பு பொருளாதார மண்டல சட்டத்தின் பிரிவு 5 (2) கூட சிறப்புப் பொருளாதார மண்டலங்களின் வெவ்வேறு வகைகளுக்குத் தேவைப்படும் குறைந்தபட்சம் (அதிகபட்சம் அல்ல) நிலப் பகுதியைக் குறித்து தான் பேசுகிறது. எனவே, பெரிய நகர்ப்புற மையங்களை ஒட்டியுள்ள பகுதிகளில் சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் அமைப்பதற்காகப் பெருவாரியாக விண்ணப்பங்கள் வந்ததில் வியப்பேதுமில்லை. மேலும் சிறப்புப் பொருளாதார மண்டலத்தைக் கட்டமைப்பதற்கான போட்டியில் கலந்துகொள்ள நில விற்பனைத் தொழில் நிறுவனமான அன்சால் நிறுவனமும் ஆர்வம் காட்டுவதில் துளியும் கூட வியப்பில்லை.

தொழில் மற்றும் ஏற்றுமதிகளின் வளர்ச்சி ஆகிய காரணத்திற்காக நடைபெறும் பெரு வாரியான நிலம் கையகப்படுத்தும் நடவடிக்கையானது அரசாங்கமே பெரும் முதலாளிகளுக்கு நிலத்தை வாங்கிக் கொடுக்கும் தரகராகச் செயல்படுவதால் உண்மையிலேயே நிலமோசடி நடைபெறுவதற்குத் தான் துணை செய்யும். பொருளாதார வளர்ச்சிக்கான உந்துசக்தியாக விளங்குகிறது என்று கூறப்படுவதெல்லாம் நிலத்தை அடிமாட்டு விலைக்கு கையகப்படுத்தும், சலுகைகள் மற்றும் பயன்களை அனுபவிப்பதற்கும், கொள்ளை இலாபங்கள் ஈட்டுவதற்குமான உந்துசக்தியாக விளங்குகிறதேயன்றி வேறல்ல.

வெளியேற்றம் மற்றும் உணவுப் பாதுகாப்பு

புகழ்பெற்ற வரலாற்றாய்வாளரான அமித் சர்கார் சிறப்புப் பொருளாதார மண்டலங்களை "நவீன இந்திய வரலாற்றில் மிகப்பெரிய நில அபகரிப்பு இயக்கம்" என்று வர்ணித்தார். சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் அமைப்பதற்காக பெருவாரியான செழிப்பு மிக்க விவசாய நிலங்கள் கையகப்படுத்தப்படுகின்றன. இதற்குக் கடும் எதிர்ப்பு எழுந்த போது, சோனியா காந்தி

விவசாய நிலங்கள் சுருங்கி வருவதைக் குறித்துக் கவலை தெரிவித்தார். ஆனால் இந்தக் கவலை வெறும் உதட்டளவில் தான் உள்ளது என்பதை இந்த ஆண்டு செப்டம்பர் மாதம் மத்திய வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கமல்நாத் அனைத்து மாநில முதலமைச்சர்களுக்கு எழுதிய கடிதத்தின் வாயிலாகத் தெரியவரும். அந்த கடிதம் கூறுவதாவது: "குறைந்த பட்சம் நிலத்தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக மட்டுமே விவசாய நிலம் கையகப்படுத்தப்பட வேண்டும்"

"தேவைப்பட்டால் ஒரு போகம் விளையும் விவசாய நிலத்தை மட்டும் தான் கையகப்படுத்த வேண்டும்",

"தவிர்க்க முடியாமல் இரு போகம் விளையக்கூடிய விவசாய நிலத்தின் ஒரு பகுதி கையகப்படுத்தப்பட வேண்டியிருந்ததால் ... அது சிறப்புப் பொருளாதார மண்டலம் அமைப்பதற்குத் தேவையான மொத்த நிலத்தில் 10% கூடுதலாக இருக்கக் கூடாது". மிகத் தெளிவாக, சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் அமைப்பதற்கு விவசாய நிலத்தைப் பயன்படுத்துவதன் மீது தடை விதிக்கும் எண்ணம் ஏதுமில்லை. மேற்கு வங்க மாநிலத் தொழிலமைச்சர் நிருபம் சென் கூறும் போது, பெருவாரியான நிலங்கள் தேவைப்படுவ தாலும், மாநிலத்தில் மக்கட்தொகையின் அடர்த்தி மிக உயர்வாக இருப்பதாலும், பல்போகம் விளையும் நிலத்தைக் கையகப்படுத்தாமல் இருப்பது எப்போதும் சாத்தியமில்லை என்று மிகத்தெளிவாகக் கூறுகிறார்.

நாட்டில் ஏற்கனவே விவசாயம் அரசால் புறக் கணிக்கப்பட்டுள்ள சூழ்நிலையில், இது இந்தத் துறையை மேலும் வீழ்ச்சியடையவே செய்யும். இது நமது உணவு தானியங்கள் உற்பத்திக்கும், உணவுப் பாதுகாப்பிற்கும் சாவு மணி அடிக்கும். உதாரணத்திற்கு, அரியானா மாநிலத்தில் உள்ள ஜஜ்ஜார் மாவட்டத்தில் 10,000 ஹெக்டேர் பரப்பளவில் அமையவிருக்கும் சிறப்புப் பொருளாதார மண்டலத்தைப் பாருங்கள். இதுவரையில், சிறப்புப் பொருளாதார மண்டலத் தால் எடுத்துக் கொள்ளப்பட்ட நிலமானது காலவரை யறையற்றவாறு 2.4 இலட்சம் மக்களுக்கு உண வளிக்கும் வகையில் உற்பத்தி செய்கிறது. இதுபோன்ற நூறு சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் 2.4 கோடி மக்களை அல்லது மக்கள்தொகையில் 2% பேர்களைப் பாதிக்கும். இந்த மக்கள்தொகை முழுவதுமாக பட்டினிக் குள்ளாக்குவதோடு, இந்த மக்கள்தொகையின் பெரும் பாலான பகுதியினர் அரைபட்டினிக்கு உள்ளாக்கப் படுவார்கள். தற்போதைய நில வரத்தில், ஒரு நபருக்குக் கிடைக்கின்ற உணவு தானியங்கள் உலகத்தின் சராசரி யான 309 கிலோவை ஒப்பிடுகையில் இந்தியாவில் 200 கிலோவாகத்தான் இருக்கிறது. இதன் பொருள் என்ன வென்றால், சிறப்புப் பொருளாதார மண்டலங்களை அமைக்கும் போக்கானது இந்தியாவை வறட்சிப் பகுதிகளைக் கொண்ட நாடு என்ற நிலையிலிருந்து முற்றிலுமான வறட்சிப் பகுதியாக மாற்றிவிடும். எதிர்காலத்தில் நாம் தொடர்ச்சியான அடிப்படையில் உணவை இறக்குமதி செய்ய வேண்டியிருக்கும். மேலும், மிகப்பெரிய ஏற்றுமதியாளராக அமெரிக்கா திகழ்கின்ற காரணத்தால் இந்தியா மேன்மேலும் அதனுடைய கருணையை நம்பியிருக்க வேண்டிய நிலையில் இருக்கும்!

ஏற்றுமதி அதிகரிப்பை விட்டுவிடுவோம்! நமது உணவு தானியத் தேவைகள் குறித்த விஷயத்திலும் சிறப்புப்பொருளாதார மண்டலங்கள் நம்மை அபாய கரமான நிலைக்குத் தள்ளிவிடுகின்றன.

கையகப்படுத்தப்படுகின்ற நிலங்களின் அளவு கூட நிலத்தின் உடைமையாளர்கள் மற்றும் தங்களுடைய வாழ்விற்காக இந்த நிலங்களைச் சார்ந்திருப்பவர்கள் ஆகிய இரு சாராரின் பெருவாரியான வெளியேற் றத்தைக் குறிக்கிறது. எனவே, நாடு முழுவதும் விவசாயிகள் சிறப்புப் பொருளாதார மண்டலங்களைக் கடுமையாக எதிர்ப்பதில் வியப்பேதுமில்லை. மகா ராஷ்டிரா மாநிலத்தில் உள்ள ரய்கட் மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயி ஒருவர் கூறுகையில், "எங்களுக்கு எங்களுடைய நிலம் இருக்கிறது; நாங்கள் சேரிகளில் வாழ முடியாது; (அவ்வாறு வாழ்ந்தால்) அரசாங்கம் எங்களை அந்த இடத்திலிருந்தும் தூக்கி வீசும். ஏற்கனவே நாங்கள் எங்களுடைய நிலத்தை 13 அணைகள், பூனே விரைவுச்சாலை, பெட்ரோல் குழாய்கள் ஆகியவற்றை அமைப்பதற்கான பல்வேறு திட்டங்களுக்குத் தியாகம் செய்து விட்டோம்; இப்போது அவர்கள் எல்லாவற்றையும் எடுத்துக் கொள்ள முயற்சிக்கிறார்கள். எங்களுக்குப் பணம் தேவையில்லை".

வி.பி.சிங் கூறுவது போல, "தன்னுடைய நிலத்தின் உடைமையாளன் என்ற வகையில் ஒரு விவசாயி தன்னுடைய சொத்தை விட்டுக் கொடுப்பதற்கான நிபந்தனைகளைக் குறித்து முடிவு செய்வதற்கு வாய்ப்பற்றவராக இருக்கிறார். மேலும் நாட்டின் தற்கொலைப் பகுதிகளில் நிலத்தின் விலைகள் கடுமையாக வீழ்ச்சியடைந்திருப்பதாக செவிவழிச் செய்திகள் கூறுகின்றன. விவசாயிகளுக்குச் சந்தை விலை வழங்கப்பட்டாலும்கூட, இது விவசாயிகளிட மிருந்து குறைந்த விலைக்கு நிலத்தை வாங்குவதற்கும், அதனைத் தொழில் நிறுவனத்தின் தேவைகளுக்குத் திருப்பி விடுவதற்கும் உகந்த நேரமாக அமையும். மீண்டும் ஒரு முறை, நாட்டின் வளர்ச்சி என்று சொல்லப் படுவதானது விவசாயிகள் மற்றும் பெருவாரியான மக்களின் நலன்களைக் காவு கொடுத்து பெரும் மூலதனத்தினுடைய இலாபங்களை அதிகரிப்பதற்குத் தான் சேவை செய்யும்".

நிதி இழப்பு

சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் அமைக்கும் திட்டமானது மத்திய வர்த்தகத்துறை அமைச்சர் கமல் நாத்துக்கும் மத்திய நிதியமைச்சர் ப.சிதம்பரத்திற்கும் இடையிலும் சர்ச்சையை கிளப்பியிருக்கிறது. நிதி யமைச்சரின் கூற்றுப்படி, சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் இப்பொழுது முதல் 2009-10 வரை உள்ள காலகட்டத்தில் 1,75, 487 கோடி ரூபாய் வருவாய் இழப்பை ஏற்படுத்தும். இதில் 57,000 கோடி ரூபாய் நேரடி வரிகள் காரணமாகவும், மீதமுள்ள தொகை இந்த மண்டலங்களில் இயங்குகின்ற நிறுவனங்களுக்கு வழங்கப்படும் சுங்கவரி விலக்கு மற்றும் ஆயத்தீர்வை விலக்கு ஆகியவற்றின் காரணமாகவும் இழக்கப்படும். மத்திய வர்த்தக அமைச்சகம் இதற்குப் பதிலளிக்கையில், இந்த மண்டலங்களில் அதிகரிக்கின்ற பொருளாதார நடவடிக்கைகளின் விளைவாக ஏற்படும் வருவாய் உயர்வு இழப்புகளை எளிதில் ஈடுசெய்யும் என்று கூறியது. அதனுடைய கணக்கெடுப்பின்படி, வரி வசூல் 1,37,000 கோடி ரூபாய் வரை அதிகரிக்கும் என்பதாகும்.

மேலும் உணவுக்கும், விவசாயத்திற்கும் பெருவாரி யான மானியங்கள் வழங்கப்படுவதாகக் கூச்சல் போடுகிற ஆட்சியாளர்கள் ஏற்றுமதியை ஊக்குவிப் பதற்கு வழங்கப்படும் மிகப்பெரிய அளவிலான மானியத்தொகையைக் குறித்தும், இதனோடு சேர்த்து வழங்கப்படுகின்ற சிறப்புப் பொருளாதார மண்டலங் களுக்கான பெரும் தொகையைக் குறித்தும் மௌனம் காக்கிறார்கள். எக்னாமிக் டைம்ஸ் நாளிதழ் (நவம்பர் 20,2006) கூறிவதாவது: "சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் தவிர்த்த எண்ணற்ற ஏற்றுமதி ஊக்கு விப்புத் திட்டங்கள் 2005/ 06 ஆம் ஆண்டில் 34,430 கோடி ரூபாய் அளவுக்கு அரசு கருவூலத்திற்கு நஷ்டத்தை ஏற்படுத்தியது. சிறப்புப் பொருளாதார மண்டலங் களின் விளைவாக ஏற்படப்போகும் இழப்பு 2007/08 ஆம் ஆண்டில் பெருந்தொகையான 26,000 கோடி ரூபாய் அளவுக்கு இருக்கும்" என்று அது மேலும் கூறியது.

மத்திய வர்த்தக அமைச்சகம் போடுகின்ற கணக்கு களில் உள்ள பிரச்சனை என்னவென்றால், அது வேறு எந்த வழியிலும் சிறப்புப் பொருளாதார மண்டலங் களில் புதிய முதலீடுகளை வரவழைக்க முடியாது என்று எண்ணிக் கொண்டிருக்கிறது. ஆனால், உண்மை என்னவெனில், ஆண்டிற்கு 30 விழுக்காடு விகிதத்தில் வளர்ந்து கொண்டிருக்கிற தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில் நுட்பம் சார்ந்த சேவைகள் ஆகிய துறைகளுக்குத் தான் கணிசமான எண்ணிக்கை யிலான சிறப்புப்பொருளாதார மண்டலங்கள் ஒதுக்கப் பட்டிருக்கின்றன. இந்தத் துறைகளுக்கு சாதாரண போக்கிலேயே புதிய முதலீடுகள் வந்திருக்கும். அண்மையில் வெளிவந்த அறிக்கையின்படி, ஒப்பு தல்கள் வழங்கப்பட்டு அனைத்து சிறப்புப் பொருளா தார மண்டலங்களில் 50 விழுக்காட் டிற்கும் கூடுதலான மண்டலங்கள் மென்பொருள் மற்றும் நிறுவனங் களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளன. ஒரிசா மாநிலத்தில் பாஸ்கோ நிறுவனத்தால் அமைக்கப்படவிருக்கும் சிறப்புப் பொருளாதார மண்டலம்தான் இந்தத் தப்புக் கணக்குக்கு மிகத் தெளிவான உதாரணமாக விளங்குகிறது. ஏற்கனவே அந்த நிறுவனத்திற்கு வெட்கங்கெட்ட வகையில் நிலமும், தோண்டப்பட்ட சுரங்கங்களும் தாரை வார்க்கப்பட்டிருக்கின்றன. இப்போது அதற்கு சிறப்புப் பொருளாதார மண்டல மும் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. பாஸ்கோ நிறுவனத் திற்கு சிறப்புப் பொருளாதார மண்டலத் தகுதி வழங்கப்படவில்லை என்றால், அதற்கு ஒரிசாவின் இரும்புத்தாது வளத்தை கொள்ளையடிப்பதற்கு ஆர்வம் இருக்காது என்பது பொருளல்ல.

யதார்த்தத்தில், பெருவாரியான சலுகைகளை தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்தும் பொருட்டு தற்போது இயங்கிக் கொண்டிருக்கும் நிறுவனங்கள் சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்கு மாறிவிடும். இதன்மூலம் வரி வருவாய் இழக்கப்படுவதோடு மட்டுமின்றி சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் உள்ளூர் சந்தை உற்பத்திக்கான (சில்லரை வணிகம், குடியிருப்புகள், கேளிக்கை உள்ளிட்ட) மையங்களாக வும், அவற்றிற்கு வெளியே நிலைபெற்றுள்ள தொழி லாளர்களுக்கு எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத் தக்கூடியதாகவும் மாறுகின்றன.

தொழிலாளர்கள் மீதான தாக்குதல்

சிறப்புப் பொருளாதார மண்டலங்கள்மீது சுமத்தப் படும் மிகக்கடுமையான குற்றச்சாட்டு அங்கு தொழிலாளர் சட்டத்தை அமல்படுத்த முடியாது என்பது பற்றியதே ஆகும். சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்குப் பொதுப் பயன்பாட்டுச் சேவைகள் என்ற தகுதி வழங்கப்பட்டுள்ளதால் அங்கு தொழி லாளர்கள் தங்களது கோரிக்கைகளுக்காக போராடுவது சட்டவிரோதமாக்கப்பட்டுள்ளது. தொழிலாளர் களுக்கும், நிர்வாகங்களுக்கும் இடையே ஏற்படும் தொழிற் தகராறுகளைத் தீர்த்து வைப்பதற்கு இதுவரை மரபு ரீதியாக முதற்கட்ட நடவடிக்கை எடுத்து வருகின்ற தொழிலாளர்துறை ஆணையரின் அதிகாரங் கள் பறிக்கப்பட்டு, அவை இப்போது வளர்ச்சித்துறை ஆணையரிடம் வழங்கப்பட்டிருக்கின்றன. முதலீடு களைக் கவருவது மற்றும் தொழிலாளர்களை மகிழ்ச்சி யடைய வைப்பது ஆகியவை தான் இவரது முதன் மையான பணி! விரிவாக்கப்பட்ட நொய்டாவிலுள்ள ஒரு சிறப்புப் பொருளாதார மண்டலத்தில், தொழி லாளர்களின் எண்ணிக்கையை ஒப்பிடுகையில் மிகக் குறைவாகவே உள்ள கழிப்பறைகளுக்கு முன் அனுமதிச் சீட்டு பெறாமல் சென்றதற்காக தொழிலாளர்கள் மீது அபராதம் விதிக்கப்பட்ட பல சம்பவங்கள் நடந்திருக் கின்றன. இந்தச் சிறப்புப் பொருளாதார மண்டலங் களில் ஒப்பந்தத் தொழிலாளர்கள் பெருவாரியான

அளவில் பயன்படுத்தப்படுகின்றனர். சிறப்புப் பொருளாதார மண்டலங்களை ஊக்குவிப்பதில் முதன்மையான மாநிலமாகக் கருதப்படுகின்ற ஆந்திரபிரதேச மாநிலம் தொழிற்சங்கங்களில் வெளியாட்கள் அங்கம் வகிப்பதற்குத் தடை விதிக்கும் சட்டத்தை இயற்றியிருக்கிறது. அதன் மூலம் தொழிற் சங்கங்களின் பேச்சுவார்த்தை நடத்தும் உரிமை கணிசமான அளவுக்கு மறுக்கப்பட்டிருக்கிறது.

வெகு விரைவிலேயே அல்லது சிறிது காலத்திலோ இந்தச் சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் நாடு தழுவிய அளவில் உருவாக்கப்படுவதற்கான முன் மாதிரிகளாக விளங்கும் என்பதுதான் மிகவும் கவலையளிக்கக் கூடிய விஷயமாகும்.

முடிவுரை

முடிவாக, இந்திய அரசு ஏகாதிபத்தியம் மற்றும் உள்ளூர் தரகு பெரும் மூலதனம் ஆகியவற்றின் முன்பு மண்டியிட்டுக் கிடக்கின்றதற்கான அண்மைக்கால எடுத்துக்காட்டாகவும், மிகவும் அப்பட்டமான உதாரணமாகவும் சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் விளங்குகின்றன. வளர்ச்சி என்ற பெயரில், மிக முக்கியமான இயற்கை ஆதாரமாக விளங்கும் நிலம் கூட பெரும் மூலதனத்திற்குத் தாரை வார்க்கப்படுகிறது. அறுதிப் பெரும்பான்மையினராக இருக்கும் நமது மக்களின் நிலத்திற்கும், வாழ்வுரிமைக்கும் இது அச்சுறுத்தலாக விளங்குவதோடு மட்டுமின்றி, மற்றெந்த வளர்ச்சித் திட்டங்களைப் போலவே, இந்தத் திட்டத்தின் (இந்தமுறை சிறப்புப் பொருளாதார மண்டலம்) பயன்களும் மக்களால் அனுபவிக்க முடியாமல் போவதோடு, அவர்கள் இந்த வளர்ச்சியின் சுமையையும் ஏற்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். மக்கள் தொகையில் 65 விழுக்காட்டிற்கும் கூடுதலானவர்கள் விவசாயத்தைத் தங்களது ஜீவாதாரமாகக் கொண்டிருக்கும் ஒரு நாட்டில், விவசாய வளர்ச்சி இல்லாமல் வேறெந்த வளர்ச்சியும் இருக்க முடியாது. மேலும், சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் ஏற்கனவே சுருங்கிக் கொண்டிருக்கும் விவசாய நிலத்தை உண்மையில் ஆக்கிரமிப்பதே தவிர, அந்த நிலத்திலிருந்து வெளியேற்றப்பட்டவர்களுக்கு வேலை வாய்ப்பு எதையும்வழங்காது. சிறப்புப் பொருளாதார மண்டலக் கொள்கையின் அறிவிக்கப் பட்ட குறிக்கோளான ஏற்றுமதி ஊக்குவிப்பும்கூட சாத்தியமற்றதாகத்தான் இருக்கிறது. உள் கட்டமைப்பு வளர்ச்சி என்ற பெயரில் அது அடுக்குமாடிக் கட்டடங்கள், வணிக வளாகங்கள், கேளிக்கை அரங்குகள்ஆகியவை தோன்றுவதற்குத் தான் வகை செய்யும். பெருவாரியான எண்ணிக்கையிலான மக்களின் நிலங்களும், வாழ்வுரிமையும் கேள்விக்குள்ளாகும் போது, வேலை வாய்ப்புப் பெருக்கத்தைப் பற்றிப் பேசுவது ஒரு அருவெறுக்கத்தக்க நகைச்சுவையாகும். மேலும், சிறப்புப் பொருளாதார மண்டலங்களில் பணியாற்றும் தொழிலாளர் களுக்கு எவ்வித பாதுகாப்பும் இருக்காது. சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் நிறுவனம் அமைப் பதற்குச் சக்தியற்ற(தகுதியற்ற) சிறிய முதலாளித்துவவாதிகள் கூட ஓரங்கட்டப்படுவார்கள்.

நாட்டிற்குள்ளேயே அன்னிய நிலப்பகுதியாகக் கருதப்படுகின்ற (சிறப்புப் பொருளாதார மண்டலச் சட்டத்திலேயே இந்தச் சொற்றொடர் பயன்படுத்தப் பட்டுள்ளது) தீவுகளை உருவாக்குவது என்பது கொல்லைப்புறம் வழியாக நடத்தப்படும் காலனிமயமாக்கமே தவிர வேறல்ல. நமது நிலம், நமது வளங்கள், நமது உழைப்பு - இவையனைத்தும் ஏகாதிபத்தியவாதிகளுக்கும், பெரும் மூலதனத்திற்கும் தங்கத்தட்டில் வைத்து வழங்கப்படுகின்றது. முன்னாள் பிரதமர் வி.பி.சிங் கூறுவதாவது, "தனியார் நிறுவனங்களுக்கு ஆதரவாக வெட்கமின்றி செயல்படுவதன் மூலமாகவும், அமைதியான மக்கள் எதிர்ப்பை வெளிப்படையாக நொறுக்குவதன் மூலமாக.... (establishments) இந்த அமைப்பு மக்களை திரும்ப முடியாத உச்சிக்குக் கொண்டு செல்கிறது". அவர் மேலும் கேட்கிறார்: "இத்தகைய நியாயமற்ற சூழ்நிலையில், ஏன் மாவோயிஸ்ட்டுகளின் ஆயுதப் போராட்டம் நாட்டின் உட்பகுதியில் பரவக் கூடாது? "ஹார்ட் நியூஸ் என்ற இதழுக்கு அளித்த பேட்டியில் அவர் மேலும் கூறியதாவது, "நான் மாவோயிஸ்ட்டாக மாற ஆசைப்படுகிறேன். ஆனால், எனக்கு மிகவும் வயதாகிவிட்டது."

சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் என்பது இந்தியாவிற்குள்ளேயே பெரும்பாலான இந்தியச் சட்டங்களை நடைமுறைப்படுத்த முடியாததாகவும், வரி வருவாய் கடுமையாக குறைக்கப்பட்டதாகவும் இருக்கின்ற பாதுகாக்கப்பட்ட நிலப்பகுதியை உருவாக்குவது பற்றியதேயன்றி வேறல்ல. அது தரகுப் பெரு முதலாளித்துவ நிறுவனங்களையும், ஏகாதிபத்திய தேசங்கடந்த தொழிற்கழகங்களையும், நாடு; அதன் நிலம்; அதன் மக்கள் ஆகியவற்றைப் பணயம் வைத்துத் தங்களுடைய இலாபங்களைப் பத்துமடங்கு பெருகுவதற்கு அனுமதிக்கும், கிராமப்புற விவசாய நிலம் பறிக்கப்பட்டு இலட்சக் கணக்கானோர் தங்களுடைய நிலத்திலிருந்தும், வாழ்வாதாரங்களிலிருந்தும் வெளியேற்றப்படுவர். மேலும், தொழிலாளர் சட்டங்களை நடைமுறைப்படுத்த முடியாததால், பன்மடங்கு இலாபங்களை கொழிப்பதற்கு மலிவான இந்திய உழைப்பு பயன்படுத்தப்படும். இவ்வனைத்து இலாபங்களும் வரிவிலக்கு அளிக்கப்பட்டு, நாட்டின் வளம் மேலும் சுரண்டப்படும்.

இவ்வாறு மிகப்பெரிய அளவில் சலுகைகள் வழங்கப்படுவதால், இந்தியாவின் பெரும் தொழில் நிறுவனங்களில் (தரகு வர்க்கத்தினர் மற்றும் தேசங் கடந்த தொழிற்கழகங்களால் நடத்தப்படுகின்ற) பெரும்பாலானவை நடை முறையில் வெளிநாட்டுப் பகுதிகளாக விளங்கு கின்ற சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்கு இடம் மாறி, புதிய வடிவிலான காலனிமயமாக்கலுக்கு வழி வகுக்கும். ♦

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மாவோயிஸ்ட்) மத்தியக் குழு

பத்திரிகைச் செய்தி ♦ நவம்பர் 13, 2006

எதிர்ப்புரட்சி பிற்போக்கு அரசை உடைத்தெறிவதன் மூலமாகத்தான் புதிய நேபாளம் உருவாக முடியும்!

ஐ.நா.மேற்பார்வையின் கீழ் மக்கள் விடுதலைப் படையின் ஆயுதங்களை ஒப்படைப்பது மக்களை நிராயுதபாணியாக்கும்!

நவம்பர் 5-ஆம் தேதியன்று சி.பி.என். (மாவோயிஸ்ட்) நேபாள அரசாங்கத்துடன் ஒரு உடன்படிக்கையை ஏற்படுத்தியது. அதன்படி, மக்கள் விடுதலைப் படை தனது ஆயுதங்களை தேர்ந்தெடுக்கப்பட்ட ஏழு இராணுவ மையங்களில் ஒப்படைக்க வேண்டும் என்றும், அதே எண்ணிக்கையிலான ஆயுதங்களை அரசாங்கத்தின் ஆயுதப் படைகளும் ஒப்படைக்க வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது. இந்நிகழ்ச்சி ஐ.நா. கண்காணிப்புக் குழுவின் மேற்பார்வையின் கீழ் நடைபெறும். மக்கள் விடுதலைப் படையினர் ஆயுதங்கள் வைக்கப்பட்டுள்ள பாதுகாப்புப் பெட்டகங்களின் சாவிகளை மாவோயிஸ்ட் கட்சி வைத்துக் கொள்ளலாம் என்றும் அந்த உடன்படிக்கை கூறியது. மேலும் இருதரப்பினர்க்கும் இடையே ஏற்பட்டுள்ள உடன்பாட்டின்படி தற்போதைய பாராளுமன்றத்தை கலைப்பதெனவும், மாவோயிஸ்ட்டுகள் பங்கேற்பதற்குச் சில உறுப்பினர்களை வழங்கி ஒரு புதிய இடைக்கால பாராளுமன்றத்தை உருவாக்குவது எனவும், மாவோயிஸ்ட்டுகளுக்கு சில துறைகளைக் கொடுத்து ஒரு இடைக்கால அரசாங்கத்தை உருவாக்குவது எனவும், மன்னராட்சி மற்றும் நேபாளத்தின் தலைவிதியைத் தீர்மானிக்கக் கூடிய ஒன்றாகக் கருதப்படுகின்ற அரசியல் நிர்ணய சபையை அடுத்த கோடை காலத்திற்குள்ளாக தேர்ந்தெடுப்பது எனவும் முடிவு செய்யப் பட்டது. பிரதமர் கொய்ராலாவும், சி.பி.என். (மாவோயிஸ்ட்) தலைவர் தோழர் பிரசந்தாவும் உடன்படிக்கையில் கையொப்பமிட்டு, அதனை வெளிப்படையாக அறிவித்ததன் வாயிலாக இந்த உடன்படிக்கைக்கு அதிகாரப் பூர்வ அங்கீகாரம் கிடைத்துள்ளது. இ.க.க. (மாவோயிஸ்ட்)டின் மத்தியக் குழுவானது இந்தியக் கைக்கூலி கொய்ராலாவால் வழிநடத்தப்படும் ஏழு கட்சிக் கூட்டணி அரசாங்கத்துடன் நேபாளத்தின் சகோதரத் துவ மாவோயிஸ்ட் கட்சி ஏற்படுத்தியிருக்கும் உடன்படிக்கையைக் குறித்து கவலையடைந்திருக்கிறது.

தேர்ந்தெடுக்கப்பட்ட இராணுவ மையங்களில் மக்கள்படையின் ஆயுதங்களை ஒப்படைப்பதற்கான உடன்படிக்கையானது அபாயகரமான விளைவுகளை உள்ளடக்கியதாகும். இந்த நடவடிக்கை நேபாளத்தில் உள்ள ஒடுக்கப்பட்ட மக்களை நிராயுதபாணிகளாக்குவதற்கும், நேபாளத்தின் பத்து ஆண்டுகால மக்கள்யுத்தத்தில் மாபெரும் தியாகங்களை விலை கொடுத்து நேபாள மக்கள் ஈட்டியிருக்கின்ற வெற்றிகளை இழப்பதற்கும் வழிவகுக்கும். இருதரப்பும் சம எண்ணிக்கையிலான ஆயுதங்களை ஒப்படைப்பது குறித்த உடன்படிகையிலுள்ள பிரிவு இயல்பாகவே கொய்ராலாவின் அரசாங்கத்திற்குச் சாதகமாக அமையும். ஏனெனில், ஆயுதங்கள் ஒப்படைக்கப்பட்ட பிறகும்கூட மீதமுள்ள பெரும் எண்ணிக்கையிலான ஆயுதங்களை இராணுவம் எந்நேரம் வேண்டுமானாலும் பயன்படுத்துவதற்கும், அரசாங்கத்தின் பிற்போக்கு இராணுவத்தை வலுப்படுத்துவதற்கும் வாய்ப்பிருக்கும். ஆயுதங்களை மேலாண்மை செய்வது குறித்து சி.பி.என். (மாவோயிஸ்ட்) கட்சியால் மேற்கொள்ளப்பட்டிருக்கும் முடிவானது, தனது உடனடிக் குறிக்கோளை அரசியல் நிர்ணய சபையை அமைப்பது குறித்த செயல் தந்திர நடவடிக்கையாக அது இதனைக் கருதினாலும்கூட, புரட்சியின் நலன்களுக்குக் கேடுகளை விளைவிப்பதாக இருக்கிறது.

உலகப் புரட்சியின் அனுபவங்கள் அனைத்தும் மக்கள்படை இல்லாமல் மக்கள் தங்கள் அதிகாரத்தைப் பயன்படுத்த முடியாது என்று மீண்டும் மீண்டும் நிரூபித்திருக்கிறது. ஆயுதபாணிகளாக்கப்பட்டுள்ள மக்களைத் தவிர வேறெதுவும் ஏகாதிபத்தியத்திற்கும், எதிர்ப்புரட்சியாளர்களுக்கும் பீதியை உருவாக்குவதில்லை. ஆகவேதான் அவர்கள் மக்களை நிராயுதபாணிகளாக்குகின்ற எந்தவொரு உடன்படிக்கையையும் ஏற்படுத்திக் கொள்ள மகிழ்ச்சியாக முன்வருவார்கள். உண்மையிலேயே, வர்க்க சமுதாயம் உருவான காலந்தொட்டு மக்களை நிராயுதபாணிகளாக்குவதைப் பற்றித்தான் அனைத்துப் பிற்போக்கு வர்க்கங்களும் கூறி வந்திருக்கின்றன. வரலாறு நிரூபித்துள்ளவாறு நிராயுதபாணிகளான மக்கள்தான், படுகொலைகளைக் கூட அரங்கேற்றத் துணிகின்ற பிற்போக்கு வர்க்கங்களுக்கு, ஏகாதிபத்தியவாதிகளுக்கும் எளிதில் இரையாக்கப்படுவர். உலக பாட்டாளி வர்க்கத்தின் பிரிவுகளில் ஒன்றான இ.க.க. (மாவோயிஸ்ட்)டின் மத்திய குழுவானது ஆயுதங்களை ஒப்படைப்பது குறித்த உடன்படிக்கையில் பொதிந்திருக்கின்ற பெரும் அபாயத்தைக் குறித்து சி.பி.என். (மாவோயிஸ்ட்) கட்சியையும், நேபாள மக்களையும் எச்சரிப்பதோடு, வரலாற்றின் கசப்பான அனுபவங்களின் வெளிச்சத்திலிருந்து தங்களுடைய செயல் தந்திரங்களை மறுபரிசீலனை செய்ய

வேண்டும் என்று அவர்களுக்கு அறைகூவல் விடுக்கிறது.

உடன்படிக்கையின்படி நேபாள இடைக்கால அரசாங்கத்தில் பங்கேற்பது குறித்த மாவோயிஸ்ட்டுகளின் முடிவானது சுரண்டுகின்ற ஆளும் வர்க்கங்களுக்கும், ஏகாதிபத்திய வாதிகளுக்கும் சேவை செய்கிற அரசு இயந்திரத்தின் பிற்போக்குத் தன்மையை மாற்ற முடியாது. அரசு என்பது சுரண்டப்படுகின்ற வர்க்கங்கள் அல்லது பாட்டாளி வர்க்கம் ஆகிய இரண்டில் ஒன்றின் கருவியாகத்தான் செயல்பட முடியுமே தவிர எதிர் எதிர் மோதிக்கொள்ளும் வர்க்கங்களின் நலன்கள் இரண்டிற்கும் சேவை செய்ய முடியாது. அரசு இயந்திரத்தை நொறுக்காமல் சமூக அமைப்பில் மாற்றத்தைக் கொண்டுவர முடியாது என்பது மார்க்சியத்தின் அடிப்படைக் கோட்பாடு. புதிய அரசியல் சட்டம் எவ்வளவுதான் ஜனநாயகப் படுத்தப்பட்டதாக இருந்தாலும், அரசாங்கத்தின் முக்கிய அங்கமாக மாவோயிஸ்ட்டுகள் பங்கு பெற்றாலும், மேலிருந்து செயல்படுத்தப்படுகின்ற சீர்திருத்தங்கள் சுரண்டல் சமூக அமைப்பில் எவ்வித பண்புரீதியான மாற்றத்தையும் கொண்டுவர முடியாது. நிலவுகின்ற அரசை உடைத்தெறியாமல் புதிய நேபாளத்தைக் கட்ட முடியும் என்று எண்ணுவது வெறும் மாயையாகும்.

அந்த உடன்படிக்கை ஏற்படுத்தும் மற்றொரு மாயையானது ஐ.நா.வின் நடுநிலைமை அல்லது சார்பற்ற தன்மை என்று கூறப்படுவது பற்றியதாகும். யதார்த்தத்தில், ஐ.நா. சபையானது ஏகாதிபத்தியவாதிகளின் நலன்களுக்காக மூன்றாம் உலக நாடுகளின் மீது ஆதிக்கம் செலுத்தக்கூடியதாகவும், மிரட்டுவதாகவும், அந்நாடுகளின் உள்விவகாரங்களில் தலையிடக் கூடியதாகவும் உள்ள ஒரு கருவியாக ஏகாதிபத்தியவாதிகள் கையில், குறிப்பாக அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகளின் கையில் செயல்படுகிறது. அது மூன்றாம் உலக நாடுகளின் மக்களை அடக்குவது, ஒடுக்குவது போன்ற ஏகாதிபத்திய வாதிகளின் வெட்கங்கெட்ட செயல்களுக்கு அங்கீகாரம் வழங்கக்கூடிய வெளித்தோற்றமாக பயன்படுத்தப்படுகிறது. ஆப்கானிஸ்தானும், இராக்கும்தான் ஏகாதிபத்திய தாக்குதலையும், இந்த நாடுகளின் ஆக்கிரமிப்பையும் அங்கீகரிக்கின்ற ஐ.நா. சபையின் நேரடி பாத்திரத்திற்கான மிகவும் அண்மைக்கால எடுத்துக்காட்டுகளாக விளங்குகின்றன. ஐ.நா.வின் இந்த ஏகாதிபத்திய பாத்திரத்தை அம்பலப்படுத்துவதும், எதிர்ப்பதும், போராடுவதும் புரட்சியாளர்களின் கடமையாக இருக்கிறது. அதற்கு ஆயுதங்கள் மேலாண்மையிலும், தேர்தல் கண்காணிப்பிலும், நேபாளத்தின் அமைதி நடவடிக்கைகளிலும் ஏதேனும் பொறுப்பை வழங்குவது, ஏகாதிபத்திய தலையீட்டை, குறிப்பாக அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தலையீட்டை வரவேற்பதாக மட்டுமே அமையும்.

மற்றுமொரு கவலையளிக்கக் கூடிய அம்சம் இந்திய விரிவாக்க வாதிகளின் பங்கு குறித்து நேபாள மாவோயிஸ்ட்டுகள் கொண்டுள்ள மாயை பற்றியதாகும். இந்திய ஆளும் வர்க்கங்கள்தான் ஒட்டுமொத்த துணைக்கண்டத்திலும் உள்ள மக்களுக்கு மிகப்பெரிய அச்சுறுத்தலாக விளங்குகிறார்கள். எனவே, இந்திய விரி வாக்கத்திற்கு எதிராக ஒன்றுபட்ட போராட்டத்தை மேற்கொள்வது தெற்காசியாவிலுள்ள பல்வேறு நாடுகளைச் சார்ந்த மக்களின் கடமையாக இருக்கிறது. அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் பின்பலத்துடன் இந்திய அரசானது நேபாளத்தின் உள்விவகாரங்களில் தொடர்ந்து தலையிட்டுக் கொண்டேயிருக்கிறது. அது இரு - தூண் கோட்பாடு (two-pillar theory) என்ற பெயரில் மன்னராட்சிக்கு ஆதரவளித்து, பாராளுமன்ற சக்திகளுக்கிடையே உள்ள தனது அடிவருடிகளை ஊக்குவிக்கிறது. அது கொய்ராலாவால் வழி நடத்தப்படும் நேபாள காங்கிரசுடனும், பிற பிற்போக்கு கட்சிகளுடனும் இரகசிய உடன்படிக்கைகளைச் செய்துள்ளதோடு, மக்கள் விடுதலைப் படையையும், நேபாள மக்களையும் நிராயுதபாணிகளாக்குவதற்கும், மாவோயிஸ்ட்டுகளை தனிமைப்படுத்துவதற்கும் தொடர்ந்து முயற்சித்து வருகிறது. நேபாளத்தின் இயற்கை வளத்தை, குறிப்பாக அந்நாட்டில் மிகப்பெரிய நீர் மின் சக்தித் திறனைச் சுரண்டுவதும், ஏகாதிபத்தியவாதிகள் மற்றும் இந்திய தரகு முதலாளிகள் ஆகியோரின் சுரண்டலுக்கான பாதுகாக்கப்பட்ட பிரதேசமாக நேபாளத்தை உருவாக்குவதும் தான் இந்திய விரிவாக்க வாதிகளின் குறிக்கோள் ஆகும். மாவோயிஸ்ட்டு களுக்கும், நேபாளத்தின் ஏழு கட்சிக் கூட்டணிக்கும் இடையே உடன்படிக்கை ஏற்படுவதற்கு இந்தியா ஆற்றியுள்ள பங்கினை குறித்துத் தோழர் பிரசந்தா தொடர்ந்து தெரிவித்துவரும் பாராட்டுக்கள் எதிர்காலத்தில் நேபாளத்தின் குழம்பிய குட்டையில் மீன் பிடிக்கக் காத்திருக்கும் இந்திய விரிவாக்கவாதிகளை எதிர்ப்பதற்காக மக்களை தயார் செய்வதை விடுத்து அவர்களிடையே இந்தியா குறித்த மாயைகளைத் தோற்றுவிக்கிறது.

நேபாளத்தில் தற்போது தாங்கள் கடைபிடித்தவரும் செயல்தந்திரங்கள் தெற்காசியாவில் உள்ள பிற மாவோயிஸ்ட்டு கட்சிகளுக்கும் முன் உதாரணமாக விளங்கும் என்று சி.பி.என்.(மாவோயிஸ்ட்) வலியுறுத்துவதுதான் மேலும் வியப்பாக இருக்கிறது. பிற மாவோயிஸ்ட் கட்சிகள் தங்களுடைய புரட்சிகர போர்த் தந்திரங்களை மறுபரிசீலனை செய்ய வேண்டும்

(தொடர்ச்சி - பக்கம் 14)

தோழர் இராமுலுவுக்குச் செவ்வணக்கங்கள்

ஆந்திரா - ஒரிசா எல்லையில் விசாகப்பட்டணத்தின் கய்யூர் மண்டலத்தில் குரலகொண்டி வனப்பகுதியின் இந்தியப் பொதுவுடைமைக் கட்சி (மாவோயிஸ்ட்) கிழக்குப் பகுதி சிறப்புப்பிரிவின் மாவட்டக் கமிட்டியின் உறுப்பினர் இராமண்ணா என்றும் KDR என்றும் அழைக்கப்படும் தோழர் கேதாரி இராமுலு மற்றோர் பெரும்நிகழ்வில் தியாகியானார். தோழர் இராமுலு கரீம்நகர் மாவட்டத்தில் எல்கத்தூர்த்தி மண்டலத்தின் காந்தலா தரமரா கிராமத்தில் இருந்து வந்து சேர்ந்தார். 1980-களின் இடையில் கட்சியில் சேர்ந்து 22 ஆண்டுகள் புரட்சிகரச் செயல்பாடுகளில் ஈடுபட்டிருந்தார். 1983-க்கும் 1996-க்கும் இடைப்பட்ட காலங்களில் கரீம்நகர் மற்றும் வாரங்கல் மாவட்டத்தில் இராணுவப் பிரிவில் இருந்து (ஆயுதப்பிரிவு) செயல்பட்டார். ஏ.ஓ.பி.-ன் கிழக்குக் கோட்டத்தில் குர்த்தேடுப் பகுதியின் செயலாளராகச் செயல்பட்டார். கரீம் நகர், வாரங்கல் மற்றும் கிழக்கு மாவட்டங்களில் அவரைப் பிடிக்கக் காவல்துறை விரித்த வலையில் இருந்து பலமுறை தப்பி இருக்கிறார்.

தோழர் KDR அவருடைய கிராமத்தில் கொத்தடிமைத் தொழில் புரிந்து கொண்டிருந்தார் என்றாலும் இயற்கையாகவே வர்க்க எதிர்ப்பை எதிரிகளின்பால் கொண்டிருந்தார். நிலவுடைமை, ஏகாதிபத்தியம், தரகு முதலாளித்துவம் போன்ற சுமைகளால் அழுத்தப்பட்டுக் கொண்டிருந்த அவரைப் போலவே பெரும்பான்மையான கடின உழைப்பாளி மக்களை விடுவிப்பதற்கான புரட்சியின் தேவையை உணர்ந்திருந்தார். அவருடைய வர்க்கப் பிறப்பு கொடிய அடக்கு முறை மற்றும் கொடிய துன்பங்களிலும் அவரை உறுதியோடு நிற்க உதவியது. KDR-ன் புரட்சிகர வாழ்க்கையின் பெரும்பகுதி வாரங்கல்லில் கழிந்தது. அவருக்கெதிராக 32 குற்றங்களைப் பதிவு செய்த காவல்துறைக்கும், வர்க்க எதிரிகளுக்கும் அவர் அச்சம் விளைவிப்பவராகத் திகழ்ந்தார். அநீதியைப் பொறுத்துக் கொள்ள முடியாததும், அழுத்தப்பட்ட மக்களுக்கு நெருக்கமாக உறுதியோடு நிற்பதும் அவருக்கு மக்களின் பெருமதிப்பையும், அன்பையும் பெற்றுத்தந்தது. 1985-ல் அவர் தன்னுடைய ஐந்து வயதுப் பெண் குழந்தையை விட்டுவிட்டுத் தன் மனைவி இலட்சுமியோடு தலைமறைவு வாழ்க்கையை மேற்கொண்டார். அவர் திரும்பத் தன் மகளைக் காணவே இல்லை. அவருடைய மனைவி இலட்சுமி காவல் நிலையத்தைத் திடீரெனத் தாக்கியபோது நடந்த குண்டு வெடிப்பில், தந்தையை இறுதிவரை காணாத KDR-ன் மகள் சுனிதா அடக்கப்பட்ட ஒடுக்கப்பட்ட பெரும்பான்மை மக்களுக்காகத் தன் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்து இறுதியில் அதற்காகவே தன் உயிரையும் தியாகம் செய்தார் - என்று தன் சொற்களால் கூறினார். தன் தந்தையை உயிருடன் காண ஆண்டுக்கணக்காகக் காத்திருந்த அந்த மகள் கடைசியாகத் தன் தந்தையின் இறந்த உடலைக் கண்டு தன்னுடைய தாளாத மன வேதனையை வெளிப்படுத்தினார்.

அக்டோபர் 9-ல் இறுதிச் சடங்கில் தமிரா கிராமத்தில் கூடிய ஆயிரக் கணக்கான மக்களின் கூட்டமே KDR-ன் புகழுக்குச் சான்றாக விளங்கியது. அவர்கள் தங்கள் அன்புக்குரிய தலைவனின் உடலைக் காண்பதற்காக ஆவலோடு மணிக்கணக்காகக் காத்திருந்தார்கள். மக்கள் கூடுவதைத் தடுக்கக் காவல்துறை வழக்கம்போல கிராமத்தைச் சுற்றி காவல் இருந்தார்கள். தர்ம சாகர், அனந்த சாகர், மீசரா, வேலேடு, பீமதேவராம்பள்ளி, வாரங்கல் மற்றும் கரீம் நகர் மாவட்டங்களில் இருந்துவந்த மக்கள் அனைவரையும் காவல் துறையினர் தடுத்து நிறுத்தினார்கள். மேலும் மக்களைப் பிறகு துன்புறுத்துவதற்காக வீடியோவில் படம் பிடித்தார்கள். ஆனாலும் அந்தப் பயமுறுத்தல்கள் எல்லாம் மக்களைத் தடுத்து நிறுத்திவிடவில்லை. கவனிக்கப்படாதவாறு திறமையாக வயல்வெளிகளைக் கடந்து கால்நடையாக அவர்கள் அந்தக் கிராமத்தை அடைந்தார்கள்.

புரட்சிகரக் கதைப்பாட்டுக் குழு மற்றும் ஜனநாட்டிய மண்டலியின் நிறுவனரும் தலைவருமான கத்தார். புரட்சிக் கவிஞர் கல்யாணராவ் மற்றும் ஆயிரக்கணக்கான மக்களோடு ஜனநாயக அமைப்புகளைச் சார்ந்த தலைவர்களும் இறுதிச்சடங்கில் கலந்து கொண்டார்கள். கத்தார், கல்யாணராவ், சிக்குடு பிரபாகர் மற்றும் பலரின் சொற்பொழிவில் கொடிய இந்த ஆட்சிக்காலத்தில் நேரிட்ட பலநூறு புரட்சியாளர்களின் மரணத்திற்காகவும், மக்களின் குறைந்தபட்ச உரிமைகளும் பறிக்கப்பட்டுக் கொண்டிருப்பதற்கும் YSR-ன் கொடிய பாசிச ஆட்சியைத் தூக்கி எறிய அழைப்புவிடுத்தார்கள். மதியம் 12 மணியளவில் அந்த கிராமம் மக்கள் கடல் போல் காட்சியளித்தது. "இராமண்ணா அமர் ரஹே" "KDR-ன் கனவை நிறைவேற்றுவோம்" என்ற முழக்கங்கள் காற்றைக் கிழித்தன. KDR-ன் உடலைச் சுமந்த வண்ணம் அந்த கிராமத்து தெருக்களில் KDRஐ அந்த 24 ஆண்டுகளாகப் பார்க்காத மக்கள் அனைவரும் தங்கள் தலைவனை முதலும் முடிவுமாகக் காண உற்சாகத்தோடு வந்தார்கள். கத்தாரின் ஜனநாட்ய மண்டலி கலைஞர்கள் KDR-ன் வாழக்கையையும் செயல்களையும் புகழ்ந்து பாட மக்கள் அனைவரும் தொடர்ந்து பாடிய அந்தப்பாடல்கள் காற்று மண்டலம் முழுமையும் நிறைந்தன. இந்தியாவின் அழுத்தப்பட்ட மக்களின் பெருமைக்குரிய மகன் KDR இதயங்களிலும் இல்லங்களிலும் என்றும் நிலைத்திருப்பார். YSRன் காவல்துறைத்தனம் ஆந்திரப் பிரதேசத்தில் மக்கள் யுத்தத்தின் முன்னேற்றத்தை தடுத்து நிறுத்திவிட முடியாது. வேட்டை நாய்களும் சி.ஆர்.பி.எப். ம் இணைந்து ஏவப்படும் பெரும் இராணுவத்தாக்குதல்களால், புரட்சியாளர்களால் விளையும் பேரிழப்புகளுக்கு முன்னால் உறுதியாக நிற்க முடியாது. அவர்கள் தற்காலத் துயரங்களை வெற்றி கொள்வார்கள் மேலும் இந்தப் பெரும் நெருக்கடிகளைப் பயன்படுத்தி புரட்சியை முன் எடுக்க மன எழுச்சி கொள்வார்கள்.

மக்கள்
பேரணி

முகமது அப்சலைத் தூக்கிலிடுவது அழகிய காஷ்மீர் பள்ளத்தாக்கையும், அதனுடைய மக்களின் சுயநிர்ணய உரிமையையும் குறிவைக்கின்ற மற்றுமொரு தோட்டாவாகும். அப்சலின் கதையும் காஷ்மீரைப் போலவே அவமானப்படுத்தப்பட்ட, கொடூரமாக்கப்பட்ட, சித்ரவதைக்குள்ளாக்கப் பட்ட, இறுதியாக இந்திய ஆட்சியாளர்களால் தூக்கிலிடப் படுகிற, அழிக்கப்படுகிற கதையாகத் தான் இருக்கிறது. தங்களது ரம்மியமான சூழலில் வாழ்ந்து வந்த மக்கள் இந்தியாவின் சாணக்கியர்களால் கொடூரமாக வதைக்கப் படுகின்றனர்; ஏகாதிபத்தியத்தின் சதிகளுக்குத் தீவனமாக்கப்படுகின்றனர்; பார்ப்பனிய இந்திய ஆட்சியாளர்களுக்கும், அடிப்படைவாத பாகிஸ்தான் ஆட்சியாளர்களுக்கும் இடையேயானதுரோக விளையாட்டில் கைப்பாவையாக பயன்படுத்தப் படுகின்றனர். அப்சல் வெறும் மற்றொரு பாதிக்கப்பட்ட நபராக இருக்கிறார்; மற்றொரு காஷ்மீரி இந்தியப் பெருந்தேசிய வெறியின் கொலைக்களத்தில் காவு கொடுக்கப்படுகிறார்; நாட்டில் காஷ்மீரி விரோத, முஸ்லீம் விரோத உணர்வுகளைக் கிளப்பிவிடுவதற்கு ஒரு பலியாடாக இருக்கிறார்.

முகமது அப்சலை விடுதலை செய்; இந்திய சிறைக்கூடத்திலிருந்து காஷ்மீர மக்களை விடுதலை செய்!

முகமது அப்சல் தூக்கிலிடப்படக் கூடாது என்பது மட்டுமல்ல; அவர் தனது மனைவி மற்றும் 7 வயது குழந்தையுடனான எளிய வாழ்க்கைக்கு திரும்புவதற்காக நிபந்தனையின்றி விடுவிக்கப்பட வேண்டும். அப்சலுக்கு எதிராகச் சட்டரீதியான குற்றமோ அல்லது தார்மீக அடிப்படையிலான குற்றமோ இல்லை என்பதை உண்மைகள் நிரூபிக்கின்றன. அவரது வழக்கு ஊடகங்களின் பொய்களால் நடத்தப்பட்டது மட்டுமல்ல; அப்சலை மட்டுமே தூக்குமேடைக்கு அனுப்புகிறதோடல்லாமல், தில்லியில் இலட்சக்கணக்கான வணிகர்களின் குடும்பங்களை அழிப்பதற்காகவும், தங்களது அதிகாரவர்க்க, சாதீய காழ்ப்புணர்ச்சியுடன் தலித்துகள் மற்றும் பிற்படுத்தப்பட்டவர்கள் ஆகியோரின் மீது வெறுப்பைக் கக்குகின்ற தீர்வுகளை வழங்குகின்றதாகவும், தங்களுடைய மேட்டுக்குடி வாழ்க்கைக்காக இலட்சக்கணக்கான சேரிக் குடியிருப்பு வாசிகளின் வாழ்வினை நசுக்குவதற்காகவும் உள்ள அதிகார போதையில் திளைக்கின்ற உச்சநீதி மன்றத்தாலும் இந்த வழக்கு நடத்தப்பட்டது. சமீப காலமாக, முன்னர் எப்போதும் இல்லாத அளவிற்கு, ராட்சதத் தோற்றமளிக்கும் அங்கிகளை அணிந்துள்ள நீதிபதிகள் அதிகார அமைப்பின் இரத்தக் காட்டேரிகளாகச் செயல்பட்டு மக்களின் இரத்தத்தை உறிஞ்சுகிறார்கள். அப்சல் வழக்கில் சட்டரீதியான கூறுகளைப் பாருங்கள்.

வழக்கு

2001 ஆம் ஆண்டு டிசம்பர் 13-ஆம் தேதியன்று 11.30 மணியளவில் பாராளுமன்றத்தின் மீது குழப்பம் நிறைந்த தாக்குதல் நடத்திய அனைவரும் கொல்லப் பட்டனர். அப்சல், ஜீலானி முதலியோர் தாக்குதல் நடத்தியவர்களின் கூட்டாளிகளாகக் கருதப்பட்டு அவர்களுக்கு மரண தண்டனையும் விதிக்கப்பட்டது. அமெரிக்காவின் 9/11 சம்பவத்தை (இரட்டை கோபுரங்கள் தகர்க்கப்பட்ட சம்பவம்) ஒட்டி நடைபெற்ற இந்தத் தாக்குதல் இந்திய ஆட்சியாளர்களால் பாகிஸ்தானுடனான உறவை முறியடிப்பதற்கும், எல்லைப் பகுதியில் இதுவரை நடைபெற்றிராத அளவு மிகப்பெரிய படைக் குவிப்பதற்காக 10,000 கோடி ரூபாய் வீணடிப்பதற்கும் பயன்படுத்தப்பட்டது. பொடா சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட விரைவுத்தட நீதிமன்றம் ஜிலானி, ஷவ்கத் மற்றும் அப்சல் ஆகியோருக்கு மரண தட்டணை விதித்தது. இதைத் தொடர்ந்து உயர்நீதிமன்றம் ஜிலானியை விடுதலை செய்தது; உச்சநீதிமன்றம் அப்சலுக்கு எந்தவொரு பயங்கரவாத அமைப்புடனும் தொடர்பு இருப்பதற்கான ஆதாரம் ஏதுமில்லை என்று தெளிவாகக் கூறியது. இருப்பினும் அவருக்கு மரண தண்டனை விதிக்கின்ற தீர்ப்பானது, நீதியின் தீர்ப்பாக இல்லாமல் அரசியல் தீர்ப்பாக இருக்கிறது. அத்தீர்ப்பு கூறுவதாவது: இந்தச் சம்பவம்... சமூகத்தின் மனசாட்சியை உலுக்கியிருக்கிறது... குற்றவாளிக்கு மரண தண்டனை வழங்குவதன் மூலம் மட்டுமே அதனை திருப்திப்படுத்த முடியும்... மனுதாரர் ஒரு சரணடைந்த தீவிரவாதியாகவும், நாட்டிற்கெதிரான துரோகச் செயல்களை எவ்வித வருத்தமுமின்றித் தொடர்ந்து செய்பவராகவும், சமூகத்திற்கு ஒரு தொல்லையாகவும் இருப்பதால் அவரது உயிர் பறிக்கப்பட வேண்டும்.

எனவே, அப்சலின் உயிர் பறிக்கப்பட வேண்டும்!! ஆனால், என்ன ஆதாரங்களின் அடிப்படையில்? அப்சல் கைது செய்யப்பட்டு உயர் பாதுகாப்புச் சிறையில் அடைக்கப்பட்ட பின்பு குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்ட 5 மாத காலங்கள் வரை அவருக்கு வழக்குரைஞரும் வழங்கப்படவில்லை; சட்ட ஆலோசனையும் கிடைக்கவில்லை. 2001 டிசம்பர் 10 ஆம் தேதியன்று போலீசாரின் கடுமையான சித்ரவதைக்குப் பிறகு, ஊடகங்கள் முன்பு அப்சல் அளித்த ஒப்புதல்

வாக்குமூலம் பரவலாக ஒளிபரப்பப்பட்டது. இந்த போலியான ஒப்புதல் வாக்குமூலம் உயர்நீதிமன்றத்தாலும், உச்சநீதிமன்றத்தாலும் நிராகரிக்கப்பட்டது. எனவே, அப்சலின் ஒப்புதல் வாக்குமூலம் ரத்து செய்யப்பட்டது; காஷ்மீர் அமைப்புகளுடன் அவரது தொடர்புகள் நிரூபிக்கப்படவில்லை; போலீசாரால் புனையப்பட்ட எண்ணற்ற பொய் சாட்சிகள் நீதிமன்றத்தில் போலியானவை என்று நிரூபிக்கப்பட்டுள்ளன; பாராளுமன்றத்தின் மீது தாக்குதல் நடத்திய பயங்கரவாதிகளுடன் அவருக்குத் தொடர்புகள் இருந்ததாக மட்டுமே நம்பத்தகுந்த வகையில் நிரூபிக்கப்பட்டுள்ளது. ஆனால், இன்றுவரை அவர்கள் யார் என்பது எவருக்குமே தெரியாது!!! ஏன் அவர்களது பெயர்கள் வெளியிடப்படவில்லை? இருப்பினும், அப்சலின் உயிர் பறிக்கப்பட வேண்டும். இவற்றிற்கு அப்பால், தன்னைத் தற்காத்துக் கொள்வதற்காக அவருக்கு வழக்குரைஞர் கூட இல்லை. நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட வழக்குரைஞர் அவருக்கு எதிராகச் செயல் பட்டதால் 80 அரசுத்தரப்பு சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. இருப்பினும், எவ்விதத் தீர்க்கமான ஆதாரமின்றி, வழக்கு முழுவதும் ஓட்டைகள் இருந்தன.

அப்சலின் கதை

1989 ஆம் ஆண்டில், பிற காஷ்மீரி இளைஞர்களைப் போலவே அப்சலும், தான் 20 வயது கூட நிரம்பாத காலத்தில், போராளியாகப் பயிற்சி பெறுவதற்கு எல்லையைக் கடந்தார். வெறுப்புற்ற நிலையில் அவர் பயிற்சி பெறாமலேயே திரும்பினார். துப்பாக்கியைக் கீழே போட்ட அவர் தில்லி பல்கலைக்கழகத்தில் சேர்ந்தார். 1993-ஆம் ஆண்டு, போராளியாகப் பயிற்சி பெற்றிராத நிலையில் அவர் எல்லைப் பாதுகாப்புப் படையினரிடம் சரணடைந்தார். இவ்வாறு சரணடைந்ததற்காக, நன்கு அறிமுகமான ஜே.கே.எல்.எப். (ஜம்மு காஷ்மீர் விடுதலை முன்னணி) அமைப்பின் உறுப்பினர்களாக இருந்த தனது உறவினர்கள் அனைவராலும் அவர் புறக்கணிக்கப்பட்டார். இவ்வாறு சரணடைந்த பிறகு தான் அவருக்குப் பீதியூட்டும் அனுபவங்கள் தொடங்கின. அவர் ஒரு வியாபாரத்தைத் தொடங்கினார். ஆனால், 2000ஆம் ஆண்டு முதல் இராணுவம் அவரை உளவாளியாகப் பணியாற்றும்படி தினந்தோறும் தொந்தரவு செய்தது. 2000ஆம் ஆண்டு சிறப்பு அதிரடிப் படை அவரை கைது செய்து, அவர் தனது விடுதலைக்கு ஒரு இலட்சம் ரூபாய் கொடுக்கும் வரை அவரை தொடர்ந்து சித்ரவதை செய்தது. மேலும் அவர் சிறப்பு அதிரடிப் படையின் சிறப்பு போலீஸ் அதிகாரியாக நியமிக்கப்பட்டார். பாராளுமன்ற தாக்குதலில் கொல்லப்பட்டவர்களில் ஒருவரான முகம்மது என்பவரும் அப்போது சிறப்பு அதிரடிப்படை முகாமில் இருந்தார். சிறப்பு அதிரடிப்படைதான் அப்சலிடம் முகம்மது என்பவருடன் தில்லிக்குச் செல்ல வேண்டும் என்றும், அவ்வாறு செய்ய மறுத்தால் அவர் மீண்டும் கைது செய்யப்பட்டு சித்ரவதைக்குள்ளாக்கப் படுவார் என்றும் மிரட்டல்கள் விடுத்தது. பின்னர், முகம்மது பாராளுமன்றத் தாக்குதலின் போது கொல்லப் பட்டார்; அப்சல் தாக்குதலுக்குத் துணை புரிந்ததற்காக காஷ்மீரில் கைது செய்யப்பட்டார். அவர் கொடூரமான சித்ரவதைக்கு ஆளாக்கப்பட்டதோடு அல்லாமல், தங்களுடன் ஒத்துழைக்க மறுத்தால் அவருடைய குடும்பத்தாரும் கொல்லப்படுவார்கள் என்று மிரட்டல் விடுக்கப்பட்டது.

அப்சலின் விடுதலையைக் கோரி மக்கள் இயக்கம்

இதுதான் அப்சலைத் தூக்கிலிடுவதன் பின்னணியில் உள்ள சதி. அப்சலுக்குத் தூக்கு தண்டனை வழங்கப் பட்டதற்கு எதிராகக் காஷ்மீரில் மாபெரும் கிளர்ச்சிகள் வெடித்த வண்ணம் இருக்கின்றன. காஷ்மீர் மக்கள் இந்திய நீதிமன்றங்களிடமிருந்து நீதியை எதிர்பார்க்கவில்லை. அவர்கள் முகம்மது அப்சலை ஆக்கிரமிப்புச் சக்தியின் நீதிமன்றங்களில் விசாரிக்கப்படுகின்ற போர்க்கைதியைப் போல்தான் பார்க்கிறார்கள். இந்தியாவிலும்கூட பெரும் எண்ணிக்கையிலான அறிவு ஜீவிகளும், வழக்குரைஞர்களும், எழுத்தாளர்கள் முதலியோரும் அப்சல் தூக்கிலிடப்படக்கூடாது என்று கோரி வருகின்றனர். ஆனால் அத்வானி வகையறாக்கள் அப்சலின் இரத்தத்தைக் குடிப்பதற்குக் கோரு கிறார்கள். இ.க.க.(மாவோயிஸ்ட்) தான் அப்சல் தூக்கிலிடப் படுவதற்கு எதிராகக் காட்டமான அறிக்கையை வெளியிட்டது.

அக்டோபர் 7ஆம் தேதியன்று வெளியிடப் பட்ட அறிக்கையில், இக.க.(மாவோயிஸ்ட்) கூறியதாவது: உச்சநீதிமன்றம் 2001 டிசம்பர் மாதம் பாராளுமன்றத்தின் மீதான தாக்குதலுக்கு முகம்மது அப்சல் குருவுக்கு மரண தண்டனை வழங்கியுள்ளதோடு, தண்டனையை நிறைவேற்றுவதற்கு அக்டோபர் 20 ஆம் தேதியை நிர்ணயித்துள்ளது. இது நியாயமற்றதும், மனிதாபிமானதற்றதும் மட்டுமல்ல; இது இந்திய ஆட்சியாளர்களின் முஸ்லீம் விரோதப் போக்கையும், காழ்ப்புணர்ச்சியையும் வெட்ட வெளிச்சமாக்குகிறது. வழக்கு முறையாக நடத்தப்படவுமில்லை; வழக்கிற்கு நேரடி சாட்சியங்களும் இல்லை. வெறும் சந்தர்ப்ப சாட்சியத்தின் அடிப்படையில் தான் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. அப்சலுக்கு விதிக்கப்பட்ட தண்டனை மாத்திரமல்ல. மாறாக, அது காஷ்மீர் தேசிய விடுதலைப் போராளிகளுக்கு எதிராகவும், இந்தியாவிலுள்ள ஒட்டுமொத்த முஸ்லீம் சமுதாயத்திற்கு எதிராகவும் பாசிச இந்திய அரசால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற போரைப் பறைசாற்றுவதாகவும் இருக்கிறது. சட்டத்தின் முன்பு அனைவரும் சமம்- என்று கூறுவதன் மூலம் இந்தத் தெளிவான உண்மையை மறைக்க முடியாது.

இந்தியாவின் இந்து ஆதரவு, முஸ்லீம் விரோதப் பாசிச ஆட்சியார்களிடமிருந்து இயற்கையாகவே ஒருவர் இதைவிடக் குறைவாக எதையும் எதிர்பார்க்க முடியாது.

அவர் பா.ஜ.க. அல்லது காங்கிரசு அல்லது வேறு ஏதேனும் பாராளுமன்றக் கட்சி வேடமணிந்திருந்

தாலும் அல்லது சட்டமன்றம், நீதித்துறை, நிர்வாகத் துறை, போலீசு மற்றும் பிற பாதுகாப்புப் படைகள் போன்ற வடிவத்தில் இருந்தாலும் முஸ்லீம் சமுதாயத் திற்கு எதிராக அவர்களது பாரபட்ச அணுகுமுறை தெள்ளத் தெளிவாக இருக்கிறது. அதனால்தான் கடந்த பல பத்தாண்டுகளில் ஒரு இந்துவெறி பயங்கர வாதிக்குக் கூட, அவர் எவ்வளவுதான் முஸ்லீம்கள், தலித்துகள் மற்றும் பெண்கள் ஆகியோரை உயிருடன் எரித்திருந்தாலும் கூட, இத்தகைய கடுமையான தண்டனை விதிக்கப்படவில்லை. இந்திய அரசியல் சட்டத்திற்கும் மற்றும் ஒவ்வொரு சட்டத்திற்கும் எதிரான வகையில் மக்கள் படுகொலை செய்யப் பட்டபோது, அதற்காக எந்தவொரு போலீஸ் அதிகாரி யும் தூக்கு மேடைக்குச் செல்லவில்லை. முஸ்லீம்களை படுகொலைகள் செய்த பா.ஜ.க. வின் நரேந்திர மோடி போன்றவர்களும், சீக்கியர்களைப் படுகொலை செய்த காங்கிரசின் எச்.கே.எல். பகத் போன்றவர்களும்கூட பட்டங்கள் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டிருக் கிறார்கள். மதவெறியைக் கிளப்பிவிட்டு பாபரி மசூதி இடிப்பை நடத்தி, நாட்டில் இதுவரை கண்டிராத அளவுக்கு சாவுகளும், பேரிழப்புகளும் நடப்பதற்கு காரணமாக இருந்த வாஜ்பாய்களும், அத்வானிகளும் தூக்கிலிடப்பட்டிருக்க வேண்டும். உண்மையான பயங்கரவாதிகள், அவர்கள் மதவெறி - பாசிச வகை யினராக இருந்தாலும் அல்லது அரசு ஆதரவு பெற்ற வகையினராக இருந்தாலும், எவ்விதமான தண்டனை யும் பெறாமல் உலாவந்து கொண்டிருக்கையில், விடுதலைப் போராளிகளும், புரட்சியாளர்களும், முஸ்லீம் இளைஞர்களும் அரசாலும், அரசு ஆதரவு பெற்ற கும்பலாலும் தினந்தோறும் கொல்லப்படு கிறார்கள். நமது நாட்டில் ஜனநாயகத்தின் உண்மை யான முகம் இதுவாகத்தான் இருக்கிறது.

உண்மையிலேயே, பாராளுமன்றத்தில் தான் நமது நாட்டின் பெரிய பயங்கரவாதிகளும், கூலிப்படைத் தலைவர்களும், குற்றவாளிகளும், ஊழல் பேர்வழி களும் மிக அதிக எண்ணிக்கையில் இருக்கிறார்கள். இந்தக் குற்றவாளிக் கும்பல்கள் அனைத்துப் பாராளு மன்றக் கட்சிகளிலும் தலைமைப் பொறுப்பில் இருப்பதோடு, அவர்கள் பாராளுமன்றத்திலும், சட்ட மன்றங்களிலும் நுழைவது மிகவும் சர்வசாதாரண விஷயமாகி விட்டது. மக்களுடைய கடின உழைப்பின் வருவாயை நூற்றுக்கணக்கான கோடிகளில் கொள்ளை யடிக்கின்ற ஊழல் பேர்வழிகளும் கூட அதிகாரத்தின் உயர் பதவிகளை அலங்கரித்துக் கொண்டிருக்கிறார்கள். சில எலும்புத்துண்டுகளுக்காகத் தாய்நாட்டை அன்னிய எஜமானர்களுக்கு விற்கின்ற இந்த துரோகிகளுக்கு எவ்விதமான குற்றவுணர்வும் இருப்பதில்லை. இருப் பினும், இவ்வனைத்து தேசவிரோத, மக்கள் விரோத கும்பல்களும் நாட்டின் ஜீவாதாரங்களின் மீது ஆதிக்கம் செலுத்தி, நாட்டின் பாதுகாப்பிற்குப் பெரும் அச்சுறுத் தலாக விளங்குகிறார்கள். முஸ்லீம் மக்களின் இரத் தத்தில் தோய்ந்த கரங்களை பெற்றுள்ளதாகவும், அரக்கத் தனத்தையும் அப்பட்டமாக வெளிப்படுத்தியுள்ள தாகவும் இருக்கின்ற பாரதீய ஜனதா கட்சி, எவ்வித கருணையும் காட்டப்படாமல் மரண தண்டனை நிறை வேற்றப்பட வேண்டும் என்று வெட்கமின்றி உரக்கக் கூவிக் கொண்டிருக்கிறது.

அரசின் பாதுகாப்புப் படைகள் 1989- ஆம் ஆண்டு தொட்டு விவரிக்க முடியாத அளவுக்கு அட்டூழியங் களைப் புரிந்துள்ளனர். அவர்கள் 80,000 காஷ்மீரி மக்களை படுகொலைகள் செய்தார்கள்; ஆயிரக்கணக் கான மக்களைச் சித்ரவதைக்குள்ளாக்கினார்கள்; காஷ்மீரிகளின் சொத்துக்களை அழித்துள்ளதோடு முஸ்லீம்களின் மசூதிகளைக்கூட விட்டுவைக்க வில்லை. நூற்றுக்கணக்கான மக்கள் எவ்விதத் தடயமு மின்றி வெறுமனே காணாமல் போயினர். காஷ்மீர் இரத்தக்கண்ணீர் வடித்ததுக் கொண்டிருக்கும் போது, அரசானது புண்ணுக்குப் புனுகு தடவ தீர்மானித்து, அப்சலைத் தூக்கு மேடைக்கு அனுப்பச் சதி செய்து கொண்டிருக்கிறது. மன்னிப்புக் கோருவதில்லை என்கின்ற அப்சலின் முடிவு காஷ்மீரி மக்களின் தன்மானத்தையும், விடுதலை வேட்கையையும் வெளிப் படுத்துகிறது. காஷ்மீரி மக்களின் மீதான கொடூரமான ஒடுக்குமுறை தொடர்கின்ற வரையிலும், இளைஞர்கள் கடத்தப்படுவதும், கொல்லப்படுவதும், பெண்கள் பாலியல் வன்முறைக்கு ஆளாக்கப்படுவதும், முஸ்லீம் சமூகம் புறக்கணிக்கப்பட்டு மேலும் அன்னியப் படுத்தப்படும் வரையிலும் பாராளுமன்றத்தின் மீதான தாக்குதல்களும், அரசியல் தலைவர்கள், கொடூரமான போலீஸ் அதிகாரிகள், அதிகார வர்க்கத்தினர் ஆகியோர் கொல்லப்படுவதும், இடைவிடாது தொடர்ந்து கொண் டேயிருக்கும். மரண தண்டனைகள் விடுதலை போராளி களின் மனவுறுதியை மேலும் வலுப்படுத்தவே செய்யும். காஷ்மீருக்காக உயிர்நீத்த தியாகியாக அப்சல் அடையாளம் காணப்படுவார். அவரது தியாகம் மேன் மேலும் காஷ்மீரி இளைஞர்களை அவரது வழியில் பயணிக்க வைக்கும் உந்து சக்தியாக அமையும்.

நாம் அப்சலுக்கு விதிக்கப்பட்டிருக்கும் மரண தண்டனையை ரத்து செய்ய வேண்டும் என்ப தோடு, காஷ்மீரில் பாதுகாப்பற்ற சூழலை உருவாக்குகின்ற அனைத்துப் பாதுகாப்புப் படைகளையும் திரும்பப் பெற வேண்டும் என்றும், காஷ்மீரி மக்கள் மற்றும் முஸ்லீம்கள் மீதான கொடுமைகளுக்குக் காரணமாக விளங்குகின்ற அதிகாரிகளைத் தண்டிக்க வேண்டும் என்றும், அனைத்துக் கறுப்புச் சட்டங்களையும் ரத்து செய்ய வேண்டும் என்றும், அனைத்து அரசியல் கைதி களையும், போலீசு, துணை இராணுவம் மற்றும் ஆயுதப் படைகளின் சட்டவிரோத பாதுகாப்பில் இருக்கின்ற அனைத்து காணாமல் போனவர்களையும் விடுவிக்கக் கோரியும் மாபெரும் மக்கள் இயக்கத்தை நடத்துவோம். மேலும், எல்லாவற்றிற்கும் மேலாக, நாம் காஷ்மீரி தேசத்தின் சுயநிர்ணய உரிமையை வலியுறுத்தி ஒரு சக்தி வாய்ந்த மக்கள் இயக்கத்தைக் கட்ட வேண்டும்.

❒

திருத்தல்வாதத்தை எதிர்ப்போம், புரட்சியில் முன்னேறுவோம்!

"திருத்தல்வாதத்தை எதிர்த்துப் போராடாமல், புரட்சியில் ஓரடிகூட முன் எடுத்து வைக்க முடியாது"

சர்வதேசப் பொதுவுடைமை இயக்கத்தில் 1956-ல் தோன்றிய குருச்சேவின் திருத்தல்வாதத்தை எதிர்த்த கடுமையான போராட்ட வரலாறு இன்று ஐம்பதாண்டுகளைக் கடந்துள்ளது. இருந்த போதிலும் திருத்தல்வாதம் சர்வதேசப் பொதுவுடைமை இயக்கத்தின் முதன்மை அபாயமாகும். ஆகையால், கொள்கை அரசியல், சித்தாந்தம், முறையியல் ஆகியவற்றின் சமூக செயல்தளங்களில் திருத்தல்வாதத்தின் எல்லாக் கருத்தமைப்புகளையும் எதிர்த்துத் தொடர்ந்து போராடுவது முதற்பணியாகும். அத்தோடு மார்க்சியத்துக்கும் திருத்தல்வாதத்திற்கும் இடையிலான எல்லைகளையும் தெளிவாக்கிக் கொள்ள வேண்டும்.

திருத்தல்வாதத்தை எதிர்த்துச் சமரசம் இன்றி தொடர்ந்து போராடாமல் புரட்சியில் ஓரடிகூட முன்னெடுத்துவைக்க முடியாது என 150 ஆண்டுகாலச் சர்வதேசப் பொதுவுடைமை இயக்க வரலாறு குறிப்பாக பாரீஸ் கம்யூன், ரசியப் புரட்சி, சீனப்புரட்சி ஆகியவைகள் கற்பித்துள்ளன. இது உலகளவில் உண்மையாகும்.

உண்மையில் மார்க்சியம் தோன்றியதிலிருந்தே, திருத்தல்வாதச் சிந்தனை திருத்தல்வாத முறையியல் ஒரு எதிர் போட்டிக் கொள்கையாக உருவாகியது. மாபெரும் ஆசான்களான மார்க்சும் எங்கெல்சும் புருதானியம், பக்குனினியம் மற்றும் ஹெகலின் கருத்து முதல்வாதம் ஆகிய எதிர்முரண் கொள்கைகளை எதிர்த்துத் தங்கள் வாழ்நாளிலேயே போராடித் தோற்கடித்துள்ளார்கள். அந்நாட்களில் இச்சிந்தனைகளெல்லாம் திருத்தல்வாதமாக அல்லாமல் எதிர் கொள்கையாகவே அடையாளப் படுத்தப்பட்டன. பலத்த கூக்குரலுக்கும் இடையில் மார்க்சியத்தை மறு ஆய்வு செய்த பெர்ன்ஸ்டீன் தான் இதைத் திருத்தல்வாதம் என அடையாளப்படுத்தி முன்னுரைத்தார். உண்மையில் அரசியல் களத்தில் திருத்தல்வாதம், மார்க்சியத்தின் அடிப்படையிலான, வர்க்கப் போராட்டம், வர்க்கப் போராட்டம் மூலமாக முதலாளியத்தை நிர்மூலம் செய்து, பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தின் வழி சோசலிச நிர்மானம் செய்தல் ஆகியவற்றை கைவிட்டது.

ஆம், திருத்தல்வாதம் ஒரு சர்வதேசக் கருப்பொருள். திருத்தல்வாதத்தின் சாராம்சத்தை ஒரே வாக்கியத்தில் தொகுக்க முடியும்.

"இறுதி லட்சியம் (குறிக்கோள்) ஒன்றுமில்லை. உடனடிப் போராட்டமே எல்லாம்".

"தொழிலாளிகளிடையே நிலவிய பலவீனங்களுக்கும், ஊசலாட்டங்களுக்கும் இடையில், 19-ம் நூற்றாண்டின் இறுதியில், புரட்சிகர மார்க்சியம், திருத்தல்வாதத்தை எதிர்த்து நடத்திய சித்தாந்தப் போராட்டத்தில் வெற்றியை நோக்கி வெற்றிகரமாக முன்னேறியது" என தோழர் லெனின் கூறுகிறார். (மார்க்சியம், திருத்தல்வாதம் - லெனின்) 1917-ல் மாபெரும் தலைவர் லெனின் தலைமையில் நடைபெற்ற மாபெரும் அக்டோபர் சோசலிச ருசியப் புரட்சியின் வெற்றியினால் மார்க்சியத்தின் உயிர்மைகள் (வேர்கள்) பலமடைந்தன. இதுவரை புத்தகங்களில் மட்டுமே காணப்பட்ட மார்க்சியம் தற்போது வாழ்கிற உண்மையாகியது. உலகின் ஒரு பகுதியில் முதலாளிய ஏகாதிபத்திய அமைப்பை நிர்மூலப்படுத்திய ருசியப் புரட்சி, மார்க்சியத்தின் அடிப்படையாலான தொழிலாளி மற்றும் உழவர் ஆட்சி எனும் புதிய அமைப்பை - சோசலிச சமூகத்தைப் பெற்றெடுத்தது.

தேசிய, சர்வதேசிய அளவில் பிளக்னேவ் காட்ஸ்கி மற்றும் மார்ட்ரோவ், டிராட்ஸ்கி ஆகியோரை உள்ளடக்கிய எல்லா மென்ஸ்விக்குகளையும், அவர்களின் திருத்தல்வாதத்தையும், எதிர்ப்புரட்சிச் சிந்தனைகளையும், ரசியப் புரட்சியின் போது ஒவ்வொரு காலகட்டத்திலும் தோழர் லெனின் கடுமையாகப் போராடித் தோற்கடித்தார். அதன் பின்னரே ரசியப் புரட்சி வெற்றி அடைந்தது.

முதலாளியத்தின் உச்சபட்ச வடிவமே ஏகாதிபத்தியமென பகுப்பாய்வு செய்து புரட்சியின் உடனடிச் சாத்தியப்பாடுகள் என ஏகாதிபத்திய கூட்டத்தில், முதலாளியத்தினுள்ளும் வளரும் நெருக்கடிகளையும் முரண்பாடுகளையும் தோழர் லெனின் விவரிக்கிறார். ஏகாதிபத்தியத்தைப் புரட்சியின் தொடக்ககாலம் என தோழர் லெனின் அடிக்கடி அடையாளப்படுத்துகிறார்.

ஏகாதிபத்தியச் சிக்கல்கள் குறித்து, குறிப்பாக ஏகாதிபத்தியப் போர்க்காலங்களில் தொழிலாளி வர்க்கக் கட்சியான பொதுவுடைமைக் கட்சியின் பொறுப்புக்களைப் பற்றி தீவிரத் திருத்தல்வாதிகளான பெர்ன்ஸ்டின், காவுட்ஸ்கி ஆகியோரை 2-ம் அகிலத்திலும், அதே போல உள்நாட்டில் உள்ள திருத்தல்வாதிகளை எதிர்த்தும் தோழர்கள் லெனினும் ஸ்டாலினும் கடுமையாகப் போராடினார்கள். ஏகாதிபத்தியப் போர்க்காலங்களில், ஓடுகாலி காவுட்ஸ்கியின் சிந்தனைகளை எதிர்த்துப் போராட, தமது தந்தைநாட்டைப் பாதுகாக்கப் புதிய சிந்தனைகளை முன்வைக்கிறார். அதாவது ஏகாதிபத்தியப் போரை அந்தந்த நாடுகளின்

மக்கள்

தொழிலாளி வர்க்கம் நடத்துகிற புரட்சியில் வெற்றி பெறும் உள்நாட்டுப் போராக மாற்றுகிறார். இந்தச் சிந்தனைகளைப் போர்க் காலங்களில் நிறுவிய தோழர் லெனின் பொதுவுடைமையாளர் மீது புதிய பொறுப் புக்களைச் சுமத்துவதோடு காவுட்ஸ்கியின் திருத்தல் வாதக் கொள்கையை உடைத்து நொறுக்குகிறார். திருத்தல்வாதிகளின் எல்லாச் சதிகளையும் முறியடித்து இறுதியாக, மாபெரும் தோழர்கள் லெனின் - ஸ்டாலின் தலைமையிலான ரசியப் புரட்சி, தொடர்ந்த இந்த சிந்தனைகளின் விளைவாக வெற்றி பெறுகிறது. இந்த வளர்ச்சிப் போக்கில் மார்க்சியம் லெனினியம் என்ற இரண்டாம் கட்டத்தை அடைகிறது. ஏகாதிபத்திய காலகட்டத்தில் ரசியப் புரட்சியின் வெற்றிக்கான வளர்ச்சிப் போக்கில் திருத்தல்வாதத்தை எதிர்த்த போராட்டமானது வர்க்கப் போராட்டம் அடிப்படை யானது என்றும், வர்க்கப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வது மூலம் மார்க்சியம் கூர்மையடைந்து லெனி னியமாக வளர்ச்சியடைந்தது என்பதும் சாத்தியமானது. (அடையப்பட்டது).

லெனின் மறைவுக்குப் பின்னர் சோவியத் ரசியாவின் சோசலிசக் கட்டுமானப் பணிகளின் போது தோழர் ஸ்டாலின் திருத்தல்வாதிகளையும் சதிகாரர்களையும் எதிர்த்துக் கடுமையாகப் போராடினார்.

மேலும், சோசலிசப் பணி, சோசலிசக் கட்டுமானம், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை வலுப்படுத்துவது ஆகிய பணிகளில் ஸ்டாலின் எதிர்ப்புரட்சிச் சதிகாரர் களுடனும் திருத்தல்வாதிகளுடனும் குறிப்பாகச் சதிகாரர்களான டிராட்ஸ்கி, ஜெய்நோவ், புக்காரின் ஆகியோருடன் ஒவ்வொரு படிநிலையிலும் போது மான அளவு போராடுகிறார்.

1953-ல் ஸ்டாலின் மறைகிறார். வெகுகாலமாகக் கட்சியில் அமைதியாக அமர்ந்திருந்த குருச்சேவ் அதன் பின்னரே தனது உண்மை முகத்தோடு வெளிவருகிறார். 1956-ல் இருபதாவது கட்சிக் காங்கிரசில் "அமைதியான மாற்றம்" - "அமைதியான போட்டி" - "சமாதான சக வாழ்வு" ஆகிய கொள்கைகளை முன்வைக்கிறார். பின்னர் "எல்லோருக்குமான நாடு" எனும் கொள்கை யையும் வைக்கிறார். குருச்சேவின் திருத்தல்வாதம் பரந்த அளவில் உருவாகிறது. பழைய திருத்தல் வாதத்திலிருந்து, புதிய திருத்தல்வாதம் அடையாளப் படுத்தப்படுகிறது. அதற்கு இரண்டு அடிப்படைக் காரணங்கள் உள்ளது.

அ) ஆரம்ப கால திருத்தல்வாதத்திடமும் திருத்தல் வாதிகளிடமும் அரசதிகாரம் இல்லை. ஆகையால் அரசதிகாரத்தை முறையற்றோ முறையோடே பயன் படுத்தும் கேள்விக்கிடமில்லை. அடிப்படையில் ஆரம்ப காலத் திருத்தல்வாதம் சித்தாந்தத்தளத்தில் புரட்சிக்கு எதிரான பாத்திரத்தையே கொண்டிருந்தது. (வகுத்தது).

ஆ) மாபெரும் தோழர்கள் லெனின், ஸ்டாலின் தலைமையில் தொழிலாளி வர்க்கத்தால் அமைக்கப் பட்ட பலம்வாய்ந்த சோசலிச சமூகம், சோசலிச அரசதிகாரம் ஆகியவற்றைப் பெற்ற பின்னர் ஸ்டாலின் மறைவை அடுத்து குருச்சேவின் திருத்தல்வாதம் தோன்றியது. அந்த வகையில் அரசதிகாரத்தை "அமைதி வழியில் சோசலிச மாற்றம்" என்ற எதிர்ப்புரட்சிக் கொள்கையை அமுல்படுத்தச் செயல் தந்திரமாக உபயோகப்படுத்துவது, அரசதிகாரத்தின் கட்டுப் பாட்டில் பலத்த பாதிப்பை ஏற்படுத்தும்.

அடிப்படையில் இந்த இரு காரணங்களுக்காக குருச்சேவின் திருத்தல்வாதம் நவீன திருத்தல்வாதம் என அழைக்கப்படுகிறது.

உலகின் பல்வேறுபட்ட பொதுவுடைமைக் கட்சி களில் அதிகமான பிளவுகளும் உடைவுகளும் குருச் சேவின் திருத்தல்வாதம் தோன்றிய பின்னர் காணப் பட்டன. குறிப்பாக அமைதியாகச் சோசலிச மாற்றத் தைக் கொண்டுவரும் திருத்தல்வாதக் கட்சிகளும் தேர்தலில் பங்கேற்பதையே பிரதான (முதன்மை) வேலைத்திட்டமாக மாற்றிக் கொண்டன. சட்ட மன்றத்துக்கு ஏற்றவாறு சட்டமன்ற உறுப்பினர் களையும், நாடாளுமன்ற உறுப்பினர்களையும், அமைச்சர்களையும் தயாரிக்கும் பணி ஒன்றே அவர்களால் அணிதிரட்டப்பட்ட மக்கள் இயக்கங் களின் அமைப்புக்களின் ஒரே இலக்காக இருந்தது.

தெலுங்கானாப் போராட்டத்தைக் காட்டிக் கொடுத்த ஒன்றுபட்டிருந்த இந்தியப் பொதுவுடை மைக் கட்சியின் தலைமை 1952-லிருந்து தேர்தலில் பங்கேற்கத் தொடங்கி அதையே முதன்மைப் பணியாக் கியது. சர்வதேச அளவில் குருச்சேவின் திருத்தல்வாத வழி ஒப்புக்கொள்ளப்பட்டது. அவர்களை மேலும் அழிவை நோக்கி அழைத்துச் சென்றது.

எது எப்படியிருந்தாலும் குருச்சேவின் திருத்தல் வாதம் ஏகாதிபத்தியத்தோடு கூட்டுச் சேர்ந்து குறிப்பாக அமெரிக்க ஏகாதிபத்தியத்தோடு கூட்டுச்சதி செய்து, சோவியத் அரசைக் கைப்பற்றி சோசலிச வேடந்தாங்கி, அதன் கருத்தை வலுப்படுத்த அரசதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தியது. திருத்தல்வாதக் கட்சிகளின் முகவர்களும் தலைவர்களும் அவரவர் நாடுகளில் முன் எப்போதைக் காட்டிலும் மிகக் கடுமையாக திருத்தல் வாதக் கொள்கைகளைக் கடைபிடித்து (ஏற்று) சோசலிச மாறுதலுக்கான அமைதிவழியைப் பின்பற்றுபவர் களாக மாறினர். சோசலிசத்தை வார்த்தையிலும், ஏகாதிபத்தியத்தை இதயத்திலும் கொண்டிருந்த புதிய குருச்சேவின் அரசு, அரசதிகாரத்தைப் பயன்படுத்தி ரசியாவை முதலில் சமூக ஏகாதிபத்தியமாகவும் அல்லது சமூக பாசிச சக்தியாகவும் பின்னர் வல்லர சாகவும் மாற்றியது.

இரண்டாம் உலகப்போரில் தோழர் ஸ்டாலின் தலைமையில் ரசிய செஞ்சேனை பாசிசவாதி ஹிட்லரின் நாஜிப்படைகளைத் தோற்கடித்து நொறுக்கி வரலாற்று வெற்றியைப் பெற்றது. சோசலிச முகாம் தோன்றியது.

அதன் பின்னர் 1949-ல் மாபெரும் தலைவர் மாவோவின் தலைமையில் உலகைக் குலுக்கிய இன்னொரு புரட்சி நடந்தது. தொடர்ந்து மக்கள் யுத்தத்தால் சீனப்புரட்சி வெற்றியடைந்தது. தோழர் மாவோவால் சொல்லப் பட்ட தொடர்ந்த (நீண்ட) மக்கள் யுத்தப் பாதையானது, ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளில் மக்கள் விடுதலைக்கான ஒரே சரியான வழியாகியது. இந்த வழியை உறுதிப்படுத்த சீனப் பொதுவுடைமைக் கட்சியிலும், சர்வதேசப் பொதுவுடைமை இயக்கத் திலும் வலது, இடது திருத்தல்வாதிகளான சென்யூ, லி.லி.கான், வாங்மிங் போன்றவர்களை தீவிரமாக எதிர்த்து தோழர் மாவோ போராட வேண்டியிருந்தது. இம்மாதிரியான போராட்டங்களினாலேயே சீனப் புரட்சி வெற்றியடைய முடிந்தது. தோழர் மாவோ திருத்தல்வாதத்தை எதிர்த்துப் போராட்டப் பதாகையை உயர்த்திப் பிடித்தார். குருச்சேவின் திருத்தல்வாதம் தோன்றிய பின்னர், குருச்சேவின் திருத்தல்வாதத் தையும் நவீன திருத்தல்வாதத்தையும் எதிர்த்து தோழர் மாவோ நடத்திய தத்துவார்த்த சித்தாந்தப் போராட்டமானது "மாபெரும் விவாதம்" என அறியப்பட்டது. இந்த எதிர்ப்பார்வைகளை மார்க்சியம் தோன்றிய காலத்தி லிருந்தே எதிர்த்து வந்தபோதிலும், குருச்சேவின் திருத்தல்வாதத்தை எதிர்த்து தொடர்ந்து இடைவிடாமல் மாபெரும் விவாத (வழியில்) அமைப்பில் நடத்தி போரானது முன் எப்போதைக் காட்டிலும் தீவிர மாகவும், திருத்தல்வாத்தின் எல்லைகளைத் துல்லிய மாகக் காட்டும் தீர்மானமான விசாதமாகவும் நிருபண மாகியது.

இந்த மாபெரும் விவாதத்தின் விளைவாக திருத்தல் வாதத்தை எதிர்த்து மார்க்சியம் நடத்திய தீவிரமான போராட்டமானது (மையப்புள்ளி என்பது ஆயுதந் தாங்கிய போராட்டமும் பாராளு மன்ற வழியுமாகும்) சர்வதேச அளவில், போராட்ட நடைமுறையில் உண்மையான பொதுவுடைமை வாதிகள் போலியான பொதுவுடைமைவாதிகள் என இரு முகாம்களைத் தோற்றுவித்தது. மாவோவின் தலைமையிலான உண்மையான பொதுவுடைமை முகாமைச் சேர்ந்த வர்கள் வலிமையடைந்து திருத்தல்வாதத்தை எதிர்த்த போராட்டத்தினை முன்னைக் காட்டிலும் கடுமை யாக்கினர். அதன் விளைவாக ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளில் நடைபெற்றுக் கொண்டி ருந்த ஆயுதந்தாங்கிய புரட்சியானது ஆற்றல் பெற்றது. (மேலும் வலிமை அடைந்தது)

பின்னர் தோழர் மாவோவின் தலைமையில், முதலாளித்துவத்தை மீண்டும் அமைக்க, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை நிராகரித்த சீனக் குருச்சேவ் களான லியோ கோஷி குழுவினரின் முதலாளியப் பாதையை எதிர்த்து ஒருங்கிணைந்த தீவிரமான போராட்டம் சீனாவில் நடத்தப்பட்டது. இது மகத்தான தொழிலாளி வர்க்கப் பண்பாட்டுப் புரட்சியாக அறியப்பட்டது.

தோழர் மாவோ மார்க்சிய லெனினியத்தின் பல்வேறுபட்ட ஈடிணையற்ற பகுதிகளை, சீனப் புரட்சி யின் சரியான நடைமுறையாலும், மாபெரும் விவாதம் போன்ற சர்வதேச வர்க்கப் போராட்டத்தாலும் வளர்த் தெடுத்தார். அதை நாம் மாவோவின் சிந்தனையாக (தற்போது மாவோவியம்) பண்பு ரீதியில் மார்க்சிய லெனினியத்தின் மூன்றாம் கட்ட வளர்ச்சியாகப் பார்க்கிறோம்.

இதே காலகட்டத்தில் இந்தியாவில் ஒன்று பட்டிருந்த பொதுவுடைமைக் கட்சியில் தீவிரமான விவாதம் நடந்தது. குறிப்பாக 1962-ல் எதிர்ப்புரட்சி இந்திய அரசின் சோசலிச சீனாவின் மீதான தீவிரமான ஆக்கிரமிப்பால் கட்சிக்குள் நடைபெற்ற போராட்ட மானது மிகக் கடுமையாகியது. மாபெரும் விவாத இடி முழக்கத்தின் விளைவுகளான உலகைக் குலுக்கிய மாபெரும் தொழிலாளி வர்க்க பண்பாட்டுப் புரட்சி யும், நக்சல்பாரி உழவர் எழுச்சியும் திருத்தல்வாத முகாம், பொதுவுடைமைப் புரட்சியாளர் முகாம் என இந்தியாவில் துல்லியமாக எல்லை வகுத்தது.

ஆனால் தோழர் ஸ்டாலின் மறைவுக்குப் பின்னால், கட்சியையும் அரசையும் கைபற்றிய துரோகி குருச் சேவால் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்திற்குப் பதிலாக பூர்சுவா சர்வாதிகாரம் இடம் மாற்றப்பட்டது. மாபெரும் தலைவர்கள் லெனின், ஸ்டாலின் ஆகியோர் தலைமையில் உருவாக்கப்பட்ட முதல் சோசலிச தந்தை நாடு நொறுங்கியது.(தகர்ந்தது)

தோழர் மாவோவின் மறைவுக்குப் பின்னர் உடனடியாக நான்கு புரட்சிகரமான தோழர்கள் நால்வர் கும்பல் என அறிவிக்கப்பட்டனர். எதிர்ப்புரட்சி கலகத்தால் டெங்-குவா கும்பல், சோசலிச சீனாவின் தோற்றத்தை மாற்றி, சீனாவிலும் தொழிலாளி வர்க்க சர்வாதிகாரம் இருந்த இடத்தில் பூர்சுவா சர்வாதி காரத்தை உருவாக்கியது. மாபெரும் தோழர் மாவோ வின் தலைமையில் சீனப் பொதுவுடைமைக் கட்சி உருவாக்கிய வலிமையான சோசலிசக் கோட்டை இவ்வாறு வீழ்ந்தது. தற்போதைய இன்றைய உலகில் ஒரு நாடு கூட சோசலிசத்தை ஒரு சமூக அமைப்பாகக் கொண்டிருக்கவில்லை. சோசலிசம் மற்றும் தொழிலாளர் வர்க்கத்தின் தோல்விக்கும் (தற்காலிகமானால் கூட) பின்னால் இருக்கும் அடிப்படைக் காரணம் கட்சி யையும், அரசதிகாரத்தையும் கைபற்றி முதலாளியத்தை மீண்டும் உருவாக்கிய திருத்தல்வாத வேடதாரிகளும் கட்சிக்குள் இருந்த எதிர்ப்புரட்சி சக்திகளுமேயா வார்கள்.

இந்த எதிர்மறை நிகழ்வுகளால் சர்வதேசப் பொது வுடைமை இயக்கத்தில் திருத்தல்வாதம், திருத்தல்வாதச் சிந்தனை முறையியல் மற்றும் நடைமுறை மீண்டும் ஒருமுறை தலைதூக்கும் வாய்ப்பைப் பெற்றன. குறிப்பாக டெங் கும்பல் சோசலிசச் சீனாவின் நிறத்தை

மாற்றிய பின்னர் சர்வதேசப் பொதுவுடைமை இயக்கம் இன்னொரு வகையான பிளவையும் பின்னடைவையும் சந்திக்க நேரிட்டது.

சர்வதேச பொதுவுடைமை இயக்கத்தின் இந்தப் பின்னடைவு, திருத்தல்வாதம் தனியான (முழுமையான) ஒன்றல்ல என்பதை மறுபடியும் ஒரு முறை உறுதி செய்தது. ஆனால் இயக்கவியல் பொருள் முதல்வாதப் பார்வையில் பார்க்கும்போது இது ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய விசயமாகியது. இம்மாதிரியான இயக்கவியல் பொருள்முதல்வாத விதிகளின் மீது உறுதியான நம்பிக்கை வைத்து தற்காலப் புறச் சூழல்களுக்கேற்றவாறு நடைமுறையைக் கடைபிடித்து, ஆயுதந் தாங்கிய போராட்டம் தொடர்ந்த நீண்டகால மக்கள் யுத்தம் ஆகியவற்றோடு நிலையான உறுதியோடு, தொழிலாளர் உழவரோடு முழு நம்பிக்கையும் கொண்டு உழைக்கும் பகுதி மக்களை ஒவ்வொரு பணியிலும் ஈடுபடுத்தும் போது மட்டுமே இந்தப் பின்னடைவை முன்னேற்றமாக மாற்ற முடியும். அதன் காரணமாகவே திருத்தல்வாதத்தின் உச்சபட்ச பரவலை அடித்து பின்னுக்குத் தள்ளி மீண்டும் ஒரு முறை மார்க்சியத்தை எப்போதும் வலிமையானதாக நாம் செய்ய முடியும்.

உலகிலுள்ள எல்லாப் பொருள்களும் இரண்டு எதிர்நிலைகளின் ஒற்றுமை எனும் விதிப்படி நிலவுவதில் (இருப்பதில்) போராட்டம் நிலையானதாகவும் தனியானதாகவும் சார்புடையதாகவும் உள்ளது. ஆக கெட்டதை நல்லதாக, அனுகூலமற்றதை அணுகூலமாக மாற்றும் எல்லாம் போராட்டத்தின் மூலம் சாத்தியமே.

திருத்தல்வாதம் முதன்மை அபாயம் என்பதைப் பலர் வார்த்தை அளவில் ஒப்புக் கொள்கிறார்கள். ஆனால் நடைமுறையில் கடைப்பிடிப்பதில் தோல்வியடைகிறார்கள். திருத்தல்வாதம் என்பது முதன்மையான அபாயம் என்பது நடைமுறையில் திருத்தல்வாத முறையியலுக்கும் நடைமுறைச் செயல்பாடுகளுக்கும் இடையில் ஒரு எல்லைக்கோட்டை உருவாக்க வேண்டிய தேவையை ஏற்படுத்தியது. இதை நாம் செய்யாதுபோனால், அதன் விளைவு திருத்தல்வாதத்தை எதிர்த்த போராட்டம் முடிவு பெறாமலேயிருக்கும். ஆகையால் திருத்தல்வாதத்திற்கு எதிரான போராட்டம் வேண்டுவது ஆரம்பத்திலிருந்து முடிவுவரை ஆழமான தயக்கமற்ற நடைமுறையைச் சொல்லிலும் செயலிலும் ஏற்றுக்கொள்வதே. என்ன காரணத்திற்காகத் திருத்தல்வாதத்திற்கு எதிரான போராட்டத்தை பலவீனப்படுத்தினாலும், அது திருத்தல்வாதத்தை நீடிக்கச் செய்ய உதவுவதாக அர்த்தப்படும்.

திருத்தல்வாதம் சாதாரணமாக ஒரே வடிவில் நிலையாக இருக்காது. அடிக்கடி தன் வடிவத்தை மாற்றிக் கொள்ளும் பச்சோந்தியைப் போல திருத்தல்வாதம் தனது நிலைபாடுகளை அடிக்கடி மாற்றிக் கொள்ளும். தற்போதைய திருத்தல்வாதம் லெனின், ஸ்டாலின் காலத்தில் காட்சிக்கு வந்த திருத்தல்வாதத்தை விட முற்றிலும் வேறுபட்டது. எதிர் காலத்தில் அது இன்னும் வேறுபட்ட பல வடிவங்களில் தோன்றும். செங்கொடியைச் செங்கொடி அசைத்தே எதிர்ப்பதும், புரட்சியைப் புரட்சியின் பெயராலேயே எதிர்ப்பதும், மார்க்சிய லெனினியத்தை மார்க்சிய லெனினியத்தின் பெயராலேயே எதிர்ப்பதும், மாவோ சிந்தனைகளை மாவோவின் சிந்தனைகளின் பெயராலேயே எதிர்ப்பதும் ஆகியவை நிலவுகிற திருத்தல்வாதத்தின் வடிவங்களாகும். இதை நவீன, தீவிர திருத்தல்வாதம் எனச் சொல்லலாம்.

சர்வதேச நிலைமைகள் குறித்து முரண்பட்ட பகுப்பீடுகளைக் கொடுத்தும், புரட்சிக்கான தருணம் இதுவல்ல எனத் தாழ்வான பகுப்பீட்டைக் கொடுத்தும் மாவோவியத்தின் வரலாறு, சர்வதேச முக்கியத்துவத்தையும் நிராகரித்து, அதிகார நிலைகள் - உறுதிபடுத்தப்பட்ட பகுப்பீடுகள். புதிய நிலைகள் ஆகியவற்றை கேள்விக்கு உள்ளாக்குகிறது. ஆயுதந்தாங்கிய போராட்டத்துக்கு இது சரியான தருணமல்ல என ஆய்வு செய்வதும், பாராளுமன்றப் பாதையைக் கடைப்பிடிப்பதும், சூழ்ச்சியான முறையில் முன்னெடுத்துச் செல்வதும் நவீன தீவிரத் திருத்தல்வாதத்தின் பண்புகளாகும்.

இந்தியாவிலும் கூட தெலுங்கானா இயக்கத் துரோகிகளும், ஒன்றுபட்டிருந்த பொதுவுடைமைக் கட்சித் தலைவர்களும் நெடுங்காலமாக ஆயுதம் தாங்கிய போராட்டத்தைக் கைவிட்டு பாராளுமன்றப் பாதையைக் கடைப்பிடித்தார்கள். அதன் பின்னர் திருத்தல்வாதிகளின் ஒரே நோக்கம் பாராளுமன்றப் பாதையைப் புகழ்வதற்காகத் தேர்தல்களில் பங்கெடுத்து, தங்களது சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களையும் அமைச்சர்களையும் எல்லா வழிகளிலும் புரட்சியை எதிர்த்து ஆளும் வர்க்கத்துக்கும், சுரண்டல் பேர்வழிகளுக்கும் சேவை செய்வதாகும். 1967- ல் வெடித்துக் கிளம்பிய நக்சல்பாரி உழவர் கிளர்ச்சிக்குப் பின்னர், அதை அடக்க இந்திய மார்க்சியப் பொதுவுடைமைக் கட்சித் தலைவர்கள் அவ்வியக்கத்தின் மீது கட்டவிழ்த்துவிட்ட அடக்குமுறைகள் அவர்களின் எதிர்ப்புரட்சிக் குணத்தை வெளிச்சம் போட்டுக் காட்டியது. இந்தப் புதிய திருத்தல்வாத (சி.பி.ஐ.எம்.) துரோகிகளுக்கும், புரட்சிகர முகாமுக்குமான துல்லியமான எல்லைக்கோடு இதுதான். தற்போதைய திருத்தல்வாதம், ஏகாதிபத்தியம் போற்றும் வகையில், கடந்த 30 ஆண்டுகளாக மேற்கு வங்கத்தில் திருத்தல்வாதிகளின் தலைவரான சி.பி.ஐ.எம். தலைமையில் நடக்கும் இடது கூட்டணி பயங்கர ஆட்சி எல்லா விதமான ஜனநாயக புரட்சிகர சக்திகளையும் நசுக்குகிறது. தனது சமூக பாசிச முறைகளால் நசுக்கி, நிலமானியத் தரகு முதலாளிகளின் நம்பிக்கையான முகவராகச் செயல்படுகிறது. கடந்த 30 ஆண்டுகளாக அரசதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தி, தமதியக்கத்தை வலிமையான சமூக பாசிசச் சக்தியாக உருவாக்க

மார்க்சியப் போர்வையில் கைகளில் செங்கொடி ஏந்தி எதிர்ப்புரட்சி சக்திகளைத் திரட்டும் பணியைச் செய்கிறார்கள். பல மாநிலங்களில் ஜனநாயகப் புரட்சிகரப் போராட்டங்களை சி.பி.ஐ.எம்.-ன் பாசிசத் தாக்குதலை எதிர்த்துப் போராடாமல் நடத்த முடியாத நிலை எழுந்துள்ளது.

தோழர் சாருவின் வீரமரணத்திற்குப் பின்னர் 1972-ல் இடது பாதையைச் சரி செய்கிறோம் எனும் பேரால் சத்யநாராயணசிங் போன்றவர்கள் தேர்தலில் பங்கெடுக்கத் தொடங்கி வலது பாதையைக் கடைப் பிடித்தார்கள். தவிர, மாவோ சிந்தனையைப் போலியாகப் பின்பற்றும் சி.பி.ஐ. - எம்.எல்.(லிபரேசன்) மற்றும் ஒரு மா.லெ.கட்சி கனுசன்யால் தலைமையில், நீண்ட காலமாக ஆயுதப்போராட்டப் பாதையில் இருந்து பிரிந்து, பாராளுமன்றப் பாதையைத் தழுவி, நிலவுகிற மோசடித் தேர்தல் விளையாட்டுக்களில் மூழ்கி, பாராளுமன்றம், சட்டமன்றம், ஊராட்சி மன்றத் தேர்தல்களில் இரண்டு அல்லது மூன்று இருக்கைகளைத் தங்கள் சரணடைவுக்குப் பரிசாகப் பெறுகிறார்கள். வர்க்கப் போராட்டக் களத்தில் எதிர்ப்புரட்சிப் பாத்திரம் வகிக்க, நயவஞ்சகமான பிரச்சார வழி முறைகளை புரட்சிகரப் போராட்டத்திற்கு எதிராகப் பயன்படுத்தி, புரட்சிகர ஊழியர்களைத் தளைப் படுத்தவும், லிபரேசன் கட்சியின் தவறான செயல் களுக்கு முன்மாதிரி எனலாம். சுரண்டும் ஆட்சியாளர் களுக்கு இந்தத் தெளிவில்லாத கனுசன்யால் வழி பாட்டுக் குரியவரானார். மாவோவியக் கட்சிக்கு எதிராக, மத்திய மாநில அரசுகளின் காவல்துறை களோடு இணைந்து ஆயிரக்கணக்கான அறிக்கைகளை, வன்முறை மக்களுக்குப் பயன்படாது என்றும், இம் மாதிரியான வழிமுறைகளில் புரட்சி நடைபெறாது என்றும் அச்சடித்து விநியோகித்துக் கொண்டிருந்தார். பீகாரிலும், ஜார்கண்டிலும் காவல்துறை நிர்வாகம் விநியோகித்த அறிக்கைகள் நடைமுறை உதாரணங் களாகும். அடுத்ததாக இம்மாதிரியான திருத்தல்வாதி களால், அவிழ்த்து விடப்படும் ஆயுதத் தாக்குதலை எதிர்த்துப் போராடாமல், புரட்சிகர இயக்கங்களை முன்னெடுத்துச் செல்ல முடியாது. உலகு தழுவிய புரட்சிகர வரலாறு அதே பாடத்தைக் கற்பிக்கிறது.

தொழிலாளி வர்க்க இயக்கம் தோன்றியவுடன், கொள்கை அளவிலும், சித்தாந்த ரீதியாகவும், பூர்சு வாக்கள் சலுகை காட்டி, உழைப்பாளிகளை இழிவு படுத்தி, நாட்டு மக்களின் புரட்சிகரப் போராட்டங் களைப் பலவீனப்படுத்தியும், திசை திருப்பியும் தொழிலாளி வர்க்க இயக்கத்தை பூர்சுவா வர்க்கத்தின் நலன்களுக்கு ஏற்றவாறு இருக்க வைத்துள்ளார்கள். இந்தப் புறச்சூழலுடன், பூர்சுவா சித்தாந்தப்போக்கு வேறுபட்ட வடிவங்களை வேறுபட்ட காலங்களில் தழுவியது. சில சமயங்களில் அது வலதுசாரிகளாகவும், சில சமயங்களில் இடது மீறலாகவும் இருந்தது. வரலாற்று வளர்ச்சி, மார்க்சிய, லெனினிய, மாவோ வியத் தோற்றம் ஆகியவை இத்தகைய பூர்சுவா சித்தாந் தங்களுக்கு எதிர்வினையாக, அது வலதுசாரிப் போக் கானாலும், இடதுசாரிப் போக்கானாலும் துல்லியமான போராட்டமாக அமைந்தது. இந்த பூர்சுவா சித்தாந்த போக்குப் பயந்து ஓடாமல் மார்க்ஸ், ஏங்கெல்ஸ், லெனின், ஸ்டாலின், மாவோ போன்ற மாபெரும் தோழர்களின் வழிகளைப் பின்பற்றுவது உண்மையான மார்க்சிய லெனினிய மாவோ வியத்தின் கடமையாகும். அதாவது எப்போதெல்லாம் கொள்கை, அடிப்படை வழி, கோட்பாடு ஆகியன பூர்சுவா சிந்தாந்தத்தாலும் திருத்தல்வாத சித்தாந்தத்தாலும் தாக்கப்படுகிறதோ அப்போதெல்லாம் இந்தத் தாக்குதலை முறியடித்து நிர்மூலமாக்கி, ஒடுக்கப்பட்ட வர்க்கமும் சாதியும், தொழிலாளி வர்க்கமும் நடத்துகிற போராட்டங் களுக்கு வெற்றிப்பாதையை உறுதிப்படுத்தியாக வேண்டும். மார்க்சியத்துக்கும் திருத்தல் வாதத்துக்கும் இடையிலான இந்த நீண்ட போராட்ட வரலாறு நமக்குச் சில போலிப் பொதுவுடைமைக் கட்சிகள் முழுமையாகத் திருத்தல்வாதக் கட்சிகளாக சாராம்சத் திலும் வடிவத்திலும் உருவாகியதைக் காட்டுகிறது. எடுத்துக்காட்டாக, புகழ்பெற்ற இத்தாலி, பிரான்ஸ் போன்ற ஐரோப்பியக் கட்சிகளையும், இந்தியாவில் சி.பி.எம்., சி.பி.ஐ. யையும் சொல்லலாம். சில கட்சிகள் ஏற்கனவே சமூகப் பாசிச சக்திகளாக வீழ்ச்சி அடைந் தும், சில கட்சிகள் அவற்றின் திருத்தல்வாத வழி யையும், செயல் முறைகளையும் கடுமையாக வலியுறுத் தியும் சில கட்சிகள் எங்கோ இடையில் ஊசலாடியும் வருகின்றன.

ஆனால் மெய்யான பொதுவுடைமைக் கட்சியிலும் கூட மார்க்சியத்திற்கு எதிரான சிந்தனைகள் திருத்தலிய வடிவிலும் பூர்சுவா, குட்டி முதலாளியப்போக்கு களிலும் நிலவுகின்றன. நமது கட்சியிலும் திருத்தலிய இருப்பைப் பார்க்க முடியும். முதன்மை வடிவத்தில் அது இல்லாதபோதிலும், திருத்தலியத்தின் கொள்கை களும் பூர்சுவா, குட்டி முதலாளியச் சிந்தனைகளும் நிலவுகிறது. குறிப்பாக இது பொருளாதார வெளிப் பாட்டாலும், சக்தி வாய்ந்த பொருளாதாரம், சட்ட வியல், தன்னியல்பு ஆகியன நம்மிடமும் நமது கட்சியிலும் உள்ளது. இவைகளுடன் குறுகியவாத வெளிப்பாடும், அகநிலையும், வறட்டுத் தத்துவமும் நம்மிடமும் இருந்தன. நம்மிடையே பெருந்தன்மையும் நாகரீகமும் போதாமையை நாம் கவனிக்கிறோம். இவைகளோடு, புதிதாக அமைக்கப்பட்ட கட்சியில், நம்மிடையே தனிநபரியம், அதிகார வர்க்கப் போக்கு கள், ஆணவம் ஆகியன உள்ளன. இவைகள் புதிதாக அமைக்கப்பட்ட கட்சியின் ஒற்றுமைக்கும் வலிமைக் கும் இடையூறாகும்.

உண்மையில் நம்மிடம் - மார்க்சியமும் லெனி னியமும் உள்ளது. நாம் திருத்தலியம் என்று சொல்லும் போது அது வலது சந்தர்ப்பவாதம், இடது விலகல் என

கட்சியில் நிலவும் இரு வடிவங்களையும் அர்த்தப்படுத்தும் (குறிக்கும்) மார்க்சியம் முதன்மையான கொள்கையாக இருந்தபோதிலும், திருத்தலியத்தின் வெளிப்பாடுகள் வடிவத்தில் இரண்டாம் அம்சமாக நிலவுகிறது. ஆகையால் ஒரு புறம் நாம் உண்மையான வர்க்கப் போராட்டத்திலும், வர்க்க யுத்தத்திலும் பங்கெடுத்து நம்மை உருக்குப் போல வலிமைப்படுத்த வேண்டியுள்ள அதேசமயம் இன்னொரு புறம் நம்மிடையே நிலவுகிற திருத்தலிய வெளிப்பாடுகளுக்கெதிராக தொடர்ச்சியாகப் போரட்டத்தை நடத்த வேண்டியது அவசியமாகிறது. இந்நிலை குறுகிய, குறிப்பிட்ட எல்லைக்குட்பட்ட காலத்துக்கு மட்டும் தேவையானதல்ல. ஆனால் தொடர்ந்து நீடிக்கும் நிலையாகும்.

தோழர் லெனின் சொன்ன, "அரசதிகாரம் எனும் கேள்வி எல்லாப் புரட்சிக்கும் அடிப்படை யாகும்" என்ற வார்த்தைகளில் நாம் நம்பிக்கை யோடிருக்க வேண்டும். "வர்க்கப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை ஸ்தாபிப்பதும் (நிலை நிறுத்துவதும்) நமது கடமையாகும். ஆயுதந் தாங்கிய போராட்டத்தில் அரசதிகாரத்தைக் கைப்பற்றுவதும், பிரச்சனைகளை யுத்தம் மூலம் தீர்ப்பதும் உயர்ந்தபட்சப் புரட்சியின் வடிவங்களாகும்" எனும் மாவோவின் வார்த்தைகளில் நாம் உறுதியாக நிற்க வேண்டும்.

இதோடு நாம் மார்க்சியத்தை நடைமுறை உண்மைகளோடு வெளிப்படையாகவும், களங்கமின்றியும் செயல்படுத்த வேண்டும். திருத்தல்வாதத்தை அல்ல. நமது புரட்சிகர நடைமுறை வாழ்க்கையில் சதி செய்யவோ, பிளவை ஏற்படுத்தாமல் ஒற்றுமையை ஏற்படுத்த வேண்டும்.

நமது கட்சியைத் தோற்றுவித்தவர்களும், ஆசான்களுமான தோழர்கள் C.M., மற்றும் K.C, CPI, CPM -ன் திருத்தல்வாதத்திற்கு எதிராக சமரசம் செய்து கொள்ளாமல் போராடினார்கள். தவிர திருத்தலியத்திற்கு இடையிலான எல்லைக் கோட்டை வகுத்து, தோழர் மாவோ வழிகாட்டியபடி மக்கள் யுத்தப் பாதையை நிலைநாட்டி நீட்டிக்கவும் செய்தார்கள். இந்தப் போராட்டத்தின் தொடர்ச்சியாகவும், நடைமுறையின் பிரதிபலிப்பாகவும் தோழர் தலைமையில் ஏற்பட்ட நக்சல்பாரி உழவர் புரட்சி, திருத்தல்வாதத்திற்கு எதிரான போரில் வசந்தத்தின் இடிமுழக்கமாக அமைந்தது. திருத்தியலியத்திற்கு எதிரான சமரசமற்ற போராட்டம் எவ்வளவு முன்னேறியது - எவ்வாறு தகர்ந்தது என்பதையும் நாம் தோழர்கள் C.M மற்றும் K.C. ஆகியயோரின் சோதனைகளிலிருந்து தெரிந்து கொள்வதோடு நாம் அவர்களது சோதனைகளைப் பின்பற்ற வேண்டும்.

நாம் மார்க்சிய, லெனினிய, மாவோவிய கொள்கையோடு உறுதியாக நிற்போம். புரட்சிகர வர்க்கப் போராட்டத்திலும், நடைபெறுகின்ற விவசாயக் கெரில்லா யுத்தத்திலும் ஊக்கமுடன் பங்குபெறுவோம். மக்கள் யுத்தச் சக்திகளைக் கட்டுவதையும் விரைவுபடுத்துவோம். வார்த்தைகளிலும், செயல்களிலும் திருத்தலியத்தையும், அதன் நிலையான கொள்கைகளையும் எதிர்த்துப் போராடுவோம். திருத்தலியத்தை எதிர்த்துப் போராடாமல் புரட்சியை நோக்கி ஓரடிகூட எடுத்து வைக்க முடியாது என்பதை நினைவில் வைப்போம். ★

(35ஆம் பக்கத்தின் தொடர்ச்சி)

மேலும், அருவமான முறையில் அனைத்தும் தழுவிய ஜனநாயகம் என்ற ஒன்று இருக்க முடியாது. அது நெருக்கடி காலகட்டங்களில் வெளிப்படையாகப் பாசிச வடிவம் எடுக்கின்ற முதலாளித்துவ/ ஏகாதிபத்திய அமைப்பின் கீழுள்ள ஜனநாயமாக இருக்கிறது; அல்லது அது புதிய ஜனநாயக சோசலிச அமைப்பின் கீழ் (அனைத்து நிறைகுறைகளுடன் சேர்ந்து) பாட்டாளி வர்க்க ஜனநாயகமாக இருக்கிறது. ஜனநாயகத்திற்கு - கூட அதனுடைய வர்க்க தர்க்கம் இருக்கிறது. ஏகாதிபத்தியத்தின் விதிகள் சுதந்திரத்தைக் கோராமல் ஆதிக்கத்தைக் கோருவதால் முதலாளித்துவ ஜனநாயகத்தின் அலங்கார ஆடைகள் கூட குறுக்கப்படுகின்றன. பாட்டாளி வர்க்க ஜனநாயகம் என்ற தளத்தில், குறிப்பாக சீனாவின் மாபெரும் கலாச்சாரப் புரட்சியின் அனுபவங்களிலிருந்தும், தர்ச்சாய் மற்றும் தர்ச்சிஸ் அனுபவங்களிலிருந்தும், பல்வேறு நடைமுறைச் சோதனைகளும், மாபெரும் முன்னேற்றமும் நடைபெற்றிருக்கின்றன. இங்கு, ஜனநாயகத்துடன் மிகப் பெரிய அளவிலான நடைமுறைச் சோதனைகள் நடத்தப்பட்டன. ஆனால் அவை வர்க்கப் போராட்டத்தை முக்கியமான பிணைப்பாக எப்போதும் கொண்டிருந்தது. இது மேலும் வளர்க்கப்பட வேண்டும். (சீனாவில் ஏற்பட்ட பின்னடைவு உணர்த்துவது போன்று) என்பதில் ஐயமில்லை. ஆனால் இதற்கு உற்பத்தியின் அளவிலேயே அதிகரிக்கப்பட்ட ஜனநாயகப்படுத்தும், பாட்டாளி வர்க்க உணர்வுகளை மக்களின் மத்தியில் அதிகரிக்க வேண்டியிருப்பதும், மற்றும் சில இதர கூறுகளும் கூட கணக்கிலெடுப்பதும் தேவையாகிறது. இருப்பினும், இதற்குக் குழப்பம் மிகுந்த முதலாளித்துவ தேர்தல் இயந்திரத்தைப் பயன்படுத்த வேண்டிய தேவை எதுவும் இல்லை என்பது உறுதி.

வர்க்கப் போராட்டம் மற்றும் வர்க்க முரண்பாடுகளின் தர்க்கம் ஆகியவை சமூக அமைப்பில் எந்தவொரு மூன்றாவது வடிவமும் இருக்க முடியாது என்பதைக் காட்டுகிறது. ஒன்று, அது முதலாளித்துவ / ஏகாதிபத்திய அமைப்பிலிருந்து வர வேண்டும்; அல்லது அது புதிய ஜனநாயக/ சோசலிச அமைப்பின் கீழ் அமைய வேண்டும்.

நமது நல்லெண்ணங்கள் எத்தகையதாக இருப்பினும், வர்க்க யதார்த்தம் எந்தவொரு மூன்றாவது மாற்றையும் அனுமதிக்காது. புரட்சியைப் புதுமையாகவும், தீர்க்கமாகவும் முன்னேற்றிக் கொண்டிருக்கும்போதே, வரலாற்றிலிருந்து பாடங்கள் கற்பது அவசியமானதாக இருக்கிறது. இதனோடு சேர்த்து, வர்க்கப் போராட்டத்தின் தர்க்கத்தை மறக்காமல் இருப்பது மிகவும் முக்கியமாகும். ❖

(2ஆம் பக்கத்தின் தொடர்ச்சி)

கொள்ள முடியாது. ஏனெனில், அரை நிலப்பிரபுத்துவ அமைப்பின் அடிப்படைக் கூறு என்பது உற்பத்தி உறவுகளில் (நிலவுடைமையை ஒட்டி) தான் இருக்கிறது. பாசிச ஆர்.எஸ்.எஸ். நொறுக்கப்பட வேண்டும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. ஆனால் சி.பி.எம். பாணியில் கடைபிடிக்கப்படும் மதவாத சக்திகளுக்கு எதிரான வெறும் ஓர் அம்ச எதிர்ப்பு காங்கிரசின் மடியில் கொண்டு போய் வைத்துவிடும் (விழுவதாகும்). அரை நிலப் பிரபுத்துவத்தை அதன் மேற்கட்டுமான வெளிப்பாடுகளின் மீது தாக்குதல்கள் தொடுப்பதால் மட்டுமே அழித்துவிட முடியாது; மாறாக அதன் அடித்தளத்திலும் தாக்குதல்கள் தொடுக்கப்பட வேண்டும் என்று வர்க்கப் போராட்டத்தின் தர்க்கம் கோருகிறது. எனவே, ஆர்.எஸ்.எஸ்., அரசர்கள், மன்னராட்சி தூக்கியெறியப்படலாம். ஆனால் அரை நிலப்பிரபுத்துவம் புதிய வடிவங்களில் தொடர்ந்து கொண்டேயிருக்கும். மேற்கு வங்கத்தில் சி.பி.எம்.கட்சி மேற்கொண்ட ஆபரேசன் பர்கா (நிலச்சீர்திருத்த நடவடிக்கை) சிற்சில மாற்றங்களைக் கொண்டு வந்ததெனினும், அரை நிலப்பிரபுத்துவம் புதிய வடிவங்களில் தொடர்ந்தது. ஆகவே, அடித்தளம், மேற் கட்டுமானம் ஆகிய இரண்டிலும் புரட்சிகர ஜனநாயக மாற்றத்தை ஏற்படுத்தாமல் பிற்போக்கு உற்பத்தி உறவுகளை மாற்றுவது சாத்தியமல்ல என்பதையே வர்க்கப் போராட்டத்தின் தர்க்கம் நமக்கு உணர்த்துகிறது.

அதுபோலத்தான் லெனினால் கண்டு பிடிக்கப்பட்ட ஏகாதிபத்தியத்தைக் கட்டுப்படுத்தும் சில விதிகளும். இன்று அவற்றின் வெளிப்பாடுகள் மாறியிருக்கலாம். ஆனால் ஏகாதிபத்தியச் சுரண்டல் மற்றும் ஆதிக்கம் ஆகியவற்றின் அடிப்படை விதிகள் இன்னமும் மாறாமல் இருக்கின்றன. ஏகாதிபத்திய யுகத்தில் வர்க்கப் போராட்டத்தின் தர்க்கம் என்பது நாட்டை விட்டு ஏகாதிபத்திய மூலதனம் வெளியேற்றப்பட வேண்டும் என்பதோடல்லாமல், அதனுடைய அடிவருடிகளிடமிருந்து அவர்களுடைய அரசியல், பொருளாதார பலம் ஆகிய இரண்டும் பறிக்கப்படவேண்டும் என்பதைக் கோருகிறது. அரைகுறை நடவடிக்கைகள் இதில் சாத்தியமில்லை. ஆகவேதான் அனைத்து ஏகாதிபத்திய எதிர்ப்பு வாய்ச்சவடால்களுக்கு அப்பால் சி.பி.எம். கட்சியினர் தாங்கள் ஆளும் மாநிலங்களில் அனைத்து ஏகாதிபத்திய கொள்கைகளையும் மிகவும்விசுவாசமாக நடைமுறைப்படுத்துகின்றனர். இயல்பாகவே, உலகத்தில் உள்ள எந்தவொரு நாட்டிலும், நிலவுகின்ற அமைப்பிற்குள் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ள முயற்சிக்கும் எவர் ஒருவருக்கும் இது தவிர்க்க முடியாததாக இருக்கிறது. ஒன்று, நீங்கள் ஏகாதிபத்தியக் கொள்கைகளின் பக்கம் இருக்கிறீர்களா; அல்லது அவற்றை எதிர்த்து போராடுகிறீர்களா என்பதே வர்க்கத்தின் தர்க்கம் கோருவதாகும். ஏகாதிபத்தியவாதிகள் எந்தவொரு சுதந்திர அமைப்பையும் அதற்குள் அமைதியான கூட்டு இருத்தலுக்கு அனுமதிக்க மாட்டார்கள்.

இதனை மேற்கு வங்கத்தில் சி.பி.எம். கொடூரமான முறையில் அறிமுகப்படுத்தியிருக்கும் ஏகாதிபத்தியத்தால் முன்மொழியப்பட்ட மிகவும் அப்பட்டமான கொள்கைகளின் வாயிலாக வெளிப்படையாகக் காணலாம். 1960-களிலும், 1990-களிலும் பல்வேறு தேசிய விடுதலை இயக்கங்கள் ஏகாதிபத்தியத்துடன் (அல்லது அப்போதைய சமூக ஏகாதிபத்தியத்துடன்) சமரசம் செய்து கொண்ட வரலாறும் இதைத்தான் காட்டுகிறது. நாம் இதனை இந்தோ-சீனாவிலும், பல்வேறு ஆப்பிரிக்க நாடுகளிலும், நிகரகுவாவிலும், எல்சால் வடோரிலும் பார்த்தோம். இந்தப் பட்டியல் முடிவில்லாதது.

ஆனால் நாம் அவ்வளவு தூரம் வரை செல்ல வேண்டியதில்லை. மேற்குவங்க மாநிலமே இதற்கு மிகச்சிறந்த உதாரணமாக விளங்குகிறது. கடந்த முப்பதாண்டு கால சி.பி.எம். ஆட்சியில் வறுமையின் அளவு மற்றெந்த மாநிலத்தில் இருப்பது போலவே மிகவும் மோசமாக மேற்கு வங்க மாநிலத்தில் நிலவுகிறது. வெறும் வறுமையின் குறியீடுகள் மட்டுமல்ல; சச்சார் கமிட்டி அறிக்கை கூறுவது போல் மேற்கு வங்கத்தில் முஸ்லீம்களின் நிலைமை மற்ற பெரும்பாலான மாநிலங்களை விட மிகவும் மோசமாக இருக்கிறது. மேலும், அண்மையில் வெளியிடப்பட்ட தேசிய புள்ளியியல் துறையின் அறிக்கை கூறுவதைப் போல கல்வித்துறையில் தலித்துகள் மற்றும் பழங்குடியினரின் நிலை, பெரும்பாலான மாநிலங்களைவிட மேற்கு வங்கத்தில் மிகவும் மோசமாக இருக்கிறது. மேற்கு வங்க அரசாங்கம் சிறப்பு பொருளாதார மண்டலம் போன்ற தேச விரோதத் திட்டங்கள் உள்ளிட்ட ஏகாதிபத்தியத்தால் முன்மொழியப்பட்ட கொள்கைகள் அனைத்தையும் மிகவும் மூர்க்கத் தனமாக நடைமுறைப் படுத்திக் கொண்டிருக்கிறது. மிகச்சிறந்த விவசாய நிலங்கள் பெரும் நிறுவனங்களுக்கு - சிங்கூர் பகுதியில் டாடாவுக்கும், கொல்கத்தாவின் புறநகர்ப் பகுதியில் இந்தோனேசியாவின் மாபியா சலீம் கும்பலுக்கும் தாரை வார்த்துக் கொடுப்பதற்காக கையகப்படுத்தப் படுகின்றன. பெருந்தொகையிலான ஜப்பானிய மூலதனம் அனைத்து விதமான சலுகைகளுடன் மேற்கு வங்கத்திற்குள் வந்து கொண்டிருக்கிறது. இது மட்டுமல்லாது சி.பி.எம். கட்சி மற்றெந்த பிற்போக்கு கட்சியைப் போலவே (அல்லது அவற்றைவிட மேலாக) மாவோயிஸ்ட் புரட்சியாளர்களுக்கு எதிரான அடக்குமுறையை ஏவி வருகிறது. ஆனால், இயல்பாகவே இது தவிர்க்க முடியாததாகும். ஏனெனில் ஒன்று, ஒட்டுமொத்த பொருளாதாரமும் தொடர்ச்சியாக இயங்கும் பொருட்டு மறுவார்ப்பு (தீவிரமான நிலச்சீர்திருத்தங்களை மேற்கொள்வதன் மூலமாக உள்ளூர் சந்தையை உருவாக்குவது- மற்றும் ஏகாதிபத்திய/ தரகு அதிகார வர்க்க முதலாளித்துவ சுரண்டலைத் தடுத்து மூலதனத்தை உருவாக்குவது) செய்யப்பட வேண்டும். அல்லது, அது ஏகாதிபத்திய/ தரகு அதிகாரவர்க்க முதலாளித் துவத்தின் சூழலுக்குள் இழுக்கப்பட்டே தீரும்.

(தொடர்ச்சி - பக்கம் 34)

தனிச்சுற்றுக்கு மட்டும்

தோழர் விகாசுக்கு செவ்வணக்கங்கள்!!

தோழர் விகாஸ் சத்திஸ்கர் கன்கார் பிரதேசத்தில் கைது செய்யப்பட்டு 2006 செப்டம்பர் 17-ம் தேதி எதிர்த்தாக்குதல் என்ற பெயரில் சுட்டுக்கொல்லப்பட்டு உயிர்த்தியாகம் புரிந்தார். தோழர் விகாஸைக் கொல்வதற்காக மகாராஷ்டிராவின் கட்ச்ரோலி மற்றும் பஸ்தார் பகுதிகளில் இருந்து நூற்றுக்கணக்கான காவலர்கள் வந்திருந்தார்கள். 1990களில் கடுமையான அடக்குமுறைக் காலத்தில் கட்ச்ரோலி இயக்கத்தைக் கட்டியெழுப்புவதில் முன்னவராகத் திகழ்ந்தார். இந்தியப் பொதுவுடமைக் கட்சி (மார்க்சிய லெனினியம்) (மக்கள் யுத்தக் குழு) என செயல்பட்டுக் கொண்டிருந்த காலத்தில் கொரில்லாப் போர்ச் சக்திகளின் மீது மட்டுமல்லாது வெகுமக்கள் பாலும் அரசின் ஈவிரக்கமற்ற தாக்குதலை எதிர்கொண்டு தோழர் விகாஸ் கட்சியை முன்னெடுத்துச் சென்றார். மக்களை அச்சுறுத்தல் என்னும் அரசின் மிக மோசமான நடைமுறைகளால் மக்கள் எதிர்கொண்ட பெரும் துயரங்களுக்கு மத்தியிலும் கட்சிக்குழு அவரால் வழிநடத்தப்பட்டது. அப்பகுதி மக்களோடு நெருக்கமான பிணைப்பைப் பேணுவதிலும், அவர்களுக்கு ஊக்கத்தையும் உற்சாகத்தையும் அளித்தும், கட்சியையும், இராணுவத்தையும் திரும்பக் கட்டியமைத்தார். அவருடைய இழப்பு புரட்சிகர சக்திகளுக்கு மட்டுமின்றி தண்டகாரண்யம் மற்றும் இந்த நாட்டுக்கே பெரும் பின்னடைவாகும். ஆனாலும் அவரின் இந்த தியாகம் அவரை நெருக்கமாக நேசிக்கும் ஆயிரக்கணக்கான கொழுந்து விட்டு எரியும் நெருப்பாகப் பற்றிக் கொள்ளவும், எழுச்சிகொண்டு அவருடைய அடிச்சுவட்டைப் பின் பற்றவும் காரணமாக இருக்கிறது. சிவண்ணா என்றழைக்கப்படும் தோழர் விகாஸ் இருபது ஆண்டுகளுக்கும் மேலாக புரட்சிகர இயக்கத்தோடு செயல்பட்டுக் கொண்டிருந்தார். மிகச்சிறிய வயதிலேயே, 1985-ல் ஹைதராபாத் புரட்சிகர மாணவர் அணியில் தன்னை இணைத்துக் கொண்டார். மிகத் துரிதமாகவே கட்சியின் அழைப்புக்கு இணங்க தென் மகாராஷ்டிரா தண்டகாரண்யம் பிரதேசத்தில் பின்தங்கிய மலைப்பகுதியின் அமைப்பாளராக மாற்றப்பட்டார். 1985-ல் இருந்து 1989 வரை சிரோன்சா, அஹேரி, எடப்பள்ளி பிரதேச அணிகளுடன் செயல்பட்டார். 1989-ல் அவர் பல்லார்ஷாவில் கைது செய்யப்பட்டார். 1991-ல் அவருடைய விடுதலையை முன்னிட்டு இராஜாதர்மராவ் (சட்டமன்ற உறுப்பினர்) கடத்தப்பட்டு தோழர் விகாஸின் விடுதலைக்கான பரிமாற்றக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. 1991-ல் சிறையிலிருந்து வெளிவந்த பின் 1994-வரை அஹேரி அணித் தலைவராகவும், கோட்டத் துணைக் கமிட்டி உறுப்பினராகவும் செயல்பட்டார். 1995-ல் கட்ச்ரோலி கோட்ட நிர்வாகத்திற்குத் தேர்வு செய்யப்பட்டார். 1996-ல் இருந்து 1998-வரை தண்டகாரண்யாவில் முதன்முதலில் அமைக்கப் பட்ட போர்ப்படைப் பகுதிக்குத் தளபதியாகத் திகழ்ந்தார். 2000-ல் கட்ச்ரோலி கோட்ட நிர்வாகச் செயலாளராகவும் தண்டகாரண்யா சிறப்பு மண்டலக் கமிட்டி உறுப்பினராகவும் (மாநில கமிட்டிக்கு நிகரானது) தேர்வு செய்யப்பட்டார்.

2002-ல் அவர் சிறப்பு மண்டலக் கமிட்டிக்குத் தேர்வு செய்யப்பட்ட விகாஸ் அவருடைய எளிமைக்காகவும், ஆற்றலுக்காகவும், தன்னலமற்ற தன்மைக்காகவும், அர்ப்பணிப்புக்காகவும் மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களின் விடிவுக்காகத் தன்னை முழுவதுமாக ஒப்புக் கொடுத்துவிட்ட செயல்பாட்டுக்காகவும் மக்களால் மிகவும் நேசிக்கப்பட்டார். அவர் ஒரு கொரில்லா வீரர் மற்றும் பொதுவுடைமையாளர் என முன் உதாரணம் சொல்லக்கூடியவராகத் திகழ்ந்தார்.

அவர் பிறப்பால் ஆந்திரப்பிரதேசத்தவராக இருப்பினும் மலைப்பகுதி மக்களோடு நெருக்கமாகத் தன்னைப் பிணைத்துக் கொண்டு அவர்களுடைய மொழியைச் சரளமாகப் பேசக் கூடியவராகவும், அவர்களைத் தன் சொந்தக் குடும்ப உறுப்பினர்கள் எனப் பரிவு காட்டுபவராகவும் விளங்கினார். இந்த நாட்டுப் புரட்சிகர சக்திகள் தோழர் விகாஸை எந்நாளும் நினைவில் கொள்வார்கள் என்பதற்கு மேலாக அவருடைய வாழ்க்கை வரலாறு புரட்சிகர சக்திகளின் எதிர்காலத் தலைமுறைகளுக்கு ஆற்றலை அளிக்கும் ஊற்றாகவும் திகழும்.

PEOPLE'S MARCH, January 2007

MAKKAL PERANI Tamil Translation of **PEOPLE'S MARCH,** January 2007

Owned, Edited, Printed & Published by P. Govindan Kuttty, Peroor house, Tripunithura, N.F. Ernakulam, Kerala - 628 301.

Printed at Chithira Printers, 63/321, Poruvelil, Kannachanthodu Road, Kochi - 18.